

கூடிய வெப்பநிலை 28 °c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.



பிரதமர் வேட்பாளர் அறிவிப்பில்பின்னடித்தது காங்கிரஸ் கட்சி பக். 6


விரைவு ரயிலில் வெடித்தது குண்டு பக். 7


கிண்ணம் சென். பற்றிக்ஸ் வசம் பக். 22


மீண்டும் வருவேன் பக். 23



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 28
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 053 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 05, சனி 18.01.2014


# போர்க்குற்ற ஆதாரங்கள் முற்றிலும் உண்மையே

## முடியுமானால் அவற்றைப் பொய் என்று நிரூபியுங்கள்
## சிங்களக் கடும்போக்கு அமைப்புகளுக்கு மன்னார் ஆயர் சவால்

யாழ்ப்பாணம், ஜன. 18
அமெரிக்கப் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப்பிடம் கையளிக்கப்பட்ட ஆதாரங்களை முடிந்தால் சிங்களக் கடும்போக்கு அமைப்புக்கள் பொய்யென்று நிரூபிக்கட்டும் என்று சவால் விடுத்துள்ள மன்னார் ஆயர், அவ்வாறு செய்த பின்னர் எங்களைக் கைது செய்வது தொடர்பில் சிந்திக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.
'நாங்கள் பொய் சொல்ல வேண்டிய எந்த அவசியமும் இல்லை' என்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலும் குறிப்பிட்டார்.

**ஆதாரங்கள் கையளிப்பு**

யாழ்ப்பாணத்துக்கு கடந்த 8 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள விசேட போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் வந்திருந்தார். இவருடன் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோர் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.
இறுதிக் கட்டப் போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் கொத்துக்குண்டுகள், இரசாயனக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு போர்க் குற்ற ஆதாரங்கள் இந்தச் சந்திப்பில் ஆயர்களால் ஸ்ரீபன் ராப்பிடம்



21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போன உறவுகள் குறித்த சாட்சியம் பதிவு இன்று முதல்

கிளிநொச்சி, ஜன.18
காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு இன்று சனிக்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பமாகின்றது.
இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பமாகும். இந்த அமர்வு தொடர்ந்து நான்கு தினங்கள் இடம்பெறவுள்ளது.
தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆஸியில் தமிழர் குத்திக் கொலை

கிளிநொச்சி, ஜன.18
கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
கடந்த வருடம் ஜூன் மாதம் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு சென்ற பளையைச் சொந்த இடமாகவும், கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெருமான் கேதீஸ்வரன் (வயது -35)

21 ஆம் பக்கம் பார்க்க

## உடன்பாட்டின் பின்னரும் மீனவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 18
இரு தரப்பு மீனவர்களையும் பரஸ்பரம் விடுவிக்கும் உடன்பாடு இலங்கை - இந்திய அரசுகளிடையே எட்டப்பட்டுள்ள பின்னரும் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 30 பேரின் தடுப்புக்காவல் ஜனவரி 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண வாக்காளர்கள் 45 ஆயிரத்தால் அதிகரிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 18*
*வடக்கு மாகாணப் புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் 45 ஆயிரம் பேரால் அதிகரித்துள்ளதாகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி 22 ஆயிரம் வாக்காளர்களாலும், வன்னித் தேர்தல் தொகுதி 23 ஆயிரம் வாக்காளர்களாலும் அதிகரித்துள்ளன.*

21 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட எப்போதுமே தயார்

### அரசு நேற்று தெரிவிப்பு

கொழும்பு, ஜன.18
மனித உரிமைகள் விவகாரங்களுக்குத் தீர்வுகாண்பதில் இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளமைக்கு தமது மகிழ்ச்சியை வெளியிட்ட அரசு, இதுவிடயத்தில் அமெரிக்காவுடன் இணைந்து செயற் பட இலங்கை தயாராக உள்ளது என்றும் தெரிவித்தது.
அதுமட்டுமன்றி, யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட எவர் முன்வருகின்றாரோ அவருடன் இணைந்து செயற்பட எப்போதுமே தயாராக உள்ளதாகவும் அரசு தெரி வித்தது.
மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் தீர்வு காண்பதில்இலங்கையுடன்இணைந்து செயற்பட அமெரிக்கா ஆர்வமாக இருக்கிறது என கடந்த புதன்கிழமை அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் திணைக்களத்தின் பிரதி ஊடகப் பேச்சாளர் மேரி ஹார்ப் தெரிவித்திருந்தார்.



21 ஆம் பக்கம் பார்க்க

## பாவனையற்ற வீடுகளை புனரமைக்கும் படையினர்

யாழ்ப்பாணம், ஜன. 18
வடமராட்சி கிழக்கில் மக்கள் பாவனையற்ற வீடுகள் சீருடையினரால் அவசர அவசரமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு மற்றும் அதற்கு அருகாமையிலுள்ள பகுதிகளில் கடற்கரையோரமாக உள்ள வீடுகள் மக்கள் பாவனையற்றுக் கைவிடப்பட்டனவாக உள்ளன. இவை சிறு சிறு சேதங்

21 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மனித புதைகுழியில் பெண்களின் ஆபரணங்கள்

### நேற்றும் ஒரு எலும்புக்கூடு மீட்பு

மன்னார், ஜன.18
மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து நேற்று முழுமையான எலும்புக்கூடு ஒன்றும், துண்டாக்கப்பட்ட மண்டையோட்டின் துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.
அத்துடன் குறித்த புதைகுழியிலிருந்து பெண்கள் கையில் அணியும் வளையல்கள் சிலவும் உடைந்த நிலையில் நேற்று மீட்கப்பட் டுள்ளன.
இதேவேளை, பெண்கள் கழுத்தில் அணியும் முத்து மாலையின் குண்டு மணிகள் சிலவும் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன என்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள விசேட நிபுணர் குழுவினர் தெரிவித்தனர்.
மன்னார் - திருக்கேதீஸ்வரம்

21 ஆம் பக்கம் பார்க்க




*முள்ளந்தண்டு வடம் பாதிப்படைந்தோருக்கான சுகாதாரப் பராமரிப்பு நிலையம் நேற்று வவுனியா பம்பைமடு ஆயுள்வேத மருத்துவமனை வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் முள்ளந்தண்டு வடம் பாதிப்படைந்து உறவினர்களால் பராமரிக்க முடியாதவர்களை வடக்கு மாகாண சபையினால் பராமரிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*
*'வைகறை' என்று நாமம் சூட்டப்பட்ட இந்தப் பராமரிப்பு நிலையத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார். (த-400-421)*

## மீனவர் பிரச்சினையை தீர்க்க உடன்படிக்கை

கொழும்பு, ஜன. 18
மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை-இந்திய அமைச்சர்களிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகக் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்று இரண்டாம் நாள்
Gold Sponsor
dimo TECHNOLOGY
(C/105623)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரதிநிதிகளை கைதுசெய்து நாட்டின் பெயரை நாசமாக்காதீர்கள்

## அரசுக்கு மனோ கணேசன் அறிவுரை

கொழும்பு, ஜன. 18
மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியைக் கைதுசெய்து புனர்வாழ்வு வழங்க வேண்டி வரும் என்று கூறி, சர்வதேசக் கண்டனத்துக்கு உள்ளாகி, மிச்சம் இருக்கும் நாட்டின் பெயரையும் நாசமாக்காதீர்கள். சொந்தக் காசில் சூனியம் வைக்க வேண்டாம் என்று இலங்கை அரசுக்கு, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
தெஹிவளை ஸ்டார்ட் ஒழுங்கை தோட்டத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-
பிரிவினை உணர்வுகளைத் தூண்டும் விதத்தில் பரப்புரை செய்தார் என்று குற்றஞ்சாட்டி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனைக் கைது செய்து புனர்வாழ்வு அளிக்கும் யோசனையை முன் வைத்த நபருக்கு அங்கொடை வைத்தியசாலையில் மனநோய் மருத்துவம் செய்விக்க வேண்டும்.

> “ அனந்தி சசிதரனைக் கைதுசெய்து புனர்வாழ்வு அளிக்கும் யோசனையை முன்வைத்த நபருக்கு அங்கொடை வைத்திய சாலையில் மனநோய் மருத்துவம் செய்விக்க வேண்டும்.

ஜனநாயக நடைமுறைகள் பற்றிய எந்தவித அறிவும் இல்லாத இராணுவ நபர்களை ஆலோசனை சொல்லப் பக்கத்தில் வைத்து கொண்டால் அவர்கள் இப்படித்தான் யோசனை சொல்வார்கள். இத்தகைய ஆலோசகர்கள் மூலமாகத்தான் அரசும், நாடும் சர்வதேச ஆபத்து சிக்கலில் தேடிப்போய் விழுகின்றன. இதைத் தான் சொந்தக் காசில் சூனியம் வைத்து கொள்வது என்பார்கள்.

**பிரிவினையை எதிர்க்கின்றோம்**
எமது கட்சி நாட்டுப் பிரிவினையை எதிர்க்கிறது. பிரிவினை உணர்வுகளை தூண்டும் விதத்தில் பரப்புரை செய்யப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம். ஆனால் யார் பிரிவினைவாதி என்ற கேள்வி இங்கே எழுகிறது.
காணாமற்போன தனது கணவனையும், மனைவியையும், பிள்ளைகளையும் தேடி அலைபவர்கள் பிரிவினை வாதிகள் அல்லர்.

**இவர்களே பிரிவினைவாதிகள்**
இந்த நாட்டில் மக்களை இன, மத ரீதியாகப் பிரித்துஆளநினைப்பவர்கள்தான் பிரிவினைவாதிகள் ஆவர். சகோதர மத மக்களின் வழிபாட்டு உரிமைகளை மறுப்பவர்கள்தான் பிரிவினைவாதிகள். இந்த நாட்டில் இந்துக் கோயில்களையும்,பள்ளி வாசல்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் உடைப்பவர்கள் யார்? ஒரு ஒழுங்கைக்குத் தமிழ்ப் பெயர் வைப்பதையும், இஸ்லாமியர்கள் தங்கள் உணவுப் பழக்கவழக்கங்களைக் கொண்டு நடத்துவதையும், கிறிஸ்தவர்கள் தங்கள் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துவதையும் தடுத்து நிறுத்துபவர்கள் யார்? இவர்கள் தான் உண்மையான பிரிவினைவாதிகள் ஆவர். இவர்களுக்குதான் இன்று புனர் வாழ்வு தேவைபடுகிறது.

**அரசுக்குள்ளேதான் புலிகள்**
முன்னாள் புலிகள் இயக்க நபர்கள் என்று பார்த்தாலும் கூட, அவர்களில் மிகப்பிரபலமானவர்கள் இன்று அரசுக்குள்ளேதான் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் புனர் வாழ்வுவழங்குங்கள். ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியைக் கைதுசெய்து புனர்வாழ்வு வழங்கவேண்டி வரும் என்று கூறி, சர்வதேசக் கண்டனத்துக்கு உள்ளாகி மிச்சம் இருக்கும் நாட்டின் பெயரையும் நாசமாக்காதீர்கள். இந்த உண்மையை நான் தமிழ் மொழியிலும் கூறுகிறேன். அதையே சிங்கள மொழியிலும் கூறுகிறேன். அதையே ஆங்கில மொழியிலும் கூறுகிறேன். இதை இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டும் அல்ல, நல்லெண்ணம் கொண்ட சிங்கள பௌத்த மக்களும் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (த-5)



## சிறுமிகள் துஷ்பிரயோகம்; தந்தை விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜன.18
பதின்ம வயதுடைய சிறுமிகளான இரண்டு பேரையும் மூன்று வருடங்களாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த குற்றச்சாட்டில் அந்தச் சிறுமிகளின் தந்தையைப் பொலிஸார் கைது செய்தனர். அவரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிலுள்ள ஒரு பிரதேசத்தில் இந்தச் சம்பவம் 2010ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வந்துள்ளது. இது தொடர்பாகப் பிரதேச சிறுவர் நன்னடத்தைப் பிரிவினருக்குத் தெரியவந்ததை அடுத்துக் கடந்த 10ஆம் திகதி அவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். அதன் அடிப்படையில் சிறுமிகளின் தந்தையார் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4-86)

## முறைகேடுகள் நடந்தால் முறையிடுக

2013 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு விரும்பிய பாடசாலைகளைப் பெற்றுக் கொள்வதில் முறைகேடுகள் நடந்திருந்தால் அது பற்றிய முறைப்பாடுகளை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (த-400)

## நிட்டம்புவ பஸ் விபத்தில் ஒருவர் சாவு; 68 பேர் படுகாயம்

கொழும்பு,ஜன 18
நிட்டம்புவ மற்றும் பஸ்யாலவுக்கு இடையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் தனியார் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 68 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் அறிவித்துள்ளது.
நிட்டம்புவையிலிருந்து மாதுரு ஓயா சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸும் குருநாகலிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. (த)


யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள தென்னிந்திய திரைப்படப் பாடலாசிரியர் யுகபாரதி மற்றும் தென்னிந்திய சின்னத்திரை இயக்குநர் விக்கிரமாதித்தன் ஆகியோர் 'உதயனு'க்கு நேற்று வருகை தந்தனர். (த-21)

## ரூபா 13 லட்சம் பெறுமதி வாய்ந்த பொருள்கள் கடந்த வாரம் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.18
யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் 13 இற்கும் மேற்பட்ட இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்களில் நகைகள் உட்பட 13 லட்சத்து 43 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ். முனீஸ்வரன் வீதியில் வைத்து அராலியைச் சேர்ந்த ஒருவரைத் தாக்கி 15 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக் கப்பட்டுள்ளது. சந்கேத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
யாழ். 5 ஆம் குறுக்குத் தெருவில் பட்டப்பகலில் வீடு புகுந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
யாழ். நீராவியடியிலும் வீடு உடைத்துப் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
உரும்பிராயில் இரவு வீடு உடைத்து 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அதே இடத்தில் 23 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 புறாக்கள் திருடப்பட்டுள்ளன. ஏழாலை தெற்கைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
நுணாவில் இராணுவ முகாமுக்கு அண்மையில் இருந்து சட்ட விரோதமாக 265 தண்டவாளங்களை ஏற்றிச் செல்ல முற்பட்ட யாழ். முஸ்லிம் வீதி மற்றும் கந்தளாயைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.
மானிப்பாயில் பட்டப்பகலில் வீடு புகுந்து 53 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டையைச்சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மானிப்பாயில் மற்றொரு வீடு உடைத்து 33 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
உடுவிலில் பட்டப்பகலில் வீடு உடைத்து 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் 3 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன. சந்கேத்தில் கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
சுன்னாகத்தில் வீடு புகுந்து பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சித்தன் கேணியில் வீடு புகுந்து 21 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
புங்குடுதீவில் வீடு புகுந்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் கைது செய்யப் பட்டவர் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.
காரைநகரில் 22 ஆயிரம் ரூபாவுடன் கூடிய கைப்பை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் கடை உடைத்து பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
இளவாலையில் சித்தி விநாயகர் கோயிலுக்குள் புகுந்து 2 லட்சத்து 92 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன. நெல்லியடி மாலு சந்தியை அண்மித்து வீடு புகுந்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன - என்று தெரிவித்தனர். (த-4)

## 'ஆவா' குழுவினருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18
யாழ். குடாநாட்டில் வாள்வெட்டுக் குழுவாக இயங்கிய குற்றச்சாட்டில் வாள்களுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 'ஆவா' என்ற குழுவைச் சேர்ந்த 12 பேருக்கும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.
யாழ். நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
வாள்வெட்டுக் குழுவாக இயங்கிய குற்றச்சாட்டில் 13 பேர்கொண்ட ஒரு குழுவினர் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். சில நாள்களின் பின்னர் மற்றொருவர் கைது செய்யப்பட்டார். இவர்களில் 2 பேர் இந்தக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்பு படாதவர்கள் என்று விடுவித்து ஏனைய 12 பேருக்கும் எதிராக வழக்குத் தொடர்ந்தனர் கோப்பாய் பொலிஸார்.
அவர்களில் 'ஆவா' என்று அழைக்கப்படும் இணுவில் மேற்கைச் சேர்ந்த குமரேசரட்ணம் வினோதன், திவாகரன், கொக்குவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த பற்குணராசா பவிலின் ஆகியோருக்கு எதிராக அத்துமீறி வீடு புகுந்து பொருள்களுக்குச் சேதம் விளைவித்தமை மற்றும் கைக் குண்டுகள் வைத்திருந்தமை தொடர்பான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.
உடுவில் வீதி மானிப்பாயைச் சேர்ந்த சிவகுமார் (வயது - 24), இணுவில் - மேற்கைச் சேர்ந்த தேவகாந்தன் ஆதித்தன் (வயது - 22), சுன்னாகம் மேற்கு குண்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா கைலாயம் (வயது -30), பிரசன்னா, தாவடி தெற்கைச் சேர்ந்த இராசையா கமலேஸ்வரன் (வயது - 24), இணுவில் கிழக்கைச் சேர்ந்த கனகலிங்கம் ஜேந்தன் (வயது - 31), இணுவில் தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் லதீசன் (வயது - 24), பிரகாஸ், ரதிகிருஷ்ணா ஆகியோர் வாள்கள் வைத்திருந்த குற்றச் சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
சந்தேக நபர்களில் கமலேஸ்வரன் நகர்தல் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுகடந்தவாரம்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
நேற்று விசாரணையின் போது இந்த வழக்கை ஒத்தி வைத்த நீதிவான், சந்தேக நபர்களை எதிர்வரும் 31ஆம் திகதிவரை [illegible] விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-4)

## வேரவிலுக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜன.18
பூநகரி வேரவில் பகுதியில் வசிக்கும் 250 குடும்பங்களுக்கு மின்சாரம் விநியோகம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண திட்ட முகாமையாளர் ந.குணசீலன் தெரிவித்தார்.
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவிலும் 250 குடும்பங்களின் சிறுதொகைப் பணப் பங்களிப்பிலும் இந்த மின் விநியோகப் [illegible] பட்டு இன்று முதல் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-4-14)


நேற்று இடம்பெற்ற தைப்பூசத் திருநாளில் நல்லூர்க் கந்தன் திருமஞ்சத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் காட்சி இது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஜன.18

மத்திய சமுக சேவைகள் அமைச்சு கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு நலன் திட்டங்களை வழங்கும் நடமாடும் சேவையை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடத்தவுள்ளது.

கிளிநொச்சி மக்கள் வங்கி தலைமை அலுவலகத்துக்கு அருகில் உள்ள மத்திய ஒத்துழைப்பு நிலையத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் மத்திய சமூக சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பூநகரி, பளை, கண்டாவளை ஆகிய பிரதேச செயலக பிரிவில் உள்ள 16 இற்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதார தொழில் பயிற்சி நிலையத்தில் இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.

அத்துடன் காணாமற் போனோரைக் கொண்ட குடும்பங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் ஏனைய மாற்றுத் திறனாளிகளுக்கும் மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலி, மூக்குக்கண்விில்லை, ஊன்றுகோல் போன்ற உபகரணங்கள் வழங்கல், 60 வயதைப் பூர்த்தி செய்தோருக்கு முதியோர் அடையாள அட்டை வழங்குவதற்கான இலவச புகைப்படம் எடுத்தல் ஆகியவையும் இடம்பெறும்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களை இதில் கலந்து கொள்ளுமாறு சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ அறிவித்துள்ளார். (வ-9)

## கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள்

கிளிநொச்சி, ஜன.18

கிளிநொச்சி மாவட்டத்தின் சில இடங்களில் டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். கிளிநொச்சியிலுள்ள கனகபுரம், உதயநகர் மேற்கு, பூநகரியிலுள்ள பல்லவராயன் கட்டு, நாச்சிக்குடா, நான்காம் கட்டை ஆகிய இடங்களிலேயே டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமை தாங்கினார்.

2012 ஆம் ஆண்டு 84 டெங்கு நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் இனம் காணப்பட்டதாகவும் சென்ற ஆண்டு அந்தத் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் ஆனால் கடந்த டிசெம்பர் மாதம் எட்டு டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (க-18)

# புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம்

### மன்னாரில் இடம்பெற்றது நேற்று


மன்னார், ஜன. 18

'புகைத்தல் அற்ற ஆரோக்கிய வாழ்வு' என்ற தொனிப் பொருளில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஏற்பாடு செய்த புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.என். சில்றோய் தலைமையில் குறித்த ஊர்வலம் ஆரம்பமானது.

ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலக வீதியூடாகச் சென்று பஸார் பகுதியை அடைந்து மீண்டும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை வந்தடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் புகைத்தலுக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டனர்.



இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனி மார்க், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை பணியாளர்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## குடிதண்ணீர் கிடைத்தது கிளாலி மக்களுக்கு

வலி.தென்மேற்கு,ஜன.18

கிளாலிச் சந்தியில் முகாமிட்டிருந்த பாதுகாப்புப் படையினர் வெளியேறியதை அடுத்து அந்தப் பகுதியில் வசித்து வருகின்ற மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிளாலிச் சந்தியில் முகாம் அமைத்திருந்த பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்தி வந்த நல்லதண்ணீர்க் கிணற்றையும் சுற்றி வேலியடைத்திருந்தனர். இதனால் குறித்த கிணற்றை நம்பி வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் குடி தண்ணீருக்காகத் தூர இடங்களை நாடி வந்தனர்.

கடந்த வாரம் கிளாலிச் சந்தியிலிருந்து பாதுகாப்புப் படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து பல வருடங்களாக குடிதண்ணீருக்கு அலைந்து திரிந்த அப்பகுதி மக்கள் தற்போது கிளா லிச் சந்தியிலிருக்கும் குடி தண்ணீர் கிணற்றை பயன் படுத்தி வருகின்றனர். (வ-155)

# குற்றச் செயல் புரிந்த 12 பேருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன.18

கொடிகாமம் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவருக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் 72 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பருத்தித்துறை வீதி, நாகநாதர் வீதி போன்ற இடங்களில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர். மூன்று இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கான கோடா மற்றும் தயாரிப்பு உபகரணங்களை வைத்திருந்த மூவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு தனித்தனியாக எடுக்கப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒருவருக்கு 32 ஆயிரத்து 500 ரூபாவும், ஏனைய இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.மாவட்டச் செயலக பாவனையாளர் அதிகார சபையினால் வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் கொடிகாமம் பொலிஸாரால் தேசிய டெங்கு நுளம்பு வாரத்தின் போது கொடிகாமம் பிரதேசத்தில் நுளம்பு பெருகக் கூடிய நிலையில் சூழலை வைத்திருந்ததாக 5 பேர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

ஐந்து பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## வலி.தென்மேற்கு மக்கள் குடிதண்ணீரின்றி சிரமம்

வலி.தென்மேற்கு,ஜன.18

குடிதண்ணீர் வழங்கும் டிராக்டர் சில்லின் ரயர் வெடித்ததனால் இரு தினங்களாக மக்களுக்குத் குடிதண்ணீர் வழங்கப்படவில்லை.

இதனால் குடிதண்ணீரை எதிர்பார்த்திருந்த நூற்றுக் கணக்கான குடும்பங்கள் ஏமாற்றத்துக்கும் வீண் சிரமங்களுக்கும் உள்ளாகின.

வலி.தென்மேற்கு பிர தேசத்தில் மாதகல் பகுதியில் மீளக் குடியேறிய நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபையால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

குடிதண்ணீர் வழங்கு வதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் டிராக்டரின் ரயர் திடீரென வெடித்ததால் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கவலை தெரிவித்துள்ள பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார், ரயர், ரியூப் வாங்குவதற்கு சபையிடம் அங்கீகாரம் கோரியிருந்தார்.

பதில் தவிசாளரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உறுப்பினர்கள், புதிய ரயர், ரியூப் வாங்குவதற்கு அனுமதி வழங்கியதுடன் சேதத்துக் குள்ளான ரயரையும் ரியூப் பையும் சபையின் நலன் கருதி பாதுகாப்பாக வைக்குமாறும் தெரிவித்தனர். (வ-115)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு இரத்தப் பரிசோதனைக் கருவிகள்

### நோயாளர் நலன்புரி சங்கம் வழங்கியது

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்களின் இரத்த பரிசோதனைக்கென சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இரத்த பரிசோதனைக் கருவியை வைத்தியசாலை நோயாளர் நலன் புரி சங்கம் அண்மையில் கொள்வனவு செய்து கர்ப்பிணிகள் கிளினிக் பிரிவுக்கு வழங்கியுள்ளது. அத்துடன் வைத்திய சாலையில் உள்ள அனைத்து விடுதிகளுக்கும் சுகாதாரக் கல்வி வலையமைப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கவும் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கர்ப்பிணிகள் இரத்தப் பரிசோதனைக் கருவி தொடர்பாக உரிய மருத்துவருடன் தொடர்பு கொண்ட போது:-

கர்ப்பிணிகளுக்கு இரத்தத்தின் அளவு கர்ப்பிணியாவதற்கு முன்பே சிறந்த முறையில் இருக்க வேண்டும். கர்ப்பிணியாக இருக்கும் காலத்தில் இரத்தத்தின் அளவு குறைவாக இருக்கும் நிலையில் கர்ப்பிணிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கர்ப்பிணியாக மாறியதும் உணவு வெறுப்பு, கிரந்தி, வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கு [illegible] வகைகள், மரக்கறி வகைகள் சாப்பிடாமை, கிளினிக்குகளில் வழங்கப்படும் இரும்புச்சத்து குளிசைகளைப் பாவிக்காமை போன்ற காரணங்களால் உடலில் இரத்தத்தின் தன்மை குறைவடையும். இதனால் குழந்தை வளர்ச்சிக் குறைவு, குறைமாத குழந்தை பிரசவிப்பு, போதிய அளவு இரத்தம் கிடைக்காததால் சிசு இரத்தக் குறைபாடு ஏற்பட்டு மரணம் சம்பவித்தல், பிரசவ வேளையில் அதிக அளவு இரத்தப் பெருக்கு ஏற்பட்டு உயிரிழத்தல், பிரசவத்துக்குப் பின்னர் [illegible] போன்றவை காணப்படும்.

கர்ப்பிணித் தாயின் இரத்தம் தொடர்ச்சியாக அவதானிக்கப்படல் வேண்டும்.

இதற்கு வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனைக் கருவி இல்லாததால் தனியார் பரிசோதனைக் கூடங்களில் அதிக கட்டணம் அறவிடுவதால் பலர் இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளாமல் விடுகின்றனர். இதனால் கர்ப்பிணிகள் தொடர்பான இரத்தப் பரிசோதனை அறிக்கை இல்லாமல் கர்ப்பிணிகள் இறுதி நேரத்தில் பாதிப்புக்களைச் சந்திக்கின்றனர்.

கர்ப்பிணிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்க உரிய இரத்தப் பரிசோதனைக் கருவி பெற்றுத் தருமாறு வைத்தியசாலை நோயாளர் நலன் புரி சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

அதனையடுத்து சங்கத்தினர் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கர்ப்பிணிகள் இரத்தப் பரிசோதனைக் கருவியை கொள்வனவு செய்து வழங்கி இந்த வைத்தியசாலைக்கு வரும் நூற்றுக்கணக்கான கர்ப்பிணிகளின் நலனில் அக்கறை எடுத்ததன் மூலம் சுகாதாரத் திணைக்களத்தின் பங்காளியாக செயற்படுவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

டில்லி, ஜன.18

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளுக்கான தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக் கோரிய வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், பேரறி வாளன், சாந்தன் ஆகிய 3 பேருக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. அதை அடுத்து 3 பேரின் சார்பில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கருணை மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய 3 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். அந்த மனுவில், ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட தங்களது கருணை மனுக்கள் மீது நீண்ட காலமாக முடிவு எடுக்காமல் இருப்பதால், தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு முதல் முறையாக தலைமை நீதிபதி பி.சதாசிவம் தலைமையிலான அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசு சார்பில் முன்னிலையாகி வாதாடிய சட்டத்தரணி சித்தார்த் லூத்ரா 'ஏற்கெனவே தூக்கு தண்டனை பெற்ற கைதிகளின் 13 வழக்குகள் ஒட்டுமொத்தமாக விசாரணைக்குஎடுக்கப்பட்டுதற்போது முடிவடைந்துள்ளது. திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ள அந்த வழக்குகளின் இறுதித் தீர்ப்பு, ஒரு வாரத்துக்குள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அந்த வழக்கு களின் தீர்ப்புக்குப் பிறகு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் இந்த வழக்கு விசாரணையை பெப்ரவரி முதல் வாரத்துக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டனர். (வ)

# மீனவர் குறித்த பேச்சுகளில் எச்சரிக்கையுடன் செயற்படுக

### கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஜன.18

மீனவர் பிரச்சினை குறித்து நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது மத்திய அரசும் மாநில அரசும் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடும் கவனமாகவும் செயற்பட வேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.


இதுகுறித்து கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து இந்திய - இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அண்மையில் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார்கள்.

அதைத்தொடர்ந்து இலங்கை நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான அதிகாரிகள் குழு கடந்த 14 ஆம் திகதி டில்லியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழக மீனவர் பிரச்சினை குறித்துநடைபெறவுள்ள பேச்சுக்களின் போது மத்திய அரசும், மாநில அரசும் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடும், கவனமாகவும் செயற்பட வேண்டும் என்றுதெரிவித்தஅவர், இலங்கை அரசு தொடர்ந்து பேசுவது ஒன்றாகவும், செய்வதுவேறொன்றாகவும் முரண்பாடுகளின் மொத்த உருவமாக காட்சியளிப்பதை யாரும் மறந்துவிட முடியாது-என்றுள்ளது. (வ)

# ஊருக்குத் திரும்பினர் விடுவிக்கப்பட்ட மீனவர்



நாகப்பட்டினம், ஜன.18

இலங்கை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட மீன வர்கள் 51 பேர் காரைக்கால் வந்து சேர்ந்தனர்.

கடந்த ஒக்ரோபர் 16 ஆம் திகதி மற்றும் நவம்பர் 20ஆம் திகதி களில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த காரைக்கால் மற்றும் புதுக்கோட்டை மீன வர்கள் 52 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இலங்கை சிறையில் இருந்த 52 மீனவர்களும் இரண்டு தினங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில் 51 பேரை இன்று இந்திய கடலோரக் காவற்படையிடம், இலங்கை கடற்படையினர் ஒப்படைத்தனர்.

அதையடுத்து இந்திய கடலோரக் காவற்படைக் கப்பல் மூலம் மீனவர்கள் 51 பேரும் காரைக்கால் வந்து சேர்ந்தனர். விடுதலை செய்யப்பட்ட 52 மீனவர்களில் ஒருவர் உடல் நலக்குறைவால் காரைக்கால் திரும்பவில்லை என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

## வயல் நிலம் இல்லாத மங்கை நகர் மக்கள்

அக்கராயன், ஜன.18

மல்லாவியில் உள்ள மங்கை நகரில் வாழ்கின்ற 220 குடும்பங்கள் தமக்கு வயல் நிலம் கிடைக்கவில்லைஎன்று துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளன. போர்க் காலத்தில் இந்தக் குடியிருப்பு உருவாக்கப்பட்டது. இங்கு வசிக்கும் குடும்பங்கள் மிகவும் வறுமையான நிலையில் வாழ்கின்றன. தமக்கு வயல் நிலம் வழங்கப்படுமானால் விவசாய முயற்சிகளில் ஈடுபட முடியும் என இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர். துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வயல் நிலங்கள் காடுகளாக மாறிக் காணப் படுகின்றன. தற்போது சேவாலங்கா போன்ற உதவி அமைப்புக்களின் உதவியுடன் காடுகள் துப்புரவு செய்யப்பட்டு விவசாய முயற்சிகளுக்கென கையளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ

இரத்தினசபாபதி ஐயர் வெங்கடேச ஐயர்

(இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதர்)

15.01.2014 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனையடைந்தோம் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகள் மன ஆறுதல் அடையவும் ஆன்மா இறைபதத்தில் இன்புற்றிருக்கவும் எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை
320, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

அஷ்டலக்ஷ்மிபதிப்பகம்
41, கண்டி வீதி,
கைதடி.

(443706)



## VACANCIES

GATEWAY CfICT

We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for immediate recruitment

**1. English Lecturer (Full Time / Part Time)**
*The ideal candidate should be competent graduate/trained teachers to teach the subject indicated. Experience in the field of studies at a reputed institution is considered essential. A Degree/Diploma in Education and/or Professional qualification/s will be an added advantage.*

**2. Computer Lecturers & Instructors (Full Time / Part Time)**
*Ideal candidates should be confident and enthusiastic with an internationally recognized IT related Diploma. A Degree/Diploma in Education and/or Professional qualification/s and Previous teaching experience will be an added advantage*

**3. Computer Hardware Technician**
*Ideal candidate should have a suitable hardware and networking qualifications and over two years experience in a similar capacity. Willingness to travel is essential.*

**Successful applicants could look forward to a rewarding career with excellent prospects including relevant training. Please send your complete CV to the following address indicating the position applied for, including names and contact details of two non - related referees.**

Manager / HR
New Gateway Tech (pvt) Ltd.
347, Kasthuriyar Road, Jaffna

E - Mail : gatewayjfn@sltnet.lk


## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.18

வட்டு மேற்கு பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி கோயிலின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியைகள் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாடும் ஏனைய கிரியைகளும் நடைபெறும். அன்றைய தினம் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறவுள்ளதுடன் தொடர்ந்து கிரியைகள் நடைபெறும். (ஓ)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.18

சுன்னாகம் கந்தரோடை மேற்கு மடத்தடி ஸ்ரீ நாகபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபி ஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியைகள் இன்று சனிக் கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு விநாயக வழிபாடு இடம்பெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதலுடன் கிரியைகள் நடைபெறும். (ஓ-14)


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


## மருதங்கேணிச் சங்கத்தின் கிளைக் குழு தேர்தல் நாளை

வடமராட்சி கிழக்கு மருதங் கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபையைத் தெரிவுசெய்வதற்கான கிளைக்குழுதேர்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதுவும் நடத்தப்படாத நிலையில் நியமன இயக்குநர் சபையில் கீழ் சங்கம் நடத்தப்பட்டு வந்ததாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

தற்போது சங்கத்தின் 20 கிளைகளுக்கும் கிடைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

பின்னர் இந்தக் கிளைக் குழு உறுப்பினர்கள் மூலம் பொதுச் சபை கூடி புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 18

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் த.ஜெயசீலனும் கலந்து கொள்வர்.

பரிசில்களை திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன் வழங்குவார். (த-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பணிகள் குறித்த விவரம் திரட்டு

தென்மராட்சி, ஜன.18
தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி பணிகள் தொடர்பான விவரங்களை வழங்குமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றைக் கேட்டுள்ளார்.
உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களை தேவை அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தி பட்டியலிட்டு அனுப்பி வைக்குமாறும் இது தொடர்பாக சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 22 ஆசிரியர்களின் மேன்முறையீடு ஏற்பு

யாழ்ப்பாணம், ஜன. 18
வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் 29 ஆசிரியர்களின் மேன்முறையீட்டில் 22 பேரின் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு அவர்கள் விரும்பிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்க இடமாற்றச் சபை தீர்மானித்துள்ளது.
வடமராட்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 29 ஆசிரியர்கள் தமது இடமாற்றத்தை மீளாய்வு செய்யுமாறு மேன்முறையீடு செய்திருந்தனர்.
இதனை அடுத்து கடந்த திங்கட்கிழமை கூடிய இடமாற்றச் சபை ஆசிரியர்களின் இடமாற்றத்தை இடைநிறுத்தி அவர்களில் 2 பேர் அதே பாடசாலையில் பணியாற்றும் வண்ணம் அனுமதி வழங்கியது. அத்துடன் 7 ஆசிரியர்களின் மேன்முறையீட்டு விண்ணப்பங்களை தகுந்த காரணம் இன்மையால் நிராகரித்தது.
மிகுதி ஆசிரியர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்கள் விரும்பிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. (த-400-35)

# 'குருந்தம்' பிரிவில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

*தென்மராட்சி, ஜன.18*
*சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட 'குருந்தம்' சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற விரும்பி வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வருகிறது.*
*போதைக்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் தமது வாழ்வை எவ்வாறு பழைய நிலைக்கு திரும்புமென தத்தளித்த பாதிக்கப்பட்டவர்கள் தாமாகவே முன்வந்து விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.*
*இந்த நிலையில் சில பெற்றோர் தமது பிள்ளைகளை அவர்களின் சம்மதமின்றி 'குருந்தம்' பிரிவில் இணைக்க முயற்சிகள் மேற்கொள்கின்றனர்.*
*போதைக்கு அடிமையாகி அதிலிருந்து வெளியே வர தாமாக முன்வருவோருக்கு சிகிச்சையளித்து குணப்படுத்த முடியும். கட்டாயப்படுத்தி அல்லது வற்புறுத்தி விடுதியில் இணைப்பதால் தகுந்த பயன் கிட்டுமா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது.*
*(வ-9)*



தென்மராட்சிப் பிரதேச முதியோர் பேரவையின் ஏற்பாட்டில் மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் அந்தப் பகுதிப் பெண்மணி ஒருவருக்கு மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்கின்றார். (வ-9)

## கற்றல், விளையாட்டு உபகரணங்கள் சிறார்களுக்கு அன்பளிப்பு

அச்சுவேலி,ஜன.18
அச்சுவேலி தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா பாலர் முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறார்களுக்கு கற்றலுக்கான உபகரணங்கள் மற்றும் விளை யாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்த உப கரணங்களை முன்பள்ளி ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட அச்சுவேலி தெற்கைச் சேர்ந்தவர்களும் தற்பொழுது வெளிநாடுகளில் வசிப்பவர்களுமான இருவர் வழங்கினர்.
திருமதி செல்வராணி சிவகுமார் பறவைகள், மிருகங்களின் வடிவில் உருவமைக்கப்பட்ட மென்மையான புத்தகப் பைகள், தொப்பிகள், தண்ணீர் போத்தல் உள்ளிட்ட உபகரணத் தொகுதியை தனித்தனியாக மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.
திருமதி யசோதநாதன் கற்றல் விளையாட்டு உபகரணங்களை சிறுவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். (ஒ-11)

# மாணவரைப் பாடசாலையில் இணைக்க அமைச்சின் அறிவிப்புக்கு மாறாக அன்பளிப்பு

### *இக்கட்டு நிலையில் பெற்றோர்*

அச்சுவேலி,ஜன.18
கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு எதிர்மாறாக மாணவர்களை பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்கு 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 50 ஆயிரம் ரூபா வரை அன்பளிப்புப் பெறப்படுகின்றது. இந்த விடயத்தில் கல்வி அதிகாரிகள் கண்டும் காணாமலும் மெத்தனமாக இருப்பதாக பெற்றோர், பாதுகாவலர் கவலை தெரிவிக்கின்றனர்.
"பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எந்தவிதமான நன் கொடையோ, அன்பளிப்புக்களோ பெற்றுக் கொள்ளக்கூடாது. இந்த விடயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சபை எவையும் தலையிடக்கூடாது. அவ்வாறு அன்பளிப்பு, நன்கொடை பெற்றுக்கொள்ளும் அதிபர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவதோடு பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடை அல்லது அன்பளிப்பு மீளக் கையளிக்கப்படும்" என்று கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த விடயத்தை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் அதிபர்களுடனான சந்திப்பில், கல்துரையாடல்களில் வலியுறுத்தி வந்தபோதிலும் பாடசாலை அதிபர்கள் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு அன்பளிப்பு, நன்கொடை பெற்றுக்கொள்ளும் விடயத்தில் தங்களது தனிப்பட்ட விருப்பத்துக்கு ஏற்ப நடந்துகொள்கின்றனர்.
பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அல்லது பழைய மாணவர் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப் பற்றுச்சீட்டை ஆவணமாக பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கப்படுகின்றது. அனுமதிக்கான நன்கொடை 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 50 ஆயிரம் ரூபா வரை பாடசாலையின் தர நிலைக்கு ஏற்ப அறவிடப்படுவதோடு அதற்கு மேல் பெற்றோரின் விருப்பத்துக்கு அமைய திறந்த நிலையில் தொகை அறவிடப்படுகின்றது.
இதேவேளை பாடசாலை சமூக அமைப்புக்களான பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை என்பனவற்றின் கணக்குக்கு குறிப்பிட்ட அளவு மேலதிக வைப்புக்கள் குறுகிய காலப்பகுதியில் எவ்வாறு கிடைத்தது என்பதையும் இந்த அமைப்புகளுக்குத் தலைவராக இருந்து நடைமுறைப்படுத்தும் அதிபர்களுக்குத் தெரியாமல் பெரிய அளவில் நிதி எவ்வாறு சேர்ந்தது என்பதும் விசாரணைக்கு உட்படுத்தப்படாத பரம ரகசியமாக இருந்து வருகிறது. இதனைக் கண்டறிய கல்வி அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

**"_"**

**பாடசாலை அதிபர்கள் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அன்பளிப்பு, நன்கொடை பெற்றுக் கொள்ளும் விடயத்தில் தங்களது தனிப்பட்ட விருப்பத் துக்கு ஏற்ப நடந்துகொள்கின்றனர்.**

# 10 ஆயிரம் பேருக்கு பற் சிகிச்சை

### *சாவகச்சேரி மருத்துவமனையில்*



தென்மராட்சி, ஜன.18
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவில் கடந்த வருடம் சுமார் பத்தாயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
பற் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் இரண்டு பற் சிகிச்சை நிபுணர்கள் காலை 8 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை தொடர்ச்சியாக பல் தொடர்பான சிகிச்சை வழங்குவதால் தினமும் 30இற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
நாவற்குழி தொடக்கம் ஆனையிறவு வரையிலான பகுதி மக்களும், வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேச மக்களும் பல் தொடர்பான அனைத்துச் சிகிச்சைகளுக்கும் சாவகச்சேரி வைத்தி யசாலைக்கு வருகின்றனர்.
கடந்த வருடம் ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை 9 ஆயிரத்து 909 பேர் பல் தொடர்பான சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
இந்தச் சிகிச்சைப் பிரிவில் கிளிப் போடுதல், ரண சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்கள், கருவிகள் இல்லாத போதிலும் பல் வைத்திய நிபுணர்களின் அயராத முயற்சியால் சிறந்த சேவைகள் வழங்கப்படுகின்றன.
பாடசாலை மாணவர்களுக்கு பிரதி சனிக்கிழமைகளிலும், கர்ப்பிணிகளுக்கு பிரதி புதன் கிழமைகளிலும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.
இந்தச் சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், கருவிகள் போன்றவை வழங்கப்படின் மேலும் பலர் பயனடைய வாய்ப்பு உள்ளதாக நோயாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

# மீளெழுச்சித் திட்டத்தில் 4 வீதிகளுக்கு விமோசனம்

தென்மராட்சி, ஜன.18
சாவகச்சேரி நகரசபையால் முன்மொழியப்பட்ட மீளெழுச்சி வேலைத் திட்டத்தில் நான்கு வீதிகளை இந்த வருடம் புனரமைப்பதற்கு மீளெழுச்சி உதவித் திட்டப்பணிப்பாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் அனுமதி வழங்கியுள்ளார்.
இதனைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிகள் தொடர்பான ஆரம்பக் கட்டப் பணிகள் நகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
நகரசபையின் ஐந்தாம் வட்டாரத்தில் நுணாவில் மேற்கு வீரபத்திரர் வீதி, மூன்றாம் வட்டாரத்தில் மண்டுவில் முதலியாவெளி ஒழுங்கை, ஆறாம் வட்டாரத்தில் நுணாவில் மத்தி கத்தாப்படி வீதி, நான்காம் வட்டாரத்தில் கல்வயல் கிராம்புவில் ஒழுங்கை ஆகியவையே மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த வருடங்களில் நகர சபை யால் இந்தத் திட்டத்தில் 8 வீதிகள் புனரமைக்கப்பட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(வ-9)

**"_"**

**கடந்த வருடங்களில் நகர சபையால் இந்தத் திட்டத்தில் 8 வீதிகள் புனரமைக்கப்பட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது**

## வரணி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் சாரதி நிரந்தர நியமனம்

வரணி,ஜன.18
வரணி பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர அம்புலன்ஸ் சாரதி ஒருவர் சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.
அண்மையில் குறித்த ஒரு தொகுதியினர் சுகாதார திணைக்களத்துக்கு சாரதிகளாக உள்வாங்கப்பட்டு நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன. இதேவேளை கடந்த ஒக்ரோபர் மாதம் தற்காலிக அடிப்படையில் சாரதியாக நியமனம் பெற்று வந்து கடமைபுரிந்தவர் மீண்டும் திணைக்களத்தால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.
தற்சமயம் நியமிக்கப்பட்டுள்ள சாரதி 24 மணி நேரமும் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஒ-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் வேட்பாளர் அறிவிப்பில் பின்னடித்தது காங்கிரஸ் கட்சி

## பரப்புரைக் குழுத் தலைவராக ராகுல் நியமிப்பு

புதுடில்லி, ஜன.18
காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பரப்புரைக் குழுத் தலைவராக அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைக்குழுக்கூட்டம்நேற்றுபுதுடில்லியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா, ராகுல் உள்பட கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.
இந்த கூட்டத்திற்கு பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனார்த்தன் திவேதி,
"காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பரப்புரைக் குழுத் தலைவராக ராகுல் காந்தி தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட மாட்டார். தேர்தலுக்கு முன்பு பிரதமர் பதவிக்கான வேட்பாளரை அறிவிக்கும் வழக்கம் காங்கிரஸ் கட்சியிடம் கிடையாது. நடவடிக்கைக்குழுவின் உறுப்பினர்கள் ராகுலைப் பிரதமர் பதவி வேட் பாளராக அறிவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் பிரதமர் வேட்பாளரை அறிவிக்க வேண்டிய தேவை காங்கிரஸ் கட்சிக்கு இல்லை




என்று சோனியா மறுத்தார்.
தேர்தலுக்கு பின்னர் தான் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி போன்றோரும் பிரதமர் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப் பட்டனர். ராகுல் பரப்புரைக் குழு தலைவராக தேர்வு செய்யப்பட்டதையடுத்து, அவரது தலைமையில் நாடாளுமன்றத் தேர்தலை காங்கிரஸ் கட்சி சந்திக்கும்" என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை இதுகுறித்துக் கருத்துத்தெரிவித்துள்ளசோனியா காந்தி,
"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் அரசியல் கட்சிகளின் சித்தாந்தங்களுக்கு இடையேயான போட்டியாக இருக்கும். மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையிலும் வன்முறையைத் தூண்டும் வகையிலும் முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி செயற்படுகின்றது.
மதச்சார்பின்மை என்பது அரசியல் நிர்ப்பந்தமில்லை . அதனை நம்பிக்கை சார்ந்த ஒன்றாகவே காங்கிரஸ் கட்சி கருதுகிறது. தேர்தல் பிரச்சாரக் குழு தலைவராக ராகுல் காந்தியை நியமிக்கும் கட்சியின் முடிவு, இறுதியானது. தேர்தலுக்குப் பிறகே பிரதமர் வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும்"- என்று தெரிவித்தார். (ற)

# தேர்தலைச் சந்திக்கத் தயார்


## *மத்திய அமைச்சர் சிதம்பரம் கூறுகின்றார்*

புதுடில்லி, ஜன.18
எந்த நேரத்திலும் எந்தக் கட்சியுடனும் நாங்கள் தேர்தல் சவாலைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"ஐக்கியமுற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்தியா கடந்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய வளச்சியை அடைந்துள்ளது. . நாட்டின் வளர்ச்சி எப்போதும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியை உள்ளடக்கியே உள்ளது. எங்கள் நோக்கமே அனைவருக்கும் சமமான வளர்ச்சி அனைவருக்கும் சமூக நீதி என்பதுதான். காங்கிரஸ் ஆட்சியில் அனைவரும் சமம். எந்த நேரத்திலும் எந்த கட்சியுடனும் நாங்கள் சவாலை சந்திக்கத் தயாராக இருக்கிறோம். நாட்டின் வளர்ச்சியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுசாதனையைஎட்டியுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# காங்கிரஸுக்கு தோல்விப் பயம்

## *ராஜ்நாத் சிங் கூறுகின்றார்*

புதுடில்லி, ஜன.18
காங்கிரஸ் கட்சிக்கு தோல்விப் பயம் வந்து விட்டது. அதனாலேயே அவர்கள் பிரதமர் வேட்பாளரை அறிவிக்கத் தயங்குகின்றார்கள் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் தேசிய தலைவர் ராஜ்நாத் சிங்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
" மோடி தான் அடுத்த பிரதமர் என்பதை காங்கிரஸ் ஒத்துக் கொள்வதாலேயே அவர்கள் ராகுலை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கத் தயங்குகின்றனர். காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைக்கவில்லை என்பதால் அப்படி இருக்கும் போது பிரதமர் வேட்பாளரை ஏன் அறிவிக்க வேண்டும் என அக் கட்சி நினைக்கிறதோ தெரியவில்லை. பா.ஜ..வின் கவனம் காங்கிரஸ் கட்சியின் மீது மட்டுமே உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)


# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி (மம்மி) தம்பிராசா



சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தம்பிராசா 15.01.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-தங்கம்மா தம்பதி யினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், இராசலட்சுமி (வவுனியா), காலஞ்சென்ற இராசமணி மற்றும் இராசரத்தினம் (இளைப்பாறிய கணக்காளர், மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்), காலஞ்சென்ற தவராசா மற்றும் இரத்தினேஸ்வரி (மாங்குளம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லத்துரை மற்றும் சின்னம்மா, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் பூமிராசா, மகேந்திரராசா, லிங்கேஸ்வரி, கனகேஸ்வரி காலஞ்சென்ற தவராசா(பட்டு) மற்றும் சிவனேஸ்வரி( சாரதா -சுவிஸ்), பரமேஸ்வரி(வவா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற லபிதா மற்றும் கமலாம்பிகை, தர்மபாலா(இளைப்பாறிய உத்தியோகத்தர் யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சந்திரமோகன் (பிரபல வர்த்தகர்), பிரபாகரன் (சுவிஸ்), காஞ்சனா (இத்தாலி), துஷ்யந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், கோபிநாத், கோகிலாத், லோஜினி, கபில்ராஜ், விதுராஜ், யதுராஜ், சகிக்கா, சிவதர்சன் (ஆஸ்திரேலியா), கிருசாலினி (3 ஆம் வருடம் கலைப்பீடம் யாழ்ப்பாணப் ப்ல்கலைக்கழகம்), நிதர்சன், கிருத்திகா, கபிசா (இத்தாலி), சிவகரனி (சுவிஸ்), கனிஷா (சுவிஸ்), சிறோமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:
[illegible] (மகன்-077 074 1703)
திருமதி தர்மபாலா லிங்கேஸ்வரி (மகள்-077 614 6393)

(42490)(3.6.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கட்டுப்படாத காட்டுத் தீ**

சிலியின் சேண்டியாகோ நகரில் ஒரு வாரமாக பற்றி எரிந்து வரும் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஹெலிஹொப்டர்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். காட்டுத் தீயால் 520 ஹெக்டேயர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 40 க்கும் அதிகமான குடும்பத்தினர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். சில இடங்களில் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், தீ பரவியதற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வரு கிறது. (ற)

## அமெரிக்க இராணுவ அதிகாரிகள் இடைநிறுத்தம்

நியூயோர்க், ஜன.18

அமெரிக்காவில் 34 விமானப் படை உத்தியோகத்தர்கள் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

அணுத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஏவுகணைக் கட்டமைப்புக்களை உரிய முறையில் பரிசோதிக்கத் தவறிய குற்றச்சாட்டுக்காக இவர்கள் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உயர் அதிகாரிகள் சிலரும் இடைநிறுத்தப்பட்டவர்களுள் அடங்குகின்றனர்.

ஏவுகணைக் கட்டமைப்புக்களை உரிய முறையில் பரிசோதிக்கத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் ஆபத்துக்கள் ஏற்படலாம் என்று அமெரிக்க விமானப் படை குறிப்பிட்டுள்ளது.(ற)

# விரைவு ரயிலில் வெடித்தது குண்டு

## *பாகிஸ்தானில் மூவர் சாவு*

கராச்சி, ஜன.18

மத்திய பாகிஸ்தான் பகுதியில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பில் ரயிலில் பயணம் செய்த 3 பயணிகள் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்துள்ளனர்.



இந்த குண்டுவெடிப்பு, தண்டவாளத்தில் நிகழ்த்தப்பட்டதா, ரயில் பெட்டியில் நிகழ்த்தப்பட்டதா என்பது குறித்த தகவல்கள் உறுதிசெய்யப்பட வில்லை. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குஷால் கான் காட்டக் என்ற விரைவு ரயில், பெஷாவரில் இருந்து கராச்சி நோக்கி மணிக்கு 60-70 கி.மீ வேகத்தில் வந்துகொண்டிருந்தது. அப்போது பஞ்சாப் மாகாணம் ரஜன்பூர் மாவட்டத்தில் வந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த சம்பவத்தில் அந்த ரயிலின் 7 பெட்டிகள் தடம்புரண்டதாக தலைமை கட்டுப்பாட்டாளர் நசீம் அகமது டாகர் தெரிவித்தார். குண்டு வெடித்த இடத்தில் ரயில் தண்டவாளங்களுக்கு கீழே மிகப்பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

## 200 கோடி குறுஞ்செய்திகளை கண்காணித்தது அமெரிக்கா

வொஷிங்டன், ஜன.18


அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு மையமான என்.எஸ்.ஏ. தினமும் 20 கோடி குறுஞ்செய்திகளை சேகரித்துக் கண்காணித்து வந்தது என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

வங்கி கணக்கு விவரங்கள், தொழில் ரீதியாக பரிமாறிக் கொள்ளும் விவரங்கள் என குறுஞ்செய்தி மூலம் பல தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவால் சேகரிக்கப்பட்ட இந்த தகவல்கள், பிரிட்டன் உளவு பிரிவினராலும் பயன்படுத்தப்பட்டதாக 'தி கார்டியன்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டே தகவல்களை சேகரித்ததாக என்.எஸ்.ஏ. அமைப்பு தெரிவித்துள்ளது. இதனிடையே உளவு நடவடிக்கைகளில் மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இன்று அறிவிக்க உள்ளார். (ற)

## பணத்தால் கட்டிய சுவர்



பீஜிங், ஜன.18


சீனாவிலுள்ள கிராம மக்கள் சிலர் பண நோட்டுகளைக் கொண்டு ஒரு சுவரை எழுப்பியுள்ளனர். தங்கள் கூட்டுறவு அமைப்பில் தங்களுக்கு அதிக அளவு முற்பணத் தொகை அளிக்கப்பட்டதாகவும், அந்த ஒரு லட்சத்து 30 ஆயிரம் யூவான்களைக் கொண்டு சுவர் அமைப்பை உருவாக்கியதாகவும் அந்த மக்கள் தெரிவித்தனர். சிச்சுவான் மாகாணத்திலுள்ள மக்களுக்கு இராணுவ அதிகாரிகள் பலத்த பாதுகாப்புடன் இந்த பணத்தை கொண்டு வந்து அளித்தனர். இந்த பணத்தை கொண்டு மக்கள் சுமார் 2 மீற்றர் உயரத்திற்கு சுவர் எழுப்பினர். சீன புத்தாண்டை முன்னிட்டு இந்த முற்பணத் தொகை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்தப் பணத்தை மக்களுக்கு விநியோகிக்க மட்டும் இரண்டு நாள்கள் தேவைப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தனக்குக் கிடைத்த பணத்தை எண்ணிப்பார்த்தே கைகள் வலிப்பதாக ஒருவர் தெரிவித்தார். இந்தப் பணச் சுவரின் அருகே நின்று பலர் புகைப்படங்களை எடுத்துக்கொண்டனர். இதனை பலர் சமத்துவம் திரும்பியுள்ளதாக பாராட்டியுள்ளனர். (ற)

## கப்பல்கள் மோதியதில் 3 மீனவர்கள் சாவு

டோக்கியோ, ஜன.18

ஜப்பானில் சரக்குக் கப்பல் மீது 2 படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில் மீனவர்கள் 2 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு கடலோர காவல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

மேற்கு வகாயாமா கடற்பகுதியில் 499 தொன் எடை கொண்ட பனாமா என்ற சரக்குக் கப்பல் மீது 2 படகுகள் மோதின. இந்த விபத்தில் 3 மீனவர்கள் கடலில் தூக்கி வீசப்பட்டனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் சிகிச்சை பலனின்றி 2 பேர் உயிரிழந்தனர். காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார் என்று என்று கூறப்படுகின்றது.(ற)

## தாய்லாந்துப் பிரதமரிடம் ஊழல் குறித்து விசாரணை

பாங்ஹொக், ஜன.18

உணவுப்பொருள் கொள் முதல் திட்டத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக பிரதமர் யிங்லக் ஷினவத்ராவிடம் விசாரணை மேற்கொண்டு வருவதாக தாய்லாந்து ஊழல் தடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் அரிசி உற்பத்தியாளர்களுக்கு சர்வதேச சந்தையில் வழங்குவதைவிட அதிக விலை வழங்க யிங்லக் அரசு 2011 ஆம் ஆண்டு முடிவெடுத்தது. அதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும் என்றும் அரசு அறிவித்தது. ஆனால் அரசு இத்திட்டத்தை செயற்படுத்தியதன் காரணமாக பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது. அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் யிங்லக் ஷினவத்ராவிடம் விசாரணை நடத்தப்படுவதாக ஊழல் தடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே யிங்லக் ஷினவத்ராவைப் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் தீவிர போராட்டங்கள் நடத்தி வரும் நிலையில் அவரிடம் இத்தகைய விசாரணை நடத்தப்படுவது அவருக்கு மேலும் சிக்கல் ஏற்படுத்தக்கூடும் என கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிரியில் இன்று ஆலோசனைக் கூட்டம்

பாடசாலையை விட்டு விலகிய வசதி குறைந்த இளைஞர், யுவதிகள் பயன்பெறும் வகையில் தற்போதய தொழில் நுட்ப வளர்ச்சிக்கமைய 10 கணினிகளும் அதற்குத் தேவையான உபகரணங்களையும் கொண்ட கணினிப் பயிற்சி அலகு இந்தப் பிரதேச நன்மை கருதி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் வதிரியில் அமைத்துள்ளது.

இந்தக் கணினிகள் மூலம் ஒரு தொகுதியில் பயில்வதற்கு 20 பேரை இணைத்துக் கொள்ள முடியும். இவர்கள் பயன்பெறும் வகையில் திட்டம் தீட்டி செயற்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் வதிரி, வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழகத் தலைவர் வ.சிவசந்திரதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. புத்திஜீவிகள் இதில் கலந்துகொண்டு ஆலோசனைகளைத் தெரிவித்து உதவுமாறு உபதலைவர் திருமதி யோ.ஜெயவாணி கேட்டுள்ளார். (ந-35)

## ஊடகத்திறன் போட்டிகள்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகமும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து ஊடக எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நடத்தும் வடமாகாண மட்டத்திலான ஊடகத்திறன் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஊடகத்திறன் போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களை கலந்து கொள்ளுமாறு ஊடகக் கழகப் பொறுப்பாசிரியர் தெரிவித்துள்ளார். (ந-10)

## பாரம்பரிய வைத்தியர்கள் இணையத்தின் மாநாடு

ஸ்ரீலங்கா தேசிய பாரம்பரிய வைத்தியர்கள் இணையத்தின் மாநாடு இன்று சனிக்கிழமை மதவாச்சியில் நடைபெறவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில், வட இலங்கை சுதேச வைத்திய சபையில் நடைபெற்ற இணைய இயக்குநர் சபையில் மாநாடு தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந-7)

## வணிக பீடத்தின் பழைய மாணவர் கூட்டம் நாளை

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கான சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் சமுகமளிக்கும்படி பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கேட்டுள்ளார். (ஓ)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்பும், அடிப்படை சுகாதார வசதி மேம்பாட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கும் அண்மையில் இடம்பெற்றது.

தனங்களப்பு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான கருத்தரங்கு தனங்களப்பு பொதுநோக்கு மண்டபத்திலும், மறவன்புலோ பிரிவு மக்களுக்கான கருத்தரங்கு மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இடம்பெற்றன.

சுவிஸ் ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் அனுசரணையுடன் சுழிபுரம் காவேரி கலா மன்றத்தின் வழிநடத்தலில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன, (ந-9)


**இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி**



எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய வாக்கிய பஞ்சாங்க கணிதர்

**பிரம்மஸ்ரீ**
**இ.வெங்கடேச ஐயர்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**ESTY MEDICALS,
JAFFNA.**
(42486) (12.3.6)

**6ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**சுப்பிரமணியம் நடேசபிள்ளை**

திதி: துதியை 18.01.2014



தோற்றம் 22.02.1946
மறைவு 24.01.2008

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஆறு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா...
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"யோகபுரம்", நாவற்காடு.
வரணி.
என்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.
(42480)(3.6.4)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 23 ★ 02 ★ 1956
மறைவு 18 ★ 01 ★ 2013



**வீரவாகு பொன்னுத்துரை**

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும்... வாழும்.... வாழும்....

பிரதான வீதி,
ஆண்டார் விடுதி,
பருத்தித்துறை.
ஆ.உதயசேகர்
(உடன்பிறவா சகோதரன்)
நண்பர்கள்- ரெட்ணபாலா,
சசிக்குமார்.
(42494)(6.4.3)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்வி நிறுவனத்தில் கல்விபயிலும்
செல்வி காயத்திரி தில்லைராசா (2015 Bio)
அவர்களது தந்தை

**கிருஸ்ணபிள்ளை தில்லைராசா**

16.01.2014 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து மிக்க மனவேதனையடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
**நியூ சயன்ஸ் அக்கடமி.**
(43067) (4.6.3)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**கணேசரட்ணம் ஞானரட்ணம்**

தோற்றம் 14★07★1960
மறைவு 29★01★2013



ஆண்டொன்று மறைந்து
விட்டது அப்பா!
அகலுமா உங்கள்
பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கரணவாய், கரவெட்டி.
குடும்பத்தினர்.

**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி சாந்தி
**கதிரவேற்பிள்ளை**



நீங்கள் பறந்து போய்
ஆண்டு ஐந்து அசைந்த போதும்
அழியாத ஓவியமாய் - என்றும்
எம் நெஞ்சில் நீங்கள்....
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கணவர்: கு.கதிரவேற்பிள்ளை,
பிள்ளைகள்: விஸ்னுகாந், கேமகாந், விமலகாந்.
தோற்றம் 26.01.1968
மறைவு 02.11.2009

இல.45, சோலை பல்லவராயன்கட்டு
ஜெயபுரம்.
(33075)(12)(3.6)

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில்
07.02.1980

ஆண்டவன் அடியில்
02.01.2010

திதி : அபரபக்க துதியை
[18.01.2014]



**அமரர் சின்னத்துரை-பத்மரூபன் (ரூபன்)**

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா – உந்தன்
பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
தொலைபேசியில் உந்தன் செய்திவந்த கணம் முதல்!
உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடியவிழி மலர்ந்திட நின்றாலும் ரூபனே
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ்நாள்தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

204/3, புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(42462) (7.6.3)



**11ஆம் ஆண்டு நினைவுகள்**

அமரர்
**தம்பு சிவபாக்கியன்**

மலர்வு 22★01★1922
உதிர்வு 18★01★2003

அன்போடு அரவணைத்து ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழ வைத்த ஐயாவே!
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மைவிட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் இதயத்தில்
என்றும் வாழ்வீர்கள் ஐயா!

200, செ்ன். பெ...
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர மருத்துவர் இல்லை; மருத்துவ சேவைகள் பாதிப்பு

*வன்னேரிக்குளம், வட்டக்கச்சி மருத்துவமனைகளில்*

கிளிநொச்சி,ஜன.18
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம், வட்டக்கச்சி மருத்துவமனைகளில் நிரந்தர மருத்துவர்கள் பணியில் இல்லாததால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமக்கான மருத்துவ சேவைகளைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம் மருத்துவமனையில் கடந்த எட்டு ஆண்டுகளாக மருத்துவர் ஒருவர் பணியில் நிரந்தரமாக இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்த மருத்துவமனையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்த மருத்துவர் ஒருவர் ஓய்வுபெற்றுச் சென்ற நாளிலிருந்து நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதன் காரணமாக ஆனைவிழுந்தான் குளம், வன்னேரிக்குளம், ஜெயபுரம் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 500 குடும்பங்கள் மருத்துவ சிகிச்சையை பெறுவதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.

1953 ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் கிராமமும் 1983 ஆம் ஆண்டு ஜெயபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களும் உருவாக்கப்பட்டன. ஆனால் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதில் கடுமையான இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனையிலும் நிரந்தர மருத்துவர் பணியில் இல்லாததால் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த மருத்துவமனையில் மருத்துவருக்கான விடுதி இல்லாதகுறையும் நிலவுகின்றது. இங்கு நிரந்தர மருத்துவர் இல்லாததால் வட்டக்கச்சி, இராமநாதபுரம், மாயவனூர், புதுக்காடு, அழகாபுரி, இரணைமடுக் குளத்தின் கீழான கிராம மக்கள் எனப் பலரும் பெரும் மருத்துவ நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)

## நூலகம் இல்லாத கிராமங்கள்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்கள் நூலக வசதி இல்லாத நிலையில் காணப்படுகின்றன. இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பத்திரிகைகளை வாசிப்பதில் ஆர்வம் மிகுந்தவர்களாகக் காணப்படுகின்ற போதிலும் அவை கிடைக்காமையால் அன்றாடச் செய்திகளை அறிந்து கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நூலக சேவையும் மாணவர்களுக்குக் கிட்டுவதில்லை. (க-18)



வவுனியா பொது மருத்துவ மனையில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சிற்றூழியர்.

## எமது கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்தும் பாராமுகம்

*வவுனியா மருத்துவமனை சிற்றூழியர்கள் விசனம்*

வவுனியா,ஜன.18
எமது கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்தும் பாராமுகத்துடன் இருப்பதாக வவுனியா பொது மருத்துவமனையில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்ட சிற்றூழியர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் முற்பகல் 11 மணி வரை இந்த ஊழியர்கள் தமது கோரிக்கைகள் சிலவற்றை வற்புறுத்தி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் கோரிக்கைகள் தொடர்பாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஐந்து நாள்களைக் கொண்ட வேலை வாரத்தைச் சிற்றூழியர்களுக்கு வழங்குதல், சீருடைக்கான கொடுப்பனவை ஒரே தடவையில் வழங்குதல், ஆபத்துக்கொடுப்பனவை உரிய வகையில் வழங்குதல், பரிசார்களுக்கான பயிற்சியை வழங்குதல் போன்ற கோரிக்கைகளே வலியுறுத்தப்பட்டிருந்தன.

மேலும் வவுனியா மருத்துவமனையில் பணியாற்றும் சிற்றூழியர்கள் காலை 7 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும் மருத்துவமனையின் வைத்திய அதிகாரி விடுத்த வேண்டுகோளை அடுத்து முற்பகல் 11 மணியுடன் தமது போராட்டத்தை நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-421)


## மரண அறிவித்தல்

### தம்பையா குணசிங்கம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா குணசிங்கம் 17.01.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வைத்திலிங்கம்-நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசையா, பாலசிங்கம், செல்லத் துரை, பூபதி மற்றும் புனிதவதி, பரராசசிங்கம், இராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சந்திரலீலாவின் அன்புக்கணவரும், சந்திரவதனா, குணதாசன், சந்திரதாஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும், நாகேஸ்வரன், யசோதா, ஜெசிந்தா ஆகியோரின் அன்புமாமனாரும், நவீன், சிந்துஜா, சாதுயன், சுவாதி, தீபிகா, திலக்சி, துசாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
மகள்-வதனா -049 093 8617
மகன்-குணதாஸ் -016 938 4292
மகன்-சந்திரதாஸ் -077 552 4747

ஈவினைப் பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
குடும்பத்தினர்.

(43703)(3.8.4)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
30.03.1928



மறைவு
21.12.2013

### அமரர் அம்பலவி தம்பித்துரை

(உடற்கல்வி ஆசான்)

சுன்னாகம் கிழக்கில் பிறந்து வாழ்ந்து மறைந்த
எமது குடும்பத் தலைவர் உடற்கல்வி ஆசான்
அமரர் அம்பலவி தம்பித்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று (18.01.2014) சனிக்கிழமை
கீரிமலையிலும் பின்னர் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.
20.01.2014 திங்கட்கிழமை சுன்னாகம், கதிரமலை
சிவன் மண்டபத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பின்னர் நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(குறிப்பு: தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்)

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தங்களின் பங்களிப்பினை விரும்பும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(424476) (12.3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 30 வருடங்களின் பின்னர் மழை வேண்டி பிரார்த்தனை

திருகோணமலை, மொறவெவ பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பன்குளம் பிள்ளையார் கோயிலில் முப்பது வருடங்களின் பின்னர் மழை வேண்டி புதன்கிழமை விசேட பூசை நடைபெற்றது.

## காணி அபகரிப்பு; 21 இல் கூட்டம்

மட்டக்களப்பு.ஜன.18


மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் மற்றும் செங்கலடி பிரதேச செயலர் பிரிவுகளில் மேய்ச்சல் தரைக் காணிகள் அத்து மீறிக் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் ஆராயும் உயர் மட்ட கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா அண்மையில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற காணி. அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் அமைச்சரிடம் வழங்கிய கடிதத்தின் அடிப்படையிலேயே இந்த கூட்டம் நடைபெறவுள்ளது என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் மற்றும் செங்கலடி பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் பாலுற்பத்தி விவசாயிகளினால் பயன்படுத்தப்பட்டு வந்த புல்நிலங்களையுடைய காணிகள் பிரதேசவாசிகளினால் பலவந்தமாக அத்து மீறி கைப்பற்றப்பட்டுள்ளன. அந்தக் காணிகளை மீண்டும் பாலுற்பத்தி விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசாவினால் கோரப்பட்டிருந்தது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 332 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள்



நியமனத்தை வழங்கினார் கிழக்கு முதல்வர்

கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் வெற்றிடமாக காணப்படும் கணிதம், விஞ்ஞானம், தொழிநுட்பம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கான தமிழ், சிங்கள, மொழி மூல 332 பட்டதாரிகளுக்கு புதன்கிழமை ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு திருகோணமலை ஓசில் விவேகானந்தா கல்லூரியில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல் வீர திஸாநாயக்க தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் எ மஜீத், கிழக்கு மாகாண தவிசாளர் ஆரியவதி கலப்பதி, மாகாண சபை உறுப்பினர் ஆர். எம். அன்வர், கல்வி அமைச்சின் செயலர் என். ஏ. புஸ்பகுமார ஆகியோர் கலந்து கொண்டு பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர்.

தமிழ் மொழி மூல 81 பட்டதாரிகள் திருகோணமலை மாவட்டத்துக்கும், 105 பட்டதாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும், 54 பட்டதாரிகள் அம்பாறை மாவட்டப் பாடசாலைகளிலும் கற்பிக்க நியமனங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சிங்கள மொழி மூலம் 92 பட்டதாரிகளுக்கு, இலங்கை ஆசிரியர் சேவை 3 இற்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. (ச)

# அதிகரித்தது வெள்ளம் மக்கள் இடம்பெயர்வு

### பாடசாலையில் தங்கவைப்பு

மட்டக்களப்பு.ஜன.18

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலவெட்டுவான் ஆற்று வெள்ளம் அதிகரித்து வருகின்ற நிலையில் அந்தக் கிராம மக்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை பாதுகாப்பாக காயான் குடா கண்ணகி வித்தியாலயத்துக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

பதுளை உள்ளிட்ட மலையகப் பகுதிகளில் பெய்து வரும் மழையால் கும்புக்கன் ஓயா குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதையடுத்து அதன் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

அதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் முந்தானை ஆறு உள்ளிட்ட ஆறுகளில் நீர் கரை புரண்டு ஓடுகின்றது.

அதன் காரணமாக மாவட்டத்தின் ஏறாவூர் பற்று, கிரான், வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவுகளில் வெள்ள அபாயம் ஏற்படவுள்ளது என்று புதன்கிழமை முதல் பிரதேச செயலரது அறிவுறுத்தலுக்கமைவாக பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களிலுள்ள மக்களை அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.



அதற்கமைவாக மயிலவெட்டுவான் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 57 குடும்பங்கள் வியாழக்கிழமை பிரதேச செயலர் யு.உதயசிறிதர், கிராம சேவையாளர் ஆகியோரின் உதவிகளுடன் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த வருடம் மக்கள் வெளியேறத் தாமதித்தமையால் மயிலவெட்டுவான் கிராமம் முழுமையான நீரில் மூழ்கியதுடன், மக்கள் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டு படகுகள் மூலமே மீட்கப்பட்டனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான சமைத்த உணவுகள், சிறுவர்களுக்கான பால்மா வகைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர், கிராம சேவையாளர் ஆகியோர் மேற் கொண்டுள்ளனர்.

இதேவேளை இடம்பெயர்ந்துள்ள மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் கேட்டறிந்ததுடன் அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்து பிரதேச செயலர், கிராம சேவையாளர் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

2007 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 7 தடவைக்கு மேல் மயிலவெட்டுவான் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் தங்களது வீடுகள், மேட்டு நிலப் பயிர்ச்செய்கை,



கால்நடைகள், சேகரித்து வைத்த தானிய வகைகள், சமையல் உபகரணங் கள் ஆகியவற்றை இழந்துள்ளனர்.

இனிமேல் இடம் பெயர முடியாது என்று மக்கள் மாகாண சபை உறுப்பினரிடம் தெரிவித்தனர். அதனால் தமக்கு உயரமான கட்டடத்தை அமைத்துத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச)

## கண்காட்சியை மூடியதால் மக்கள் ஏமாற்றம்

திருகோணமலை.ஜன.18

திருகோணமலை துறை முகத்தில் தரித்து நிற்கும் உலகின் மிகப் பெரிய மிதக்கும் நூலகமான லோகோஸ் ஹோப் புத்தகக் கப்பல் கண்காட்சி திடீரென புதன்கிழமை மூடப்பட்டதால், வடக்கு, கிழக்கில் இருந்து அதனை பார்வையிடச் சென்ற ஆயிரக் கணக்கானோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.



கப்பல் புத்தகக் கண்காட்சி மூடப்பட்டுள்ளது என்று திடீரென போடப்பட்ட அறிவித்தலே இதற்கான காரணம் என்று தெரிய வருகின்றது.

கப்பல் கண்காட்சி மூடப்பட்டமையால், திருமலை, புறாமலை, நிலாவெளி போன்ற சுற்றுலாப் பிரதேசங்களை மக்கள் பார்வையிட்டனர்.

இதேவேளை செவ்வாய்க்கிழமை கல்முனை, சம்மாந்துறை போன்ற தூர இடங்களில் இருந்து இங்கு வருகை தந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் கண்காட்சியைப் பார்க்க முடியாது திருப்பி அனுப்பப்பட்டனர்.

அதிகமான சனநெரிசலே கப்பலைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கக் கல் பொலிஸாரிடம்

வாழைச்சேனை.ஜன.18

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் மாணிக்கக் கல் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர்களைப் பொலிஸார் வியாழக்கிழமை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து மாணிக்கக் கல்லையும் கைப்பற்றியுள்ளனர்.

இரவு நேரக் கடமையில் ஈடுபட்டிருந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் புலனாய்வுத் துறையினர் சந்தேகத்தின் பேரில் பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் நின்ற காரொன்றைச் சோதனையிட்ட போதே இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ள மாணிக்கக் கல் என்று சந்தேகிக்கப்படும் பொருள் 260 கிராமும் 990 மில்லிகிராம் எடை உடையது.

இந்தப் பொருளின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு மாணிக்கக் கல் அதிகார சபைக்கு அனுப்பப்படவுள்ளது. (ச)

## மிருகக்காட்சிசாலைக்கு ரூ. 720 மில்லி. இலாபம்



கொழும்பு, ஜன.18
தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலை கடந்த வருடத்தில் மாத்திரம் 720 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளது.
2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 11.6 சதவீத வளர்ச்சி என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த வருடம் தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையைப் பார்வையிட 15 லட்சத்து 46 ஆயிரத்து 442 பேர் வருகை தந்துள்ளனர்.
பின்னவல தேசிய மிருகக் காட்சிசாலையைப் பார்வையிட 7 லட்சத்து 16 ஆயிரத்து 366 பேர் கடந்த வருடம் வருகை தந்தனர்.
இந்த நிலையில் அதில் 2 லட்சத்து 78 ஆயிரத்து 740 பேர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த வர்களாவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## ஒழுக்கமில்லாத பொலிஸாருக்கு ஆப்பு

ஒழுக்க மீறல்களில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் தெரிவித்தார்.
குற்றச் செயல்களை தடுத்து மக்களுக்கு அச்சமின்றி வாழக் கூடிய பின்னணியை உருவாக்க பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்று அவர் கூறினார்.
கடந்த ஆண்டில் சிறந்த முறையில் சேவையாற்றிய 367 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மன்னார் புதைகுழிக்கு இராணுவமே பொறுப்பு

## தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.18
"சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள மன்னார் மனிதப் புதைகுழிக்கு அரசும், இராணுவத்தினருமே முழுப் பொறுப்பு.
இந்த விவகாரம் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு பெரும் சவாலாக அமையும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் சர்வதேச நிபுணர் குழுவை இலங்கைக்கு அழைத்து இந்த மாபெரும் மனிதப் புதைகுழி தொடர்பில் ஆய்வு நடத்தப்பட்டு நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.
இதனை இலங்கை அரசு செய்யுமானால் சர்வதேச சமூகத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்றும் அவர் குறிப் பிட்டார்.
மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில்



இருந்து நேற்றுமுன்தினம்வரை 36 முழுமையான எலும்புக் கூடுகள் மீட்கப்பட் டுள்ளன.
இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மன்னாரில் கண்டுபிடிக் கப்பட்டுள்ள மாபெரும் மனிதப் புதைகுழி சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
அதிலிருந்து மீட்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகள் போர்க் காலத்தில் காணாமற்போன தமிழர்களுடையவை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.
இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள பகுதி இராணுவத்தின் அறிவிக்கப்படாத உயர்பாதுகாப்பு வலயமாக இருந்துள்ளதுடன் அங்கு இராணுவத்தினரின் முகாம் ஒன்றும் இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
எனவே, கொலை செய்யப்பட்ட தமிழர்களை அங்கு இராணுவத்தினருக்குத் தெரியாமல் எவரும் புதைத்தி ருக்கமாட்டார்கள். இந்தப் புதைகுழிக்கு அரசும், இராணுவத்தினருமே முழுப் பொறுப்பாகும்.
குறித்த மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை மீட்கப்பட்ட மண்டை யோடுகளில் நான்கு சிறுவர்களுடையதாக இருக்கின்றன. சிறுவர்களின் பற்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
எனவே, போர்க் காலத்தில் குடும்பத்துடன் காணாமற்போன தமிழர்களும் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுக்கின்றது.
இதேவேளை, இந்தப் புதைகுழியிலிருந்து நேற்றுமுன்தினம் வரை மீட்கப்பட்டுள்ள 36 மண்டையோடுகளில்பலகடுமையான அடிகாயங்களால் நொறுங்கிக் காணப்படுகின் றன.
மண்டையோடுகள் சிலவற்றில் துவாரங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.
எனவே, கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டோரும், துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டோருமே இந்தப் புதை குழியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.
இவ்வாறான சந்தேகங்களுக்கான உண்மை கண்டறியப்பட வேண்டும். போர்க் காலத்தில் காணாமற்போனோரின் உறவினர்களை மரபணுச் சோதனைக்கு உட்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்; சர்வதேச நிபுணர் குழுவை இலங்கைக்கு அழைக்க வேண்டும். இலங்கை அரசு இதில் தயக்கம் காட்டுமானால், சர்வதேச சமூகத்தின் மத்தியில் பின்விளைவுகளை அது எதிர்கொள்ளும் - என்றார். (ச-சி)

## தேர்தல்களில் 5 ஆயிரம் கண்காணிப்பாளர்

கொழும்பு, ஜன.18
கலைக்கப்பட்டுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக் கப்பட்டுள்ளன.
சுமார் 5 ஆயிரம் கண் காணிப்பாளர்களைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தீர்மானித்துள்ளன.
மாகாணசபைத் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.
தேர்தல்கள் செயலகத்தின் தேர்தல் கண்காணிப்புப் பிரிவு, நீதியானதும் - சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (கபே), பவ்ரல், மனித உரிமை களைப் பாதுகாப்பதற்கான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு என்பன தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.
முழுநேர தேர்தல் கண்காணிப்பாளர்கள், நடமாடும் கண்காணிப்பாளர்கள் என கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.
பவ்ரல் அமைப்பு 2 ஆயி ரத்து 500 கண்காணிப்பாளர்களை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தத் தீர்மானித் துள்ளது என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.
கபே அமைப்பு தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை குறித்து இதுவரையில் ஆராயப்படவில்லை என்று அதன் நிறை வேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். (ச-சி)



## வரவேற்பில் முதற் பெண்மணி

கொழும்பு சங்கமித்த, வித்தியாலயத்தின் தரம் ஒன்றுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் ஜனாதிபதியின் பாரியார் முதற் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

## நீதியான தேர்தல் நடத்த ஒத்துழைக்க வேண்டும்

### தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன.18
மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக் கையேற்பு திகதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கைகளில் அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.
இந்த நிலையில், நீதியானதும் - சுதந்தி ரமானதுமான தேர்தலை நடத்துவ தற்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.
இதற்கமைய தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.
தமது இந்தக் கோரிக்கைகளைக் கருத்தில்கொண்டு அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நீதியானதும் - சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு பங்களிப்பு வழங்க வேண்டும் என்று அவை கேட்டுக் கொண்டுள்ளன.
வேட்புமனுத் தாக்கல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நீதியானதும் - சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த அனைத்து அரசியல் கட்சிகளிடமும், சுயேச்சைக் குழுக்களிடமும் பவ்ரல் அமைப்பு 4 அம்சக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. (ச-சி)

# வேட்பு மனுத் தாக்கல் 30 முதல் பெப். 6 வரை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜன.18
கலைக்கப்பட்டுள்ள மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல்களுக் கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் பெப்ரவரி 6ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.
இதற்கமைய குறித்த மாகாணங்களிலுள்ள மாவட்ட செயலகக் கேட்போர் கூடங்களில் நிறுவப்படுகின்ற வேட்பு மனுக் கையேற்பு நிலையங்களில் பெப்ரவரி 6ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களைக் கையளிக்க முடியும் என்று அவர் கூறினார்.
வேட்புமனுக் கையேற்பு முடிவடைந்ததுடன், மேல் மற்றும் தென் மாகாணத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
அரசியல் கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் [illegible]



கான அறி வித்தல் வெளியிடப்பட்ட திகதியி லிருந்து வேட்பு மனு காலக்கெடு முடிவடைகின்ற தினத்துக்கு முந்தைய தினமான பெப்ரவரி 5ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12 மணி வரை தமது கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.
வேட்புமனுக்கள் எதுவும் கிடைக்பெறாவிடின் புதிதாக வேட்பு மனுக் காலக்கெடுவொன்றைப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.
ஒரு வேட்புமனுப் பத்திரம் மாத்திரம் கிடைக்கப்பெற்று அது ஏற்றுக்கொள்ளப்படுமாயின், அக்கட்சியோ அல்லது சுயேச்சைக்குழுவோ அம்மாகாண சபைக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக பிரகடனப் படுத்தப்பட வேண்டியேற்படும்.
கிடைக்கப்பெறுகின்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கையைக் கருத்திலெடுத்துத் தீர்மானிக்கப்படுகின்ற தேர்தல் திகதி பற்றிய அறிவிப்பு வேட்பு மனுக் கையேற்பு முடிவடைந்ததன் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நிரந்தர தீர்வுக்கு வழி பிறக்குமா?

முகம் இருக்கும் வரை மூக்கிருக்கும், மூக்கிருக்கும் வரை சளி பிடிக்கும் என்பது கிராமத்துச் சொல் வழக்கு.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பெரிய கடற்பரப்பு இருக்கிறது. இந்த கடற்பரப்பில் மீன், பவளம், முத்துசிற்பி இன்னும் பலவிதமான வளங்கள் தாராளமாக கிடைக்கின்றன. இவைகளைக் குறிவைத்து இலங்கை இந்திய மீனவர்கள் கடலுக்குள் இறங்கி தொழில் செய்கிறார்கள். இந்த கடற் பரப்பை இருநாட்டு மீனவர்கள் மட்டும் பயன்படுத்திக் கொள் கிறார்கள் என்றில்லை. சட்டவிரோத குடியேற்றவாசிகளும், கடத்தல் காரர்களும்கூட இந்தக் கடல் பரப்பினைப் பயன் படுத்திக் கொள் கிறார்கள். ஆக, இந்தக் கடல் இருக்கும்வரை கடற்றொழில் இருக் கவே செய்யும். அதனை இல்லாமல் செய்துவிட முடியாது.

கடல் வளத்தினைக் குறிவைத்து கடலில் இறங்கும் மீனவர் கள், தத்தமது நாடுகளின் எல்லைகளுக்குட்பட்ட பகுதியில் மட் டும் பணி செய்தால் பிரச்சினை இல்லை. இவர்கள் சில சம யங்களில் மீன் வளத்தை நாடி எல்லைகளை மீறிச் சென்று விடுவதனால் தான் பிரச்சினை எழுகின்றது.

இந்திய மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் நமது கடற்பரப்பிற்குள் படகுகளுடன் வந்து விடுகிறார்கள். எமது மீன் வளத்தை வாரிச் சென்று விடுகிறார்கள். சிலவேளைகளில் எமது மீனவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள இழுவைப் படகுகளை பயன்படுத்தி கடல் வளங்களை அவர்கள் பாழ்படுத்தி விடுவதாக முறைப்பாடுகள் உண்டு.

இவ்வாறு நம் கடற்பரப்புக்குள் வந்து கடற்படையினரிடம் சிக்கிவிடுபவர்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டு மீனவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டிலிருந்து இந்தியப் பகுதிகளுக்கு சென்று மீன் பிடித்து அகப்படுபவர்கள் பெரும்பாலும் வடக்கு கிழக்கு மீனவர்களாய் இருப்பதில்லை. தென்பகுதியைச் சேர்ந்தவர்களே அநேகமாக பிடிபடுகிறார்கள். அதுவும் தமிழ் நாட்டுக் கடல் பகுதியில்லாமல் கேரளா மற்றும் ஆந்திரா கடற்பகுதிகளிலேயே அவர்கள் பிடிபடுவதாகத் தெரிகிறது.

சமீப காலத்தில் மீனவர்கள் எல்லைகளைத் தாண்டிச் சென்று கடற்படையினரிடம் பிடிபடும் சம்பவங்கள் அதிகரித்திருப்பது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் பொதுத் தேர்தல் அண்மித்து வருவதால் இந்திய-குறிப்பாக தமிழ் நாட்டு மீனவர்கள் பிடிபட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பது தமிழ் நாட்டில் ஒரு அரசியல் பிரச்சினையாக தலைதூக்கி இருக்கிறது. மத்திய அரசு இதில் தலையிட வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை மீன்படி அமைச்சர் டாக்டர் ராஜித சேனரத்ன இந்தியா சென்று அந்த நாட்டு மீன்பிடித்துறை அமைச்சர் சரத்பவாருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். அதன் காரணமாக இரு தரப்பிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவதற்கான உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அதன்படி நேற்று முன்தினம் சர்வதேச கடல் பரப்பில் வைத்து இரு தரப்பிலுமிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையில் மீனவர்கள் எல்லைக் காவல் படையினரிடம் பரஸ்பரம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட இரு தரப்பு மீனவர்களாலும் தொடர்ச்சியாக எதிர் நோக்கப்பட்டு வரும் பிரச்சினைகளை-தமிழ் நாட்டு மீனவர்கள் வடக்கு மீனவர்களின் வளங்களை சுரண்டிச் செல்வது அடங்கலாக விவாதிப்பதற்கும், தீர்வு காண்பதற்குமென ஆறு உயர்மட்டப் பிரமுகர்களைக் கொண்ட குழுவொன்றும் இரு தரப்பு அமைச்சர்களின் சந்திப்பின்போது உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தரப்பில் மீன் பிடித்துறை பணிப்பாளர் நாயகம் நிமால் ஹெட்டி ஆராச்சி, அமைச்சின் ஆலோசகர் எஸ். சுபசிங்க மற்றும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் ஆகியவர்கள் அந்தக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்திய விவசாய அமைச்சிலிருந்து மூன்று அதிகாரிகள் இந்தியா சார்பில் நியமிக்கப்படுவர். இந்தக் குழு தனது முதல் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தியிருந்தது.

இரு நாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் இந்தக் குழு ஆராய்ந்து முடிவுகள் எடுக்கும் என்றும், அந்த முடிவுகளைச் செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இரு நாட்டு அமைச்சர்களும் பொறுப்புள்ளவர்களாவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதுவானாலும் இந்திய மீனவர்களின் ஊடுருவலால் பெரிதும் பாதிக்கப்பட்டு வரும் வடபகுதி மீனவர்களின் தரப்பிலான கருத்துக்களையும் இந்தக் குழுவினர் ஆராய்வதற்கு வசதி செய்யப்படுவது அவசியம். இலங்கைத் தரப்பிலான குழு உறுப்பினர்கள், வடபகுதி மீனவ பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் குறைகளை அறிந்து செல்வது பிரச்சினைகள் நீடிக்காதிருக்க பெரிதும் உதவும் என்று வலியுறுத்துவோம்.



# 1994 இல் சந்திரிகா 2004 இல் மஹிந்த 2014 இல் ?

சிங்கள மூலம்-மவ்பிம
தமிழில் வீயெஸ்ரீ

மேல்மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த சாதகமானதொரு நாள் குறித்துத் தருமாறு ஜனாதிபதி மஹிந்த தனது வழமையான சோதிடரைக் கேட்டுக் கொண்டபோது, அவர் நிர்ணயித்துக் கொடுத்த நாள் மார்ச் மாதம் எட்டாம் திகதியாகும். ஆனால் தலவில தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் குறிப்பிட்ட அந்தத் திகதியில் இடம்பெற இருப்பதால் தேர்தலுக்கான திகதியில் மாற்றம் மேற்கொள்ளுமாறு தேவாலய மதகுரு கேட்டுக் கொண்டதற்கு இணங்க தேர்தலுக்கான திகதியில் மாற்றம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மார்ச் மாதத்து எட்டாம் திகதி மஹிந்தவைப் போன்றே சந்திரிகாவால் மட்டுமன்றி சுதந்திரக் கட்சியாலும் இலேசில் மறந்துவிடத்தக்கதொரு தினமல்ல.

### டி.பி. விஜேதுங்க போட்ட தப்புக் கணக்கு

இதேபோன்றுதான் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவும் 1994 ஆம் ஆண்டின் தென் மாகாண சபைக்கான தேர்தலுக்கு மார்ச் மாதத்திலேயே நாள் குறித்தார். இடம்பெறப்போகும் தென் மாகாண சபைத் தேர்தல் ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க, கடுமையான போட்டியான தேர்தலாக அமையப் போவதாகவும் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கருத்து வெளியிடத் தவறவில்லை. தமது அர சுக்குப் பெரும் சவாலாக உருவெடுத் திருந்த முன்னாள் ஜனாதிபதி பிரேம தாச ஆதரவு அலையைப் புறமொதுக்கி, தென் பகுதிச் சிங்கள வாக்காளர்கள் சிங்கள பௌத்த வாதத்துக்கு முன்னு ரிமை வழங்கித் தமது தரப்புக்கு ஆத ரவு வழங்குவர் என டி.பி.விஜேதுங்க உறுதியாக நம்பினார். சிங்கள பௌத்த வாதத்தை முன்னிலைப்படுத்தியமை மட்டுமல்லாது, அதற்கு மேலதிகமாக ஒன்றிரண்டு அரசியல் சித்து விளையாட்டுக்களையும் டி.பி.விஜேதுங்க மேற்கொள்ளத் தவறவில்லை. பண்டாரநாயக்கா பரம்பரையின் வாரிசான அனுர பண்டாரநாயக்காவை ஐ.தே. கட்சியில் இணைய வைத்து அமைச்சர் பதவியும் வழங்கி சுதந்திரக் கட்சியின் முகத்தில் கரி பூசத் தவறவில்லை அவர். அது மட்டுமன்றி ஐ.தே.கட்சியை விட்டு வெளியேறிப்போன காமினி திஸநாயகாவை மீண்டும் ஐ.தே.கட்சியில் இணையச் செய்தார். 1977 ஆம் ஆண்டுக்கு முன்னரேயே ஐ.தே.கட்சியை விட்டு ஒதுங்கிக் கொண்ட சேனநாயகா பரம்பரையின் மீதமுள்ள ஒரே வாரிசான ருக்மன் சேனநாயகாவை மீண்டும் ஐ.தே.கட்சிக்குள் இழுத்துக் கொண்டார். அத்தோடு நிறுத்திவிடாமல் கட்சியை விட்டு வெளியேறிப்போன ரொனி டிமெல்லையும் ஏதோ வகையில் மீண்டும் ஐ.தே.கட்சிக்குள் உள்வாங்கிக் கொண்டார்.

இத்தனையையும் மேற்கொண்ட பின்னர் ஐ.தே.கட்சி ஒரு மடம் என்றும், அது விரும்பும் எவருக்கும் இளைப்பாற நிழல் தரத் தயாராகவுள்ளதாகவும் பெருமையடித்துக் கொண்டார். இத்தனை அரசியல் பின்னணிகளையும் உருவாக்கிக் கொண்டு டி.பி.விஜே துங்க அந்தத் தேர்தலைச் சந்திக்கத் தயாரான வேளை, சுதந்திரக் கட்சியின் தரப்பில் மீந்திருந்தவர் சந்திரிகா ஒருவர் மட்டுமே. சந்திரிகாவோ தேர்தலில் சிங்கள பௌத்த வாதத்தை முன்னிலைப்படுத்தாமல், அதிகாரப் பகிர்வு விடயத்தையே தமது அரசியல் தரப்பாக முன்னெடுத்துக் கொண்டார். அனுர பண்டாரநாயக்காவின் வார்த்தைகளில் முச்சக்கர வண்டிக் கட்சியென விமர்சிக்கப்பட்ட சந்திரிகாவின் தரப்பு அந்தத் தேர்தலில் மாபெரும்வெற்றியை ஈட்டிக் கொண்டது. டி.பி.விஜேதுங்கவின் தலைமையிலான ஐ.தே. கட்சி தேர்தலில் மண் கவ்வ நேர்ந்தது.

ஐ.தே.கட்சியின் அந்தப் படுதோல்விக்கு அந்த வேளையில் பலதரப்பட்ட காரணங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் ஐ.தே.கட்சியை மடமொன்றாக ஆக்கப் போய் அரச தரப்புக்குள்ளேயே அவர் உருவாக்கி வைத்த பிச்சல் பிடுங்கல்களே அந்தத் தோல்விக்கான காரணம் என்பதே யதார்த்த உண்மை. ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரே ஓரம் கட்டப்பட்டார். பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் புறமொதுக்கப்பட்டனர். டி.பி.விஜேதுங்கவின் 'யார் வேண்டுமானாலும் இளைப்பாறலாம்' என்ற 'மடம் கோட்பாட்டால்' மீண்டும் கட்சிக்குள் இழுக்கப்பட்ட காமினி திஸநாயக்கா, அனுர பண்டாரநாயக்கா, ரொனி டீமெல், ருக்மன் சேனநாயகா போன்றவர்களை வைத்தே தேர்தலை வென்றுவிடலாம் என்று கணக்குப் போட்ட ஐ.தே.கட்சிக்காரர்கள் வாய் மூடி மௌனிகளாக ஆக நேர்ந்தது. 1982 ஆம் ஆண்டில், ஐ.தே.கட்சி சிகிரியாக் குன்றம் போன்று எவராலும் அசைக்க இயலாதது என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் பெருமிதப்படுத்தப்பட்ட ஐ.தே.கட்சி, கட்சிக்குள் தலைதூக்கிய உட்பூசல்கள் காரணமாக 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற தென் மாகாண சபைத் தேர்தலில் தோல்வியுற்று நொந்து நூலாகிப் போக நேர்ந்தது.

### ஜனாதிபதி மஹிந்தவின் கோட்பாடு பயன் அளிக்குமா?

எவர் வேண்டுமானாலும் உள் வரலாம் என்ற டி.பி.விஜேதுங்கவின் மடம் கோட்பாடு போன்று சுதந்திரக் கட்சி என்ற சிகை அலங்கார நிலையக் கதவுகள் எப்போதுமே எவருக்குமே திறந்திருக்கின்றன என்ற கோட்பாட்டுடன் தற்போது ஜனாதிபதி மஹிந்தவும் மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைத் தேர் தலை எதிர்கொள்ள முன்வந்துள்ளார். ஆனால் டி.பி.விஜேதுங்க போன்று கடும் சிக்கலான தேர்தலுக்கு முகம் கொடுப்பது என்ற விதத்தில்லல்லாது, மஹிந்த இதனையொரு தனி மனிதர் அரங்கேற்றமாகவே, இலேசாக வெற்றி கொள்ளத்தக்க தேர்தல்களாகவே கருதிக் களம் இறங்கியுள்ளார். ஆனால் ஜனாதிபதி மஹிந்த இன்றிருப்பது அன்றைய டி.பி.விஜேதுங்கவின் நிலையிலேயே என்பது வெளிப்படை. சொல் லப் போனால் இன்று அரசியல் பெரும் புள்ளிகள் சகலருமே மஹிந்தவின் பின்னாலேயே இருக்கின்றனர். இருந்த போதிலும் அவர்கள் அனைவருமே 'வாய் திறக்காத வில்லியம்மார்' நிலையில் 'என்னதான் நடக்கிறது பார்ப்போம்' என்ற நிலையிலேயே உள்ளனர். டி.பி.விஜேதுங்கவின் நிர்வாக வேளை யில் ஆகக் குறைந்தது சந்திரிகாவைப் பொது எதிரியாகக் கருதி, அவரை இலக்கு வைத்து தோற்கடிக்க முயன்ற கூட்டு ஒன்றாவது செயற்பட்டது. ஆனால் இன்று மஹிந்த அரசுக்கு அத்தகைய பொது எதிரி என்று கூட எவரும் இல்லை. அதனால் அத்தகைய இலக்கு என்று எதுவொன்றும் கூட இல்லை. ஆதலால் கூட்டு என்று கூட எதுவுமில்லை. மஹிந் தவின் கீழ் இவர்களெல்லோருமே தத்த மது வசதி வாய்ப்புக்களை அனுபவிப்பதிலேயே குறியாக உள்ளனர்.

எப்படியும் இந்தத் தேர்தல்களில் நாங்கள் தானே வெற்றியீட்டப் போகிறோம். அதற்குப் பின்னால் அந்த வெற்றிக்காக கடு மையாக உழைத்தோம் என்ற மதிப்பை ஈட்டிக்கொள்வோம். இப்போது போய் எதற் காக நாம் சிரமப்பட வேண்டும் என்றே மஹிந்தவின் கீழ் உள்ள அரசியல் பிரபலங்கள் அனைவ ருமே எண்ணுகின்றனர்.

எங்காவது ஒரு சிக்கல் சிரமம் வரும்போது தான் களம் இறங்க விரும்புகிறேன். ஏனென்றால் அப்போதுதான் நான் கணக்கில் எடுக் கப்படுவேன் என்ற கருத்து நிலைப்பாடு கொண்டுள்ள 'சிறிசேன கூரேக்'களும் இவர் கள் மத்தியில் இருக்கவே செய்கின்றனர்.

அது சரி, அன்று டி.பி.விஜேதுங்கவின் மடம் கோட்பாட்டுக்கு தென் மாகாணத்தில் கிடைத்த பதில் போன்று, இன்று மஹிந்தவின் சிகை அலங்கார நிலையக் கோட்பாட்டுக்கும் இந்தத் தேர்தல்களில் மக்களின் பதில் கிடைக்கக் கூடுமா? என்ற கேள்வியும் எழாமலில்லை. அது குறித்துத் தற்போது எதனையும் நிச்சயமாகக் கூறிவிட இயலாது. ஆனால் இந்த நான்கு என்பது ஒரு புறம் உதைக்கத்தான் செய்கிறது.

### பத்தாண்டுகள் வரிசையில் மலர்ந்துள்ள 2014

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அரசியலில் முன்னிலை பெற்றது 1994 லிலேயே. 1993 ஆம் ஆண்டில் சந்திரிகா மேல் மாகாண சபையின் முதலமைச்சராகிய போதிலும், 1994 ஆம் ஆண்டின் தென் மாகாண சபைத் தேர்தல் வெற்றியே ஐ.தே.கட்சியை சந்திரிகாவின் முன் வெட்கித் தலைகுனிய வைத்தது. அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வென்று பிரதமராகிப் பின்னர் நாட்டின் ஜனாதிபதியுமானார் சந்திரிகா என்பதை வரலாறு ஒப்பிக்கும்.

சந்திரிகா போன்றே, மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு நான்கிலேயே, 2004 ஆம் ஆண்டிலேயே அரசியலரங்கில் ஜொலிக்கத் தொடங்கினார். 2004 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சியை வீழ்த்தி பிரதமர் பதவியைக் கைப்பற்றிய மஹிந்த, பின்னர் 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதிக் கதிரையையும் கைப்பற்றிக் கொண்டார்.

இப்போது மனதில் எழும் கேள்வி என்னவென்றால் அதற்கடுத்த இந்த நான்கிலும்,-2014 இலும் அப்படி ஏதாவது மாற்றம் நாட்டின் அரசியலரங்கில் ஏற்படக் கூடுமா? என்பதுதான்.


உண்மையில் இந்த இரண்டிலொன்றே இடம்பெறப் போகிறது. ஒன்றில் மஹிந்தவின் கால்களின் கீழாக 'மக்கள் மின் அலை'யொன்று ஊடுருவி அரசுக்குள்ளேயேகன்னை பிரித்து முரண்பட வைத்து, அரசை ஆட்டி வைத்து அரசு தரப்பு, மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் வீழ்ச்சியுற வேண்டும். அவ்விதம் ஏற்பட்டால் மஹிந்தவுக்கு அன்று டி.பி.விஜேதுங்கவுக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும். அல்லது ஏனைய மாகாண சபைத் தேர்தல்களைப் போன்று மஹிந்த இந்த இரு மாகாண சபைத் தேர்தல்களையும் வென்றெடுத்தால் தொடர்ச்சியாக ரணிலின் தலைமையில் தோல்விகளைச் சந்திக்கும் நிலையில் ஐ.தே.கட்சிக்குப் புதிய தலைமைத்துவமொன்று உருவாக வழி ஏற்படும். அந்த விதம் ஏற் படுமானால், 1994 இல் சந்திரிகாவும், 2004 இல் மஹிந்தவும் அரசியலரங்கில் தலையெடுத்தமை போன்று 2014 இல் ஐ.தே. கட்சிக்கு புதிய தலை மைத்துவ மொன்று உருவாகி மஹிந்த திடீர் ஜனாதிபதித் தேர்தலொன்றுக்குச் செல்லப் பயப்படும் நிலையை உருவாக்கிவைக்குமோ என் பது குறித்துக்கூட தற்போது எதுவும் கூறிவிட இயலாது. எது எப்படியோ, இடம்பெறவுள்ள மேல் மாகாண மற்றும் தென்மாகாண சபைகளுக்கான தேர்தலில் மேற்குறிப்பிட்ட இரண்டில் ஒன்று நடந்தாக வேண்டும். ஏனெனில் நான்கின் சிக்கல் என்பது 1994, 2004 போன்றே 2014 லிலும் இடம்பெற்றாக வேண்டும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடல்மேல் பிறக்க வைத்தாய்

## எங்களை ஏன் கண்ணீரில் மிதக்க வைத்தாய்




**போர் முடிந்து விட்டது .ஆனால் இன்னமும் சுமக்க முடியாத சுமைகளையும் வலிகளையும் சுமந்த வண்ணமே இருக்கி றோம் . கடந்த காலங்களில் அரச மட்டங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மீனவர்களுக்குச் சாதகமான பதில் எதனையும் கொடுக்கவில்லை**

சோபனா

யாரிடம் பேசுகிறார்கள் என்பது எங்களுக்கு முக்கியம் இல்லை. மீனவர்களுக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறார்கள் என்பது தான் எங்கள் கேள்வியாக உள்ளது . தொடர்ந்தும் எங்களது வாழ்வாதாரத்தை ஒட்டு மொத்தமாகக் குழி தோண்டிப் புதைக்கும் செயல்களையே எங்களது அரசும் அயல் நாட்டு அரசும் செய்து கொண்டிருக்கின்றன. எமக்கு இதற்கெல்லாம் தீர்வு கிடைக்காதா என்பதே வடமாகாண மீனவப் பிரதிநிதிகளின் ஒருமித்த கேள்வி.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களால் இலங்கைக் கடற்பரப்பின் வளங்கள் பெரியளவில் பாதிப்படைவதுடன் இலங்கை மீனவர்களது மீன்பிடிச் செயற்பாடுகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. அத்துடன் இலங்கை மீனவர்களது மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப்படுகின்றன. இது தொடர்பில் மீனவ அமைப்பின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக்கூறியும் எந்த வித தீர்வும் காணப்படாத நிலையில். மீளவும் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை அரசு சார்பில் மீனவப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். ஆனால் இந்த மீனவர்களது பிரச்சினைகள் செவிசாய்க்கப்படாமல் தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காகப் பேச்சு வார்த்தை நடத்தப்படுவதாக வடக்கு மாகாண மீனவப்பிரதிநிதிகள் தாம் சார்ந்த கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

### தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் ஹர்மன் குமார

2002 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மீனவர்களது பிரச்சினைகள் ஆராயப்பட்டன . ஆனால் அப்போது நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. தொடர்ந்தும் மீனவர் சமூகம் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. எனினும் 2010 ஆம் ஆண்டு இந்தியாவின் இராமேஸ்வரம் தொடக்கம் நாகபட்டணம் வரையான மீனவக் கிராமங்களைச் சார்ந்த மீனவர்களுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது . எந்த விதமான இழுவைப் படகுகளும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்து மீறிச் செல்லக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மீனவர்களது குரல்களை இருநாட்டுஅரசும்ஏற்றுக்கொள்ளவில்லை . அரசால் எடுக்கப்படும் தீர்மானங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது . அன்று மீனவர்களது குரல் காது கொடுத்துக் கேட்கப்பட்டிருந்தால் இன்று இந்த நிலையை மீனவர்கள் எதிர்கொண்டிருக்கத் தேவையில்லை. இரு நாட்டு அரசுகள் மட்டும் பேசிக் கொள்வதால் மீனவர்களது பிரச்சினைகள் தீர்க்கப் பட மாட்டாது . பல வருடங்களாக மீனவர்களது பிரச்சினைகள் தொடர்பில் தொடந்தும் பேசிக்கொண்டிருக்கும் மீனவப் பிரதிநிதிகள் எம்முடன் இருக்கும்போது புதிய தரப்புக் களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொண்டு சென்றுள்ளது இலங்கை அரசு. ஆனால் மீனவர்கள்து பிரச்சினைகள் சரியான முறையில் பேசப்படுமா என்பது சற்றுச் சிந்திக்க வேண்டிய விடயமே.

### கிளிநொச்சி மாவட்ட மீனவப் பிரதிநிதி எப்.ஜோசப்

போர் முடிந்து விட்டது .ஆனால் இன்னமும் சுமக்க முடியாத சுமைகளையும் வலிகளையும் சுமந்த வண்ணமே இருக்கிறோம் . கடந்த காலங்களில் அரச மட்டங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மீனவர்களுக்குச் சாதகமான பதில் எதனையும் கொடுக்கவில்லை . எமது மாவட்டம் சிறிய ஒரு ஏரி. இந்தியா பெரியதொரு தேசம் . அந்த சிறிய ஏரிக்குள் இந்தியா நுழைந்து செய்கின்ற அட்டகாசங்களையும் அட்டூழியங்களையும் இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? போரின் பின்னர் மீளக் குடியமர்ந்த எங்களுக்கு அரசு என்ன செய்தது . மீளக்குடியமரும் போது சந்திர மண்டலத்துக்குச்செல்லவதைப் போல பெரிய ஆசைகள் எங்கள் மனதுகளில் எழுந்தன. ஆனால் நாம் எதிர் பார்த்த எதுவும் நடக்கவில்லை. நாம் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் எமது உழைப்பில் வாழலாம் என்ற கனவுகளுடன் இருந்தோம். அரசு வீடு கட்டித் தருவதாகச் சொன்னார்கள். எட்டரை இலட்சம் பெறுமதியான வீட்டைக் கட்டுமாறு ஐந்தரை இலட்சத்தை தந்தார்கள். மீனவக் குடும்பங்களுக்கு வள்ளங்கள் தந்தார்கள், இயந்திரம் தந்தார்கள். வங்கிகள் வந்தன, கட னைத் தந்தார்கள். அவற்றை மீளக் கட்ட முடயாத நிலையில் நாங்கள் இருக்கிறோம் . இதனைத் தான் அரசு எங்களுக்குச் செய்துள்ளது. எங்களைக் கடன்காரர்களாக மாற்றியுள்ளது. இலங்கையில் வாழும் தமிழ் மக்களாகிய நாங்கள் அழிவுப் பாதையை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். "கடல் மேல் பிறக்க வைத்தாய் எங்களைக் கண் ணீரில் மிதக்க வைத்தாய்" என்று நாம் கடவுளிடம் மன்றாடும் நிலையில் இருக்கிறோம். உலக நாடுகள் சமாதானத்தைப் பற்றிப் பேசுகின்றன. இதுவா எங்களது நாட்டின் சமா தானம். மீனவர்களது எதிர் காலத்தையே சீர்குலைக்கும் இந்திய மீனவர்களது அத்துமீறல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

### மன்னார் மாவட்ட மீனவப் பிரதிநிதி எம். ஆலம்

30 வருட காலப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் போர் முடிவடைந்து 5 வருடங்கள் நிறைவடைந்தும் இன்னமும் போர்ப் பாதிப்பிலேயே வாழ்கின்றனர். போர் முடிவடைந்து ஏதோ ஒரு வழியில் தமது மீன்பிடித் தொழிலை மீள ஆரம்பித்த மீனவர்களுக்கு இன்னமும் பல தடைகள் காணப்படுகின்றன. சிறிய அளவில் தமது தொழிலைக் கட்டியெழுப்புகின்ற மீனவர்களுக்கு இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக நுழையும் இழுவைப் படகுகளின் வருகை மிகப் பெரியளவிலான பிரச்சினையாகும். இலங்கை இந்தியக் கடல் எல்லை வெறுமனே தேசப்படத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது .வடக்கின் கரையோரப் பிரதேசங்கள் இந்திய எல்லைகள் போன்ற நிலை தோன்றியுள்ளது. எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி இந்திய இழுவைப்படகுகள் வடபகுதி கடற்பரப்பில் மிகச் சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கான வாய்ப்பை இலங்கை அரசு தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற போதும் அதனால் பூரணமான நிறைவைக் காணமுடியவில்லை. இந்தப் பிரச்சினைக்கு ஏன் நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை என்பது தான் மீனவர்களது கேள்வியாகவுள்ளது.

### வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையத்தின் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ்

வடமாகாணத்தில் 117 சங்கங்களும், 17 சமாசங்களும் அதற்கு மேலாக இணையம் என்பன இயங்கி வருகின்றன . மீனவர்கள் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவது சந்தோசமான விடயம் தான். வடமாகாணக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை முடிவுக்கு வரலாம். ஆனால் பேச்சுக்களுக்குச் சென்றுள்ள மீனவப் பிரதிநிதிகளுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படலாம். அந்த அழுத்தங்களின் மூலம் இரு நாட்டு அரச தரப்புக் களும் ஏதோ ஒரு முடிவுக்கு வரலாம். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் பேச்சுக்க ளில் பங்கு பற்றியவர்கள் இருக்கும் போது யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த கிராமிய மீனவ சங்கங்களின் மீனவப் பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் பேச்சுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் . மீனவர்களது முக்கிய பிரச்சினையாகக் கற்பிட்டி தொடக்கம் திருகோணமலை வரையான கடற்பரப்பில் இழுவைப்படகுகளின் பாவனை அதிகமாகக் காணப்படுகிறது . நாம் இதுதொடர்பாகப் பேசலாம் என்று மீனவப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து முடிவு எடுத்தோம். ஆனால் எந்த அடிப்படையில் மூவர் தெரிவு செய்யப்பட்டார்கள் என்று எமக்குத் தெரியாது. இவர்கள் முன்னைய பேச்சுக்களில் முழுமையாகப் பங்கு பற்றியவர்கள் அல்ல. இந்த அழைப்பு சந்தேகத்தை ஏற்படுத்துகி றது. இந்தியாவின் தென்பகுதிக் கிராமங்களைச் சேர்ந்தவர்களா லேயே எங்களது கடல் வளங்கள் பாதிக்கப் படுகின்றன. அதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்றால் ஏன் சென் னையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பேச்சு முடிவடைந்தவு டன் கடற்றொழில் அமைச்சர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளினால் எமக்கு ஒரு முடிவு ஏற்படுத்தப்பட வேண்டும். வடமாகாண மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீள ஆரம் பித்திருக்கும் நிலையில் எமக்கு நல்ல தொரு முடிவு வழங்கப்பட வேண்டும்.

### வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையத்தின் தலைவர் சூரியகுமார்

இழுவைப்படகுகளின் பாவனையை நிறுத்தக் கோரி இந்தியாவுடன் பல தடவைகள் பேச்சுக்கள் நடத்தினோம் . ஆனால் எந்தவித ஆக்கபூர்வமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்தும் இந்திய இழுவைப் படகுகள் வடமராட்சிக் கடற்பரப்பு முதல் வடக்கு கடற்பகுதிகள் முழுவதும் மோசமான பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. பல கட்டங்களாகப் பேச்சுக்களை நடத்தினோம். எந்த முடிவுகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.தற்போது புதுடில்லியில் பேச்சு நடத்தி இருக்கிறார்கள். இது தொடர்பில் எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. எங்கள் அமைப்பின் பிரதிநிதிகளைக் கேட்டால் தெரியாது என்ற பதிலே சொல்கிறார்கள். இந்தியாவில் பேச்சு நடப்பது தொடர்பாக அங்குள்ள மீனவப் பிரதிநிதிகளைக் கேட்டால் தமக்கும் இது தொடர்பாக எதுவும் தெரியாது என்றே கூறுகிறார்கள்.யாருடன் பேச்சு வார்த்தைகளை நடத்துகிறார்கள் என்பது புதிராகத்தான் உள்ளது. என்ன விடயம் பற்றிப் பேசுகிறார்கள் என்பதே எமக்கு தெரியாது. பத்திரிகைகள் ஊடாகவே மீனவர்கள் அறிந்துள்ளார்கள் . யாரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் நாம் அதனை வரவேற்போம். பிரச்சினைகள் விரிவுபடுத்தப்பட்டு தொடர்ந்தும் அப்படியான பிரச்சினைகள் நடந்தால் நாங்கள் அதனை முற்றுமுழுதாக எதிர்ப்போம். மீனவர்களது கருத்துக்கள் ஆராயப்படாமல் பேச்சு வார்த்தைக்குச் சென்றுள்ள குழு வினர் எவ்வாறான தீர்வைக் கொண்டு வரப் போகிறார்கள் என்பதுதான் மீனவர்களுடைய எதிர்பார்ப்பு என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் இலாபத்தை அதிகரிப்பீர்கள்.



**இடபம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும் என்று எண்ணுவீர்கள். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**மிதுனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.



**கடகம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.



**சிங்கம்:** கடினமாக உழைக்க வேண்டி வரும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.



**கன்னி:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**துலாம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படு வீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**விருச்சிகம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.



**தனுசு:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியையும் வழங்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.



**மகரம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பழைய நினைவுகள் நெஞ்சில் நிழலாடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.



**கும்பம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**மீனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

## நாளை

**தை-06 ஞாயிற்றுக்கிழமை | 19.01.2014**

திதி: திருதியை பி.ப.04.33 வரை
நட்சத்திரம்: மகம்
மு.இ.08.47 வரை

சுபநேரம்: 09.35-11.05 வரை
இராகுகாலம்:05.05-06.35 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### துறவி

[பாஸ்டனில் தாம் செய்த சொற்பொழிவு ஒன்றில் துறவி என்று சொல்லுக்கான விளக்கமாக சுவாமிஜி இவ்வாறு கூறினார்.]

தான் பிறந்துள்ள சூழ்நிலைக்குத் தேவையான கடமைகளை எல்லாம் ஒருவன் எப்போது செய்து முடிக்கிறானோ, எப்போது அவனுக்குச் செல்வம், புகழ், அதிகாரம் இவற்றில் நாட்டமின்மையும், ஆன்மிக வாழ்வில் ஆசையும் ஏற்படுகிறதோ, எப்பாது அவனுக்கு உலகத்தின் நிலையாமை, போராட்டம், துயரங்கள், அதில் கிடைக்கும் இன்பத்தின் சிறுமை, இவை பற்றிய அறிவும் இவற்றை விட்டு விலக வேண்டும் என்ற உறுதியும் ஏற்படுகிறதோ அப்போது அவன் உண்மை நிலைபேறான அன்பை நாடுகிறான்; சரணடைகிறான். அந்தஸ்து, சொத்து, பெயர், புகழ் முதலிய அனைத்தையும் துறந்து உலகெங்கும் சுற்றித் திரிகிறான். இடைவிடாமல் ஆன்ம ஞானத்தைத் தேடுகிறான்; அருளும் அன்பும் நிறைய வளர்க்கிறான்; அழியாத ஞானம் பெற முயல்கிறான். வருடக்கணக்கில் கடைப்பிடித்துவந்த, நல்லொழுக்கம், ஆன்ம ஆராய்ச்சி, தியானம் இவற்றால் ஞானமென்னும் நன்முத்தைப் பெறுகிறான்; ஆசாரியனாகிறான். பிறகு தன்னை அடைந்து ஞானம் பெற விரும்பும் சீடர்களுக்கும் பிறருக்கும் தான் பெற்ற ஞானத்தையும் நன்மையையும் உபதேசிக்கிறான்.


துறவிகள் எந்த மதத்தையும் சார்ந்தவர்கள் அல்ல. அவர்களது வாழ்க்கை எதிலும் கட்டுப்படாத சுதந்திரமான தியானத்தையும் ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் எல்லா மதங்களிலிருந்தும் சில கருத்துக்களை ஏற்றுக் கொள்வார்கள். அவர்களின் வாழ்க்கை வெறும் தத்துவமோ, நம்பிக்கையோ மட்டுமல்ல; முரட்டுப் பிடிவாதமோ மூட வெறியுமோ அல்ல; அது அனுபூதி வாழ்க்கை.

## அணு விஞ்ஞானிகளின் விழிப்புணர்வு எச்சரிக்கை Dooms Day Clock

'Dooms Day Clock' பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உலகம் எப்போதெல்லாம் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறதோ அப்போதெல்லாம் எச்சரிக்கை விடுக்கும் முகமாக இந்த Doomsday Clock ஐ ஞாபகப்படுத்திவிடுகிறார்கள் அணு விஞ்ஞானிகள்.

1953 ஆம் ஆண்டு அமெரிக்கா - சோவியத் யூனியன் இடையில் அணு ஆயுதச் சோதனை நடைபெற்றபோது 2 நிமிடங்களுக்கு Dooms Day Clock பொருத்தப்பட்டிருந்தது. 1963 ஆம் ஆண்டு அமெரிக்கா - சோவியத் யூனியன் என்பன தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பரிசீலிக்க ஒப்பந்தம் மேற்கொண்ட போதும், 1972 ஆம் ஆண்டு அமெரிக்கா - சோவியத் யூனியன் SALT, AntidBallastic ஒப்பந்தங்களை மேற்கொண்ட போதும், 1984 ஆம் ஆண்டு அமெரிக்கா - சோவியத் யூனியன் தமது அணுவாயுதங்கள் பாவனை தொடர்பிலான பேச்சை முறித்துக் கொள்ள முயற்சித்த போதும், 1991 ஆம் ஆண்டு அமெரிக்கா - ரஷ்யா இடையிலான அணுவாயுதங்களை குறைப்பது தொடர்பிலான ஒப்பந்தங்கள் பயனின்றிப் போன போதும், இறுதியாக 2012 ஆம் ஆண்டு, அணுவாயுதங்களை கட்டுப்படுத்த உலகத் தலைவர்கள் தவற விட்ட போதும், காலநிலை மாற்றத்திற்கு முறையான விதத்தில் பதில் அளிக்கத் தவறிய போதும் இந்த Dooms Day Clock பொருத்தப்பட்டிருந்தது.

இம்முறை செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் Dooms Day Clock பொருத்தப்பட்டிருக்கிறது. அணுவாயுதங்கள் பயன்பாடு குறைப்பில் போதுமான நடவடிக்கை இது வரையும் எடுக்கப்படவில்லை. காலநிலை மாற்றத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்காது இருத்தல், சர்வதேச ரீதியில் நாடுகளுக்கு இடையில் பதற்றம் அதிகரித்தல், புதிய தொழில்நுட்பத்தின் ஆக்கிரமிப்பால் மனிதப் பண்பாடுகள் அழிவடைந்து வருதல் என்பவற்றைக் கண்டித்து இம்முறை DoomsDay Clock பொருத்தப்பட்டிருக்கிறது.



சிகாகோ பல்கலைக்கழகத்தின் அணு விஞ்ஞானிகள் குழுவினரால் இந்த வழக்கம் பின்பற்றப்படுகிறது. அதாவது செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 11.55 மணியிலிருந்து அடுத்த ஐந்து நிமிடங்களுக்கு Dooms Day Clock உலகெங்கும் இயங்கியுள்ளது. அதாவது அடுத்த ஐந்து நிமிடத்தில் உலகம் அழிந்துவிடப் போகிறது என்ற ஒரு போலியான பய உணர்ச்சியை வழங்கி இதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்திட்டமே இந்த Doomsday Clock.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | 6 | 8 | | |
| 9 | 7 | | 2 | 4 | | 6 | | |
| | | 8 | | | | 2 | 7 | |
| | 8 | | 9 | | | 7 | | |
| 1 | 2 | | 8 | | 4 | | 3 | 6 |
| | | 9 | | | 7 | | 1 | |
| | 3 | 2 | | | | 1 | | |
| | | 6 | | 8 | 5 | | 4 | 2 |
| | | 1 | 7 | | | | 6 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | 5 | 7 | 8 | 3 | 9 | 1 |
| 8 | 7 | 3 | 2 | 1 | 9 | 5 | 6 | 4 |
| 9 | 5 | 1 | 3 | 4 | 6 | 2 | 8 | 7 |
| 7 | 6 | 4 | 9 | 8 | 2 | 1 | 3 | 5 |
| 3 | 1 | 2 | 4 | 6 | 5 | 9 | 7 | 8 |
| 5 | 8 | 9 | 1 | 3 | 7 | 6 | 4 | 2 |
| 1 | 2 | 8 | 7 | 9 | 3 | 4 | 5 | 6 |
| 4 | 9 | 7 | 6 | 5 | 1 | 8 | 2 | 3 |
| 6 | 3 | 5 | 8 | 2 | 4 | 7 | 1 | 9 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழஞ்சோற்றின் பயன் தெரியுமா?



இன்றைய நவீன மயமான உலகில் பழைய சோற்றினை வீணாக்குவதில் கவனம் செலுத்துகின்றனர்.
ஆனால் இந்தப் பழஞ்சோற்றில் உடலுக்கு தேவையான பயன் இருப்பது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.
முதல் நாள் தண்ணீர் ஊற்றி வைத்து விட்டு மறுநாள் நாம் சாப்பிடும் இந்தப் பழஞ்சோற்றில் தான் பி6 பி12 அதிகமாக இருக்கிறது எனக் கூறுகின்றனர் அமெரிக்க மருத்துவர்கள்.
குறிப்பாக நமது உடலின் சிறுகுடலுக்கு நன்மை செய்யும் பக்டீரியாக்கள் அதிகமாகி நமது உணவுப் பாதையை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன.
பொதுவாக கிராமத்தில் கஞ்சி சாப்பிடும்போது கஞ்சியுடன் வெங்காயம் சேர்த்து சாப்பிடுவது தான் வழக்கம். சிறிய வெங்காயத்தை சேர்த்துச் சாப்பிடும்போது நோய் எதிர்ப்பு சக்தி பெருகுவதால் வைரஸ் காய்ச்சல் என எந்த ஒரு காய்ச்சலும் நம்மை அணுகாது. பழஞ்சோற்றில் என்ன பயன் இருக்கிறது என்று தெரிந்து கொள்வோம்.
இரவு வேளையில் தண்ணீர் ஊற்றி வைப்பதால் சோற்றில் அதிகளவு நல்ல பக்டீரியாக்கள் உருவாகுகின்றன.
இதனைக் காலை உணவாக எடுத்துக்கொள்வதால் உடல் லேசாகவும் அதே சமயம் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது. மேலும் உடற் சூட்டைத் தணிப்பதோடு குடல்புண், வயிற்றுவலி, போன்றவற்றையும் குணப்படுத்துகிறது. இந்தப் பணியோடு நின்றுவிடாமல் நார்ச்சத்து, மலச்சிக்கல், பிரச்சினைகளைத் தீர்த்து உடலை சீராக இயங்கச் செய்கிறது.
உடலைச் சோர்வில் இருந்து மீட்டு சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். அதற்காக சூடாகத் தயாரித்த சாதத்தில் தண்ணீரை ஊற்றிச் சாப்பிடக்கூடாது. முதல் நாள் இரவு மிஞ்சிய சோற்றை எடுத்து நல்ல தண்ணீர் ஊற்றி மூடிவிட வேண்டும். மறுநாள் சாப்பிடும் முன்னர் சாதத்தை நன்கு பிழிந்து மோரையும் வெங்காயத்தையும் சேர்த்துச் சாப்பிடலாம்.


# சந்திரனில் வீடு கட்டப்போகும் நாசா




சந்திரனில் வீடு கட்டி விற்பனைக்கு விடும் காலமும் வந்து விட்டது. சந்திரனில் வீடு கட்டுவதற்கு அங்கு மூலப் பொருள்கள் 90 வீதம் உள்ளனவாம். முதற்கட்டமாக அமெரிக்கா விண் வெளி ஆராய்ச்சி நிலையமான நாசாவானது முப்பரிமாண அச் சிடும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சந்திரனில் வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளது.
சந்திரனில் விண்வெளி வீரர்கள் வாழ்வதற்கான கட்டமைப்பை நிர்மாணிப்பதே நாசாவின் முக்கிய இலக்காக உள்ளது.
முப்பரிமாண அச்சிடும் தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்களை கணினி மூலம் இயக்கப்படும் ரோபோ இயந்திரங்களைப் பயன்படுத்தி சந்திரனின் மேற்பரப்பில் 24 மணி நேரத்தில் வீடுகளை நிர்மாணிக்க முடியும் என ஆய்வா ளர்கள் கூறுகின்றார்கள்.
இந்தநிலையில் மேற்படி முப்பரிமாண அச்சிடும் தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற்கு அமெரிக்கா தென் கலிபோனியா பல்கலைக்கழகத்துக்கு நாசா தற்போது நிதியுதவி அளித்துள்ளது.

# சூரிய சக்தியில் இருந்து ஹைட்ரஜன் எரிபொருள் தயாரிப்பு

சூரிய சக்தியில் இருந்து ஹைட்ரஜன் எரிபொருளை தயாரிக்கலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். சூரிய ஒளியைப் பயன்படுத்தி எரிபொருள் தயாரிப்பது குறித்து, அமெரிக்காவின் வடகரோலினாவில் உள்ள எனர்ஜி பிராந்டியர் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அதில் சூரிய சக்தியில் இருந்து ஹைட்ரஜன் எரிபொருளை பிரித்தெடுக்கும், சாதனத்தை உருவாக்கி உள்ளனர். இந்த எரிபொருளை இருப்பு வைத்து தேவையான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த புதிய கண்டுபிடிப்பின் மூலம், உலகில் நிலவும் எரிபொருள் தட்டுப் பாட்டுக்கு தீர்வு ஏற்படும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.








*1973 இல் தொழில்நுட்பமற்ற மிதவைகளில் பசுபிக் பெருங்கடலைக் கடக்க ஒரு குழுவினர் முற்பட்டனர். தென்அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலான இந்த 15,000 கிலோமீற்றர் பயணம் , இது மாதிரியான மிதவையை வைத்து நடத்தப்பட்ட மிக நீண்ட பயணமாகும். பழைய நாகரிக காலங்களில் இது போன்ற பயணங்கள் நடத்தப்பட்டிருக்கக்கூடும் என்று அவர்கள் நிரூபிக்க விரும்பினர். அந்தப் பயணத்திலிருந்து அவர்கள் எடுத்த சில புகைப்படங்கள் இவை.*

# இணையத்தைப் பயன்படுத்த மின்குமிழ்

இணையத்தைப் பயன்படுத்த வசதி இல்லையே என்று கவலை வேண்டாம். ஒரு மின்குமிழைப் போட்டால் எல்லா வசதியும் கிடைத்து விடும். அதன் மூலம் இணையத்தைப் பார்க்க முடியும். குழந்தைகளுக்கு டிஜிட்டல் பொம்மை முதல் வீடியோ கேம் வரை, மின் குமிழ் முதல் பட்டாசு வரை எல்லாவற்றையும் மலிவு விலையில் அள்ளிக்குவிக்கும் சீனா தான் இப்போது இந்த மின்குமிழ் மூலம் இணைய வசதியையும் கண்டு பிடித்துள்ளது. ஒரு வோல்ற் மின்குமிழை வாங்கி எரியவிட்டால் போதும், அடுத்த நொடி இணையம் உயிர் பெற்றுவிடும். மின் குமிழை நிறுத்தினால் இணையத் [illegible] குமிழை எரியவிட்டால் நான்கு கணினிகளில் இணையத்தைப் பயன்படுத்த முடியும்.'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளை ஞாயிறன்றும் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

தற்போது சனிக்கிழமைகளில் திறக்கப்படும் மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வார இறுதி நாள்களான சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரைக்கும் வாடிக்கையாளர்களுக்காக திறக்கப்பட்டிருக்கும் என்று மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்

தென்மராட்சி,ஜன.18

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதில் அதில் பயணித்த இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை இரவு சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது. பலத்த காயங்களுக்கு இலக்கான சங்கத்தானை சாரதா வீதியைச் சேர்ந்த செல்வராஜா அனோஜன் (வயது-27) என்பவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஓ-9)

## யோகா, தியானம் புதிய வகுப்புகள் ஆரம்பம்


யாழ்ப்பாணம்,ஜன.18

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் யோகாசன, தியான வகுப்புக்களின் புதிய பிரிவு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலவசமாக நடத்தப்படும் இந்த வகுப்புக்கள் நல்லூர் ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும் இந்த வகுப்புக்கள் ஆண்கள், பெண்கள் என தனித் தனிப் பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. அத்துடன் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

ஆறு மாத காலப் பகுதியைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் உதவியாளர் திருமதி அனந்தலட்சுமி மாணிக்கராஜசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ந-10)



## மன்னாரில் தைப்பூச நிகழ்வு

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை தைப் பூசத்தை முன்னிட்டு பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாவட்ட பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. இதன் போது பொங்கலைத் தொடர்ந்து விசேட பூசையும் இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணியாளர்கள்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரிகள்,சுய தொழில் பயிற்சியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஓ-56)

**கடை வாடகைக்கு விடப்படும்**

சுன்னாகம், K.K.Sவீதியில் அமைந்துள்ள (வேலழகன் காட்வெயர் பக்கம்) கடை மேல் மாடி உட்பட நகைக்கடை, பான்சிக் கடை, பார்மஸிக்குப் பொருத்தமான கடை. நிலம் மாபிள் பதித்துள்ளது.

தொடர்பு: 077 372 5009

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு K.K.Sறோட்டிற்கு அண்மையில் யாழ்.மாநகரசபை எல்லையில் 8 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. மாடி வீடுகள்/ விடுதிகள்/ மண்டபம்/ தொழிற்சாலை/ களஞ்சியசாலை அமைக்க உகந்த இடம்.

தொடர்பு: 077 385 2664/ 077 714 9396/ 077 217 8380

**பசு விற்பனைக்கு**

கன்று ஈன்று ஒரு கிழமையான ஜேசி பசு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 420 6382 (42458) (7.6.3)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரியாலை நாவலடியில் 6 பரப்புக்காணி விற்பனைக்கு.

ஒரு பரப்பு ஒரு இலட்சம். (42481) (4.6.3)

தொடர்பு: 075 544 0503

## பூங்காவனத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்ப்பாணம் வண். வடகிழக்கு கொண்டலடி விநாயகர் இறை மூத்தநயினார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் பூங்காவனத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

ஆயிரத்து எட்டு சங்காபிஷேகமும் கணபதி ஹோமம், விசேட பூசைகளும் பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசை திருவூஞ்சல் இடம்பெற்று சுவாமி தெருவீதி வலம் வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.18

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர் விளையாட்டுக் கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் அங்கத்தவர் தெரிவும் நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கே.அருந்தவபாலன் அறிவித்துள்ளார். (ந-9-10)

**அர்ப்பண வாழ்வில் 25 ஆண்டுகள்**

Best Wishes

அருட்சகோதரி

**அருள் மரியா** (AC)

ஈழ நாடுதனில் எம்மண்ணில்
**இம்மானுவேல்** தம்பதியின்
புதல்வியாய்
எம் பங்குதனில் அழைப்பு
முதலாய் பெற்றவளே
கால்நூற்றாண்டு சேவைகளின்
காலம் **வெள்ளிவிழா** காணும்
உம் பணி மேன்மேலும் சிறப்புற
எம்மவர்களின் வாழ்த்துக்கள்.

பங்குத் தந்தையும் பங்கு மக்களும்
புனித லிகோரியார் ஆலயம், சாவகச்சேரி.

(சி/7830)(3.6.4)




**அரலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகங்கள்**



**மாணவர்களே!**

நீங்கள்
நவீன நாடகமும் வானொலி நாடகமும் கற்க வேண்டியுள்ளது.
யாழ் சேவை ஒலிபரப்பும் சமூக நாடகங்களைக் கேட்டு பாடசாலை தமிழ்த்தினப் போட்டிக்கு சமூக நாடகங்கள் எழுதவும், நடிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள்.

(42402)(2.6.3)

**அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற **29** ஆவது பட்டமளிப்பு விழாவில்
**MA** (சைவசித்தாந்தம்)
பட்டம்பெற்ற யாழ்ப்பாண புகழ்பூத்த கிரிக்கெட் வர்ணனையாளரும் யாழ் FM அறிவிப்பாளரும், ஆலய நேர்முக வர்ணனையாளரும் இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க மத்தியஸ்தரும், யாழ்.மாவட்ட சாரணர் தலைவரும், பத்திரிகையாளரும், எழுத்தாளரும், கூட்டுறவுத் துறையில் உயர் கல்வி பெற்றவரும் எமது இந்து நாகரிக ஆசிரியருமான

**சத்தியானந்தசிவம் தவநேசன்**

(விசேட பயிற்சி இந்துசமயம், B.A (யாழ்ப்பாணம்), B.Com (MADRAS), MA

அவர்களை மேன் மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பல்துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*

இந்து நாகரிக மாணவர்கள்
மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.




(42483)(2.6.3)

## மாந்தை மேற்கு பிரதேச சபையில் நிலவும் அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 31.12.2012 ஆம் திகதி முதல் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 24.06.2013ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQk; இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க் குறிப்பிடப்படும் பதவியில் காணப்படும் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.காரியாலய காரியசகாயர் - 01**

**சம்பளத் தொகுதி - PL1 – 2006A Step 12-13060-9x130-10x145-12x160-17600**

**சேவை நிபந்தனைகள்**

1.பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும்.
2.ஊழியர் விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத்துக்கு அளிப்புச்செய்தல் வேண்டும்.
3.நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. விண்ணப்ப முடிவு திகதியின்போது 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3. எமது அதிகாரப் பிரதேசத்திற்குள் குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசித்திருந்ததற்குரிய கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமை**

1. ஆகக்குறைந்தது தரம் 8 சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள், அனுபவம் விசேட தகைமையாகக் கருத்தில் கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா.100ஐ செலுத்தி விண்ணப்ப படிவத்தை பெற்று உரிய திகதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் **செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. பதவிக்குத் தேவையான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவு திகதியன்று பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. வழங்கப்படும் தகவல்கள் பொய்யானதென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச்செய்யப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி - 05.02.2014**

**செயலாளர்,**
**மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்.**

(C/11055)(10.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் இருப்போரின் பெரும்பணி சமூக சேவையே

யாழ்ப்பாணம். ஜன.18

அரச சேவை என்பது எல்லோருக்கும் கிட்டுவதில்லை. அரச சேவையில் உள்ளோர் தமக்குக் கிடைத்த பதவியை பெரும்பேறாகக் கருதி மக்களுக்கு உரிய நேரத்தில் சேவையை வழங்க முன்வர வேண்டும் என்று தெரிவித்தார் வலி. மேற்குப் பிரதேச சபையின் இளைப்பாறிய செயலாளர் அ.புத்திசிகாமணி.

வலி.மேற்கு பிரதேச சபையின் பிரிவுபசார வைபவமும், அகமகிழ்வு விழாவும் அண்மையில் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் பணியாளர் நலன்புரி சங்கத் தலைவர் நா.அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வலி.மேற்கு பிரதேச சபையில் கடந்த காலங்களில் அர்ப்பணிப்பான சிந்தனையோடு பணியாற்றி 40 ஆண்டுகள் முழுச் சேவையாற்றி உள்ளூராட்சி நிர்வாகத்தில் பூரணமான சேவையை நிறைவு செய்தசெல்விஅ.நாகேஸ்வரி இளைப்பாறியமையை அடுத்து அவரது சேவையைக் கௌரவிக்கும் வகையில், அவரது பெயரைப் பிரதேச சபை மண்டபத்துக்கு சூட்டுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த அளவுக்கு ஓய்வு பெற்றசெல்விஅ.நாகேஸ்வரி அர்ப்பணிப்பான பொதுநல நோக்குடன் பணியாற்றினார்.

அத்துடன் சபையில் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் சந்தை வரி அலுவலர் மார்க்கண்டு குருபாலசிவநாதன் மற்றும் சபை அலுவலர் கனகசபாபதி செல்வராசா ஆகிய இருவரின் சேவைகளையும் மதிக்கின்றோம். இவர்கள் தமது ஓய்வின் பின்னரும் சமூக சேவையூடாக மக்களுக்கு பணியாற்ற முன்வரவேண்டும் -என்றார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை சபையின் தொழில்நுட்ப அலுவலர் ம.சிவநாதன் வழங்கினார்.

வாழ்த்துரைகளை வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோர் வழங்கினர்.

25 ஆண்டுகள் வலி.மேற்கு பிரதேச சபையில் சந்தை வரி அலுவலராக கடமையாற்றிய மார்க்கண்டு குருபாலசிவநாதனின் சேவையைப் பாராட்டி சக ஊழியரான மணியம் என்பவரால் பொன்னாடை போர்த்தி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இசைச் சமர் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ந-41)

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில்
பட்டம் பெற்று வெளியேறிய மாணவர் சங்கம்
ஆரம்பிப்பதற்கான கூட்டம்
(Alumini Association Meeting)
நாளை (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு
முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.
அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது
சமுகமளிக்கும்படி பீடாதிபதி
பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்கள்
கேட்டுள்ளார்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




யாழ்ப்பாணத்தில்
நீர்வளம் மிக்க
நிகரில்லா நீர்வேலியில்.....

அகவை
ஒன்றில்
தடம் பதிக்கும்



பொன் செல்வமகால்
திருமண மண்டபம்



நிகரில்லாப் பேரழகுடன்
இயற்கைச் சூழல்,
அமைதியும் ஆனந்தமும்
கொண்ட பின்புலத்துடன்

A/C வசதிகளுடன் கூடிய
ஓர் ஒப்பற்ற
திருமண மண்டப சேவை

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அனைத்து சேவைகளையும்
வழங்கும் ஓர் ஒப்பற்ற மக்கள் சேவையில்..... பொன் செல்வமகால்

முகவரி: பவானி களஞ்சியம் முன்பாக
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தொ.பே: 077 772 4169, 077 994 4453, 021 320 2600

THE ULTIMATE IMAGINARY
LIVING WITH US



S.Thumilan
ACA, ACMA, ACCA, CGMA, MCS(UK), CPA(AUS), FMAAT(SL), ACS
Group Chairman

ICTAD AWARD WINNER FOR CONSTRUCTION EXCELLENCE
THE LINK TO CONSTRUCTION EXCELLENCE
LINK
ENGINEERING (PVT) LTD

Blue Ocean™
HOME APPLIANCES




Blue Ocean™
ALUMINUM







OUR HIGHEST NATIONAL CONSTRUCTION GRADINGS
WITH 25 YEARS EXCELLENCE

| | | | |
|---|---|---|---|
| Building Construction | C-1 | Floor Finishing Works | F-1 |
| Electrical Engineering | EM-1 | Steel Fabrication | EM-1 |
| Plumbing | F-1 | Landscaping | F-1 |
| Carpentry & Joinery | F-1 | | |
| Aluminium Works | F-1 | | |
| Interior Decorations | F-1 | | |




JITF 2014 JAFFNA INTERNATIONAL TRADE FAIR
For More Details..
Please Visit Our
17, 18, 19 Jan 2014
@ Duraiappa stadium,
Jaffna
STALL
NO.15

Blue Ocean™
FURNITURE




Blue Ocean™
SANITARY WARE




HOTLINE
0777 546 546 0773 451 123
0777 729 555 0776 606 665

Blue Ocean Group of Companies
LEADING THE WAY TO THE FUTURE
Office: #32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka | Tel: 0112 722 217
Email: marketing@link.lk | Website: www.link.lk / www.blueocean.lk

National Chamber CCI ACCA BOI SRI LANKA CIMA
Blue Ocean GROUP OF COMPANIES
ISO 9001 SLAB MGMT. SYS. RvA C 155 ICTAD INSTITUTE FOR CONSTRUCTION TRAINING AND DEVELOPMENT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளுக்கிடையே ஏற்பட்ட வன்முறையே வெலிக்கடைச் சிறைக் கலவரத்துக்கு காரணம்

யாழ்ப்பாணம், ஜன. 18

கைதிகள்தமக்குள்சுட்டுக்கொண்டமையே வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 பேர் உயிரிழக்கக் காரணம் என்று 14 மாதங்களின் பின்னர் வெளியாகியுள்ள சிறைக் கலவரம் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையினுள் புகுந்த விசேட அதிரடிப்படையினரே கைதிகளைச் சுட்டுக்கொன்றதாகக், கொல்லப்பட்ட கைதிகளின் உறவினர்களும், சககைதிகளும் குற்றஞ்சாட்டி வந்த நிலையிலேயே மேற்படி அறிக்கை அதனை முற்றாக நிராகரிக்கும் வகையில் வெளியாகியுள்ளது.

**பின்னணி**

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி கலவரம் மூண்டது. சிறைக் காவலர்களுக்கும் சிறைக் கைதிகளுக்கும் இடையில் மூண்ட இந்தக் கலவரம் ஒரு நாள் முழுவதும் நீடித்திருந்தது.

கைதிகள் ஒரு கட்டத்தில் சிறைச்சாலையின் ஆயுதக் களஞ்சியத்தினுள் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை எடுத்துத் திருப்பித் தாக்கத் தொடங்கியதால் நிலைமை மோசமடைந்தது. இதன் பின்னர் சிறைச்சாலையினுள் விசேட அதிரடிப்படையினர் நுழைந்து, துப்பாக்கிச் சூடு நடத்தி நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த வன்முறையில், 27 கைதிகள் கொல்லப்பட்டனர். இவர்கள் விசேட அதிரடிப்படையினரால் கலவரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் பெயர்கள் அழைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக, கொல்லப்பட்டவர்களது உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

**விசாரணைக் குழு**

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற் கொள்ள இலங்கை அரசு விசாரணைக் குழுவொன்றை அமைத்தது. ஓய்வுபெற்ற நீதிபதி பந்துல அத்தபத்து, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் குணசேன தேனபாது, சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு சட்ட அதிகாரி லலித் அன்ட்ர ஹென்னடி ஆகியோரை உள்ளடக்கிய இந்த விசாரணைக் குழு வெலிக்கடை சிறைச்சாலை வன்முறைகள் தொடர்பாக 565 பக்க அறிக்கையைக் கையளித்துள்ளது.

தாம் இந்த அறிக்கையைப் படித்துள்ளதாகவும், அதில் கைதிகள் ஆயுதங்களைக் கொண்டு தமக்குள் சுட்டுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளதாகவும் சிறைச் சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

**இராணுவத்தை அழைத்தது சரியே**

சிறையில் வன்முறைகள் ஏற்பட்ட போது அதைக் கட்டுப்படுத்த சிறப்பு அதிரடிப்படை, மற்றும் இராணுவம் அழைக்கப்பட்டதையும் இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை நியாயப் படுத்தியுள்ளது.

காயமடைந்தவர்களிடம் திரட்டிய சாட்சியங்களின் படி ஆயுதங்களைக் கையாளத் தெரியாத கைதிகளே, உயிரிழந்த கைதிகளின் உயிரிழப்புகளுக்கு காரணம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை வெளியிடும் அதிகாரம் தமக்கு இல்லை என்று கூறிய சிறைச்சாலைகள் அமைச்சின் செயலர் பி. டபிள்யூ. விதானகே, அமைச்சர் ஒப்புதல் அளித்தால் அடுத்த வாரம் இந்த அறிக்கையை வெளியிட முடியும் என்றும் கூறியுள்ளார்.

(வ-5)

## தரணிக்குளத்தில் கட்டடங்கள் வியாழனன்று திறந்து வைப்பு

*நூலகம் மற்றும் ஆரம்பப் பாடசாலைக்குரியவை*



வவுனியாதரணிக்குளம்கணேச வித்தியாலயத்தில் 54 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நூலகம் மற்றும் ஆரம்பப் பாடசாலையின் கட்டடம் ஆகியவற்றை வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் திறந்து வைத்தார்.

நேற்று முன்தினம் தரணிக்குளம் கணேச வித்தியாலய அதிபர் செ.தபேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானது. வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி சு.செபஸ்தியான், ஓமந்தை வீரகத்தி விநாயகர்ஆலயகுருஎஸ்.கணேசநாதக் குருக்கள், பங்குத்தந்தை கே.டெனிஸ், தரணிக்குளம் பிரதேச பொலிஸ் அதிகாரி ஆகியோர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நூலகக் கட்டடத்தை கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் திறந்து வைத்தார். பாடசாலையின் கட்டடத்தைத் திறந்து வைத்ததன் நினைவாக பாடசாலை வளாகத்தில் தென்னம் கன்றுகள் நடப்பட்டன. (க-421)

## டிறிபேர்க் ஆரம்பப் பிரிவு மாணவருக்கு தனியான மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி ஜன.18

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இந்த வருடம் தொடக்கம் தனியாக நடத்தப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நாளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதால் இறுதிநாள் நிகழ்வில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுக்கள் குறைவாக இடம்பெற்றன என்று பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அதனால் இந்த வருடம் தொடக்கம் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தனியாக இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடத்தப்படும் என்றார் -அதிபர். (ஒ-9)

## வவுனியா விளாத்திக்குளம் வீதியைப் புனரமைக்குமாறு வேண்டுகோள்

வவுனியா, ஜன.18

வவுனியா விளாத்திக்குளம் வீதியைப் புனரமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஓமந்தை புகையிரத நிலையம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்கனவே காணப்பட்ட அரச முறிவு, விளாத்திக்குளம் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதி மூடப்பட்டது. இதனையடுத்து இந்த வீதிக்கு அருகே புதிய வீதியொன்று அமைக்கப்பட்டது. ஆனால் இந்தப் புதிய வீதி மேடு பள்ளம் நிறைந்ததாகக் காணப்படுவதுடன் அண்மையில் பெய்த மழை காரணமாக ஓர் அடி உயரத்துக்கும்மேலாக வெள்ளம் வீதியில் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனால் பாதசாரிகள் உட்பட வாகனங்களில் செல்பவர்களும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஓமந்தை மகா வித்தியாலயத்துக்கு வருகை தரும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், ஓமந்தை மருத்துவ மனைக்குச் செல்பவர்கள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே இனியும் தாமதிக்காமல் விரைவில் இந்த வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)




# மரண அறிவித்தல்

## லயன் சின்னத்தம்பி பத்மநாதன் (J.P)

*(இளைப்பாறிய பொறியியலாளர், உள்ளூராட்சித்திணைக்களம், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னாள் உறுப்பினர்)*



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பத்மநாதன் 15.01.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புஷ்பத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர் களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் இளைய பாசமிகு புத்திரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் தியாகராஜா, நவலட்சுமி நடராஜா, ராஜேந்திரம் மற்றும் திருமதி யோகேஸ்வரி நமசிவாயம் (லண்டன்), சின்னத்தம்பி தம்பிராஜா (லண்டன்), காலஞ்சென்ற சிவலோகசுந்தரம் ஆகியோரின் அன்புத் தம்பியும், மட்டக்களப்பைச் சேர்ந்த காலஞ் சென்ற ஸ்ரீவின்ஸின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காகவும் இறுதிக்கிரியைகளுக்குமாக சின்னத்தம்பி அவன்யூ, மானிப்பாய் தெற்கு, மானிப்பாயில் நாளை (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியிருந்து பிற்பகல் 2.00 மணிவரை வைக்கப்பட்டு பின்னர் பிப்பிலி மயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமக்கள், பெறாமக்கள்.

(42423) (45.6.3)



# மரண அறிவித்தல்

## திருமதி திரேசம்மா சவரிமுத்து

(சில்லாலை வடக்கு)



யாழ்.சில்லாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி திரேசம்மா சவரிமுத்து அவர்கள் சில்லாலையில் 16-01-2014 வியாழக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச் சோர் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகளும், சவரிமுத்து அவர்களின் அன்பு மனைவியும், செல்வம் அருளானந்தம் ('காலம் சஞ்சிகை' ஆசிரியர் - கனடா)அவர்களின் தாயும், தேவராணியின் மாமியும், நிரூபன், செந்தூரி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளையின் சகோதரியும், மாகிறேற்றின் மைத்துனியும், ஞானம், சறோ, வசந்தி, காலஞ்சென்ற அன்ரலா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (18-01-2014) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலி யுடன் அவ்வாலயத்திற்கான சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்,மருமகள்,பேரன்,பேர்த்திகள்
செல்வம்அருளானந்தம் - T.P: [illegible]
ஞானம்-பிரான்ஸ் - T.P: +33619032736

(2.6.3)(42488)



# 5 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்



மண்ணில் 26.01.1968 — விண்ணில் 11.02.2009

திதி: துதியை

திருமதி

## சாந்தி கதிரவேற்பிள்ளை

பல்லவராயன்கட்டு, சோலை, பூநகரி.

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த
உங்களை நாம் எண்ணாத
நாளில்லையம்மா!

முழங்காவில். குடும்பத்தினர்.

(C/11062)(10.6.3)



# கண்ணீர் அஞ்சலி



அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நீண்டகாலத் தலைவராக இருந்து சங்க வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிய

## கதிரவேலு பேரின்பநாயகம்

அவர்களின் மறைவு கூட்டுறவுத் துறைக்குப் பேரிழப்பாகும். நேர்மையும், சிறந்த தலைமைத்துவப்பண்பும், கூட்டுறவில் தீவிர பற்றும் மிக்க, முன்னுதாரணமான தலைவரை இழந்து துயரடைந்திருக்கும் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க கூட்டுறவுக் குடும்ப துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அமரரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/11065) (10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில்
**பணிநிலை வெற்றிடம்**

* நிர்வாக உத்தியோகத்தர் (Administration Officer)
  (கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
* வரவேற்பாளர் (Receptionist)
  (சரளமாக உரையாடக் கூடியவர்கள்)
* கணினி வடிவமைப்பாளர்
  (Adobe Photoshop / Corel DRAW )
* கணினி ரைப்பிங் (பெண்கள்)
* வெளிக்கள உத்தியோகத்தர் (Field Officer)

**நேர்முகத்தேர்வு** 20.01.2014 (திங்கட்கிழமை) (C/11066)
நேரம் : மு.ப 09.00 மணி - பி.ப. 02.00 மணிவரை

(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்)

ANDRA PRINTERS 470/2, ஏ9, வீதி, கிளிநொச்சி.
0772209527, 0776622981 / 021 7201275


# வவுனியாவில் தமிழ், ஆங்கில பாடப் பெறுபேறுகளில் வீழ்ச்சி

*கவலை தெரிவிக்கின்றனர் பாடசாலை அதிபர்கள்*

வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்கும்போது தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் வீழ்ச்சி காணப்படுவதாகப் பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளிலேயே இந்த வீழ்ச்சி காணப்படுகின்றது. மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து காணப்படுகின்றமை, அக்கறையுடன் கற்றல் செயற்பாட்டை குறித்த பாடங்களில் முன்னெடுக்காமை, ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை, குறித்த பாடங்களில் அனுபவம் மிக்க ஆசிரியர்கள் இல்லாமை போன்ற காரணங்களால் இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதுடன் இந்தப் பாடங்களைக் கற்கக் கூடிய வகையில் இணைப்பாடவிதானத்துடன் இவற்றை இணைத்தல் உட்படப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேலும், கருத்தரங்கு, செயலமர்வு, விழிப்புணர்வுப் போட்டிகள் ஆகியவற்றைப் பாடசாலைகளில் நடத்த வேண்டும் எனவும், பெற்றோரும் இதில் கவனம்செலுத்தவேண்டும்என்றும் பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (க-402)


**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ அரச உயர் பதவி வகிக்கும் அழகான பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை.
bride thava @ gmail.com
077 284 4179 (43074) (45.6.3)

**தவறவிடப்பட்டுள்ளது**

ME-0739 மோட்டார் சைக்கிள் வாகனப் புத்தகம், காப்புறுதி மற்றும் வரி அனுமதிப்பத்திரம் என்பன புத்தூரிலிருந்து பருத்தித்துறை டிப்போ வரையிலான சாலையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 546 3842 (43073)(4.6.3)


# மீள் கேள்வி அறிவித்தல் - 2014

## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.02.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்: | அலுவலக நாள்களில் மு.ப 8.30- பி.ப 3.00 மணி வரை<br>**20.01.2014 - 30.01.2014** |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியும் நேரமும்: | **31.01.2014 - மு.ப 9.30 மணி வரை** |
| கேள்வி திறக்கும் திகதி: | 31.01.2014 மு.ப 10.30 மணி |
| கேள்வி திறக்கும் இடம்: | **கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்** |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளி நொச்சி** என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் அதன் நிழல்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **மாட்டிறைச்சிக் கடைப் பெயர்** | | | |
| 1 | கல்லாறு | 10,000.00 | 1,000.00 | 288,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் | 20,000.00 | 1,000.00 | 639,900.00 |
| 3 | ஜெயந்திநகர் | 10,000.00 | 1,000.00 | 324,900.00 |
| 4 | ஊற்றுப்புலம் | 10,000.00 | 1,000.00 | 356,400.00 |
| 5 | வன்னேரி | 10,000.00 | 1,000.00 | 151,470.00 |
| 6 | அம்பலப்பெருமாள் சந்தி | 10,000.00 | 1,000.00 | 153,459.00 |
| 7 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 589,500.00 |
| 8 | கிளிநொச்சி | 40,000.00 | 1,000.00 | 2,714,500.00 |
| | **கோழி இறைச்சிக் கடை** | | | |
| 1 | கிளிநொச்சி இல -02 | 40,000.00 | 1,000.00 | 1,278,000.00 |
| 2 | உருத்திரபுரம் D/10 | 10,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | **ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 1 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 81,000.00 |

### நிபந்தனைகள்:

01. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்
02. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்கு பற்ற தகுதியற்றவர்கள்
03. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
04. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்
05. மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்

**வைத்திலிங்கம் குகராசா**
**தவிசாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C/11061)(2.6.3)






### ஆளுமைத்திறன் முகாமைத்துவப் பயிற்சி

யாழ்.நகரில் முதன் முதலாக வர்த்தக ரீதியான ஆளுமைத் திறன் முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு 'கிறீன் கிறாஸ்' விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் செல்வரெத்தினம் நிமல் வளவாளராகக் கலந்து கொள்வார். (ந)

## நல்லூர் பிரதேசசபை, நல்லூர் உப அலுவலகம் ஆதனப்பெயர் மாற்றம்

**76, 76A,76B ஆடியபாதம் வீதி,**
**17, 19 நாவலடி ஒழுங்கை, வட்டாரம்-08**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலகம் வட்டாரம்-08 ஆடியபாதம் வீதியிலுள்ள 76,76A,76B ஆகிய ஆதனங்களும், நாவலடி ஒழுங்கை 17, 19 ஆகியனவும் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை** எனும் பெயரில் காணப் படுகின்றது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் சின்னத்தம்பி தம்பிப் பிள்ளைக்குரிய ஆதனமாகும். அவர் இறக்க **அவரின் சகோதரர்களான சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி செல்லையா, சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை** ஆகியோரைச்சென்றடைந்தது.

சின்னத்தம்பி செல்லையா, சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை ஆகியோர் தமது 2/3 பங்கினை சின்னத்தம்பி வேலுப்பிள்ளையின் ஏக வாரிசான கனகரத்தினம் பெண் விமலாதேவிக்கு பிரசித்த நொத்தாரிசு சி.பொ.மயில்வாகனம் அவர்களால் வரையப்பட்ட 418/21.05.1970 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் வழங்கியுள்ளனர்.

1/3 பங்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையின் ஏக வாரிசான **கனகரத்தினம் பெண் விமலாதேவியை வந்தடைந்துள்ளது.**

பின்பு முழுவதும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான கனகநமநாதன் அவர்களால் வரையப்பட்ட 146/10.07.2008 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் **கனகரத்தினம் கதீசனை வந்தடைந்துள்ளது.**

இவ் ஆதனம் தொடர்பாக **நடராசா கனகரத்தினம், கனகரத்தினம் விமலாதேவி, கனகரத்தினம் கதீசன்** ஆகியோர் பிரசித்த நொத் தாரிசு இராஜரட்ணம் என்பவரால் வரையப்பட்ட 4853/01.11.2008 ஆம் இலக்க உறுதி மூலம் திருத்தல் சாசனத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கனகரத்தினம் கதீசன் என்பவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கனகரத்தினம் கதீசன் என்பவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ப.வசந்தகுமார்,**
**தலைவர்,**
**நல்லூர் பிரதேசசபை.**

(சி/11064)(4.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Chemistry** **Personal Classes**

1979-2013 வரை வினாத்தாள்கள் சிறந்த முறையில், குறைவான கட்டணத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0789989956 (43715)

# வெளிநாடு செல்லும் ஆண்களுக்குக் கடன்

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு சேவைகள் பிரிவு நடவடிக்கை

வேலை வாய்ப்புக்களைப் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ளவர்கள் பொருளாதார ரீதியில் சிரமங்களை எதிர்கொண்டால் அவர்களுக்கு முகவர் நிலையங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள கட்டணங்கள் உட்பட ஏனையதேவை கள் தொடர்பாக கடன் தொகை வழங்கப்படும்.

இந்த நடவடிக்கையை வெளிநாட்டு வேலை வாய்ப்புச்சேவைகள் பிரிவு மேற்கொண்டுள்ளது. அத்தகையோருக்கு வட்டியில்லாத கடனாக இந்தக் கடன் தொகையை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடுகள் மற்றும் நலனோம்பு செயற்பாடுகள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் ஊடாகத் தமது தொழில் வாய்ப்பைத் உறுதி செய்து கொண்டு, அதன் பின்னர் வெளிநாட்டுச் சேவைகள் செயற்பாட்டுப் பிரிவுடன் தொடர்பு கொள்வதன் மூலம் இந்தக் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார். பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதைக் குறைக்கும் நோக்கில் இந்தப் புதிய கடன் யோசனைத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைக் கொண்டுள்ள தாய்மாருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்வதற்குத் தடை விதிக்கும் சட்டம் இந்த ஆண்டிலிருந்து கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார். வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்வோரின் தொகையை அரைப்பங்காகக் குறைத்து விடுவதே ஆண்டின் இலக்காகும் என்றும் அவர் மேலும் கூறினார். (ச-22)

# அரச ஊழியருக்கு 2,500 ரூபா விசேட முற்பண கொடுப்பனவு

கொழும்பு,ஜன.18

அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா விசேட முற்பணக் கொடுப்பனவுகளை வழங்குமாறு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் யாவும் அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வருட ஆரம்பத்தில் அரச ஊழியர்களுக்கு ஏற்படும் பிள்ளைகளின் கல்விச் செலவு மற்றும் அத்தியாவசியச் செலவுகளை ஈடுசெய்யும்வகையில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வழங்கப்படுகின்ற விசேட கொடுப்பனவு, மாதாந்த சம்பளத்திலிருந்து தவணைக் கட்டண அடிப்படையில் மீள அறவிடப்படவுள்ளது. (ச)

## மரண அறிவித்தல்



### திருமதி இலட்சுமி பொன்னம்பலம்

கேணியடிலேன் கொக்குவில் மேற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி இலட்சுமி பொன்னம்பலம் நேற்று (17.01. 2014) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"லட்சுமி பவனம்"
கேணியடி லேன், கொக்குவில்
மேற்கு. கொக்குவில். (c 11068)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சசிகலா செல்வரெத்தினம்



5 ஆம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிட மாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சசிகலா செல்வரத்தினம் (கொத்தலா) 15.01.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினம் - றஞ்சனாதேவி தம்பதியரின் அன்புமகளும் அகிலா (ஜேர்மனி), அஜந்தன், ஜெயகலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேந்திர குமார் (ஜேர்மனி), சத்தியவேணி, சந்திரகாந்தன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற இராசரத்தினம், கண்மணி, திருநாவுக்கரசு, மகேஸ்வரி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் மனோகரன் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் பரமேஸ்வரி, மனோரஞ்சிதம், புஸ்பராணி (ஜேர்மனி), விமலாதேவி, குகனேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் விவேகானந்தராஜா, பாஸ்கரன் (சுவிஸ்), பராசக்தி, புஸ்பராணி ஆகியோரின் மருமகளும் அபிநயன், அட்ஷயா, மதுஷயா (ஜேர்மனி), சஜீபன், மதுசாளினி, விதுசாளினி, சனுஜா, சதுர்ஜனா ஆகியோரின் சிறியதாயும் சரஞ்சியா, சாருஜன், ஜனுஜன், கபிஷனா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

5 ஆம் வட்டாரம், மண்கும்பான்

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாம்பிகை (பூம்பதி) முருகேசு



காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மீனாம்பிகை நேற்று (17.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற இலட்சுமணன் - நாகம்மா தம்பதியரின் அன்புமருமகளும் முருகேசுவின் அன்பு மனைவியும் யோகதாசன் (யோகா DSI), கமலதாசன் (டோகா), குகதாசன், றஜிந்தினி (லண்டன்), அருள்தாசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்

அல்வின் வீதி, காரைநகர்
தொ.பே. 077 4017041, 077 8803630, 077 4365349

## முக்கிய அறிவித்தல்

அமரர் கந்தையா அருளம்பலம் அவர்களின் சிவபதம் குறித்து அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் அன்னதான மண்டபத்தில் இன்று (18.01.2014) சனிக்கிழமை நடைபெற இருந்த நிகழ்வுகள்யாவும் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பதை எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

கேணிக்கரை அளவெட்டி.

தகவல்:
அ. பார்த்தீபன் (மகன்)

## மரண அறிவித்தல்



### பத்மராணி நாகலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மராணி நாகலிங்கம் (17.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா நாகலிங்கம் (ஓய்வு நிலை மருந்தாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகநாதன் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் திலீபன் (நோர்வே), சாந்தி முகுந்தன் (வேலைகள் அத்தியட்சகர் வவுனியா வளாகம்) ஆகியோரின் பாசமிகு தாயும் சசீலா (நோர்வே), ரவீந்திரன் (வைத்தியகலாநிதி, யாழ். போதனா வைத்தியசாலை), தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமியும் ரூபிகா, விவேக்கா, சமுகன், பிரணவி, நிதிபன், தர்சனன், சஜனுயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கைலைநாதன், ரவீந்திரநாதன், (லண்டன்), சுசீலா, நிர்மலாதேவி (கனடா) காலஞ்சென்ற கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் சிவபாலசுப்பிரமணியம் (மலேசியா) காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அழுக்கை அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

தகவல்
க. நாகலிங்கம் (கணவர்)

துன்பம் தீர அருள் வாக்கு வெள்ளவத்தை அருள் மிகு நாகபூசணி அம்மன் ஷேஸ்திரம், நாகபூசணி அம்மா அவர்கள் யாழ் வருகிறார்

திருமணத்தடை, கல்வித்தடை, தொழில்தடை, நோய், நாகதோஷம், குழந்தைப் பேறு இல்லாதவர்கள், ஏனைய துன்பம் உள்ளவர்கள் வந்து அருள் வாக்கு கேட்கலாம். அருள் வாக்கு கூறப்படும் திகதி 18.01.2014 இல் இருந்து 20.01.2014 வரை அருள் வாக்கு கூறப்படவுள்ளது. நேரம்: காலை 10.30-12.00 மணி வரை, மாலை 4.30-6.00 மணி வரை. 19.01.2014 அன்னதானம் நடைபெறவுள்ளது. யாழ். ஆலய முகவரி:

ஆலய முகவரி, 2 ஆவது ஒழுங்கை, கலாபவன வீதி. (கலாமன்றம் முன் ஒழுங்கை).
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 801 2226

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ் பல்கலைக்கழகத்தில் 10.01.2014 நடைபெற்ற 29ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டம் (MA) பெற்ற ஜெகதீஸ்வரக்குருக்கள் இராஜலட்சுமி அம்மா தம்பதியரின் தவப்புதல்வன் **மயூரன்** அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்

Best Wishes

வாழ்த்துவோர்:
பரமேஸ்வரசர்மா-ரஜனி
பிள்ளைகளும்.
MP வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
(C/11067x7.63)

Study in **UK /Canada/Australia/ Newzealand/Singapore/India/Europe**

**SPOT admissions for MAY/APRIL 18 and 19th January 2014**

- பண வைப்பு (Bank Balance) செய்து தரப்படும்
- College / University இல் கல்வி பயிலுவதற்குரிய வாய்ப்பு
- Business Management/IT/Law/ HotelManagement/ Medicine/Engineering

மற்றும் சகல கற்கைநெறிகள் (43703) (2)

**Global Educational Consultants**

116, Palaly Road,Jaffna. T.P:- 0775301299

இப்பொழுது யாழ்.நகரில்
Diploma / HND
1. Hotel Management
2. Business Management
English Courses
IELTS/A1/B1/B2
English for work
Spoken English/ Basic English

Degree / Post graduate
BBA/BA/MBA
வேலைவாய்ப்பு பெறுவதற்கான விசேட கற்கைநெறி
Professional Plus
கற்கைநெறி உள்ளடக்கம்
· IT · English
· Marketing
· Accounting

London College of Business Technology
**LCBT City Campus**

No: 116, Palaly Road, Jaffna.
021 221 7105 (43702) (2)

330, Ananthapuram East, Kilinochchi.
(வலயக்கல்வி அலுவலகம் பின்புறம்)
Hot line:076 685 7230

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 19.12.2013 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி பாக்கியலட்சுமி முத்துலிங்கம்**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (18.01.2014) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திக் காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

63 சிவகுருநாதர் வீதி,
பிறவுண் றோட் யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## தவறிவிட்டது

திருச்செல்வம் சிவசுதன் (831932546V)என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், ATM காட் என்பன K.K.S. வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது.

தொடர்புகளுக்கு : 077 6630466, 021 2240766

## அறைகள் வாடகைக்கு

ஒரு நாளைக்கு 500/=
இணைந்த குளியலறையுடன்
Hotel Villa City,
422, Galle Road, Col-6.
தொடர்பு: 072 255 2222

**IELTS** A1 B1 B2

MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts

முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education,No 424 1/1,K.K.S Rd,Jaffna IELTS Centre

## காணியுடன் வீடு விற்பனைக்கு

யாழ்.திருநெல்வேலி, வளாக லேனில் பல்கலைக்கழக பின்புறம் 2 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. (43708)

T.P:- 077 0200700, 077 8446263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைக் கரையோர மக்கள் தொடர்ந்தும் குடிசை வாழ்வு

## ஆழிப் பேரலையாலும் பின்னர் போரினாலும் பாதிப்புற்றபோதும் உதவிகளின்றி அந்தரிப்பு

ஆழிப் பேரலையாலும் பின்னர் போரினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டக் கடற்கரையோர மக்கள் போர் முடிவுக்கு வந்து 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதும் இன்னமும் குடிசைகளிலேயே பெரும் கஷ்டங்களுடன் வாழ்கின்றனர்.

அவர்களின் வாழ்வாதாரத்தில் இதுவரை எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு உலகெங்கும் பேரழிவை ஏற்படுத்திய ஆழிப்பேரலையால், முல்லைத்தீவில் ஏராளமான மக்கள் உயிரிழந்தனர். இதில் கள்ளப் பாட்டில் மட்டும் சுமார் 650 பேர் உயிரிழந்தனர். அத்தோடு இந்தப் பகுதியில் ஏராளமான மக்களின் வசிப்பிடங்கள் உள்ளிட்ட உடைமைகளும் ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டிருந்தன.

இதன் பின்னர் கள்ளப்பாடு தெற்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்குப் பொறுப்பெடுத்த நிறுவனம் இன்னமும் 117 வீடுகள் வரை கட்டிக்கொடுக்காத நிலையில் பணி இடைநிறுத்திவிட்டது.

இதன் பின்னர் போர்க் காலப் பகுதியிலும் காலநிலை சீரின்மைகளாலும் தொடர் பாதிப்புக்களைச் சந்தித்து வரும் இந்த மக்களுக்கு சுமார் 9 வருடங்களாக குடிசை வாழ்வே கதியாகியுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின்போதும் இந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். முல்லைத்தீவின் கரையோரக் கிராமங்கள் எங்கும் இவ்வாறான நிலைமையே காணப்படுகின்றது.

இந்தநிலைமைகளைத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட அவர்,

முன்பு மூன்று பேர் அல்லது நான்கு பேர் வரை இருந்த பல குடும்பங்களில் போர்ப் பாதிப்புக்களின் பின் இப்போது ஒருவர் அல்லது இருவரே உள்ளனர். ஆனால், தற்போது இத்தகைய எண்ணிக்கை கொண்டவர்களுக்கு வீடுகள் இல்லை என்கின்ற அதிகாரிகளின் கருத்து கவலை கொள்ளச் செய்கிறது.

இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு வீடற்றவர்களுக்கு வீடுகள் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். அந்த மக்களுக்கு வீடுகள் கிடைக்கும் வரை தொடர்ந்தும் முயற்சிகள் எடுப்பேன் - என்றார். (த-5)

# அனந்தியின் கடந்த காலச் செயற்பாடுகளை தீவிரமாக ஆராய்கிறது பாதுகாப்பு அமைச்சு

யாழ்ப்பாணம், ஜன. 18

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் கடந்த காலங்களில் என்ன செய்தார் என்பது தொடர்பில் தீவிரமான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள், அவர் விடுதலைப் புலிகளின் போரிடும் அணிகளிடம் இருந்து வெளிப் படையாக விலகியே இருந்தார் என்பதையும் தெரிவித்துள்ளன.

> ❝ வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது தொடர்பில் **அரசு ஆலோசனை நடத்தி வருவதாகப் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியிருந்தது.**

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது தொடர்பில் அரசு ஆலோசனை நடத்தி வருவதாகப் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகியிருந்தது.

இது குறித்து கருத்து தெரிவித்திருந்த அனந்தி தான் விடுதலைப் புலி உறுப்பினர் அல்லர் எனவும், காணமாற்போனோருக்காகவே குரல் கொடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர், போர்க் காலத்தில் மட்டுமன்றிப் போருக்குப் பிந்திய கால கட்டத்தில் அவரது பங்கு தொடர்பாகவும் தற்போதைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக ஏதாவது குறிப்பிடத்தக்க தகவலின் அடிப்படையில் அனந்தி சசிதரன் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறதா என்று கேள்வி எழுப்பியபோது, அனந்தியின் கணவன் திருகோணமலை மாவட்ட அரசியல் தலைவராக இருந்தார் என்ற அடிப்படையிலேயே விசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் பதிலளித்துள்ளனர்.

நோர்வேயின் ஏற்பாட்டில் போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டபோது வடக்கு கிழக்கில், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடுருவலை மேற்கொள்வதற்காகவே, விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவை உருவாக்கியதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### போர்க்குற்ற

கையளிக்கப்பட்டன.

பொய்க் குற்றச்சாட்டுக்கள்

அரசின் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வரும் மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஆயர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். இவர்கள் இலங்கை அரசு போர்க் குற்றம் புரிந்ததாகப் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளனர். இதனாலேயே ஸ்ரீபன் ராப் இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டுமென்று தெரிவித்துள்ளார். எனவே பொய்யான தகவல்களை வழங்கிய இரு ஆயர்களையும் கைது செய்ய வேண்டும்' என்று இராவண பலய என்ற சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளது.

நிரூபியுங்கள் பார்க்கலாம்

இது தொடர்பில் மன்னார் ஆயரை உதயன் தொடர்பு கொண்டு கேட்ட போது, நாங்கள் கொடுத்த ஆதாரங்களை முடிந்தால் பொய்யென்று இவர்கள் நிரூபிக்கட்டும். அவ்வாறு செய்த பின்னரே எங்களைக் கைது செய்வது தொடர்பில் கதைக்க முடியும். எங்களுக்குப் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இறுதிக் கட்டப் போரில் சிக்குண்ட மக்கள், பங்குத் தந்தையர்கள் எல்லோருடனும் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் எங்களுக்குப் பல தகவல்களை வழங்கியுள்ளனர். அதனையே நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம். அந்த மக்களிடம் வெளியாள்கள் சென்று தகவல் பெற முடியாது. அவர்கள் எம்மை நம்பியே வெளிப்படுத்தியுள்ளனர்.

இறுதிப் போரில் நடந்த உண்மைகளைப் பலர் இரகசியமாக ஐ.நாவுக்கு அனுப்பிவைத்துள்ளனர். நாங்கள் பகிரங்கமாகச் சொன்னதால் எங்களை எதிர்க்கின்றனர் என்றார் அவர். (த-5)

### வடமாகாண

கடந்த வருடம் ஜூன் மாதம், 2013 ஆம் ஆண்டுக்குரிய வாக் காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகள் முடிவடைந்து கடந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி வாக்காளர் பெயர்ப் பட்டியல் சகல கிராம சேவையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் அடுத்த வாரமளவிலேயே வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு 4 லட்சத்து 94 ஆயிரமாகக் காணப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டு 22 ஆயிரத்தால் அதிகரித்து 5 லட்சத்து 16 ஆயிரமாகியுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு 2 லட்சத்து 20 ஆயிரத்து 178 ஆகக் காணப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 23 ஆயிரத்தால் அதிகரித்து 2 லட்சத்து 43 ஆயிரமாகியுள்ளது. (த-5)

### உடன்பாட்டின்

இதேவேளை திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 111 பேர் நேற்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினை தொடர்பில் ஆராயும் பொருட்டு, இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குக் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தலைமையிலான குழுவினர் சென்றிருந்தனர். இந்தக் குழுவினருக்கும், இந்திய மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவாருக்கும் இடையில் கடந்த புதன்கிழமை சந்திப்பு இடம்பெற்றது.

இணக்கப்பாடு

இந்தச் சந்திப்பில், இலங்கை -இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிப்பது என்று இரு தரப்பினரிடையேயும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்த இணக்கப்பாட்டுக்கு அமைய நேற்று முன்தினம் வியாழக்கிழமை, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 51 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதேபோல் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 52 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் நேற்று, யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 இந்திய மீனவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களை விடுதலை செய்வதற்குரிய ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து நீதிமன்றுக்கு வராமையால் 30 பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

விடுவிப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 111 இந்திய மீனவர்களும் திருகோணமலை நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

தமிழகம், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 111 மீனவர்களும் கடந்த டிசெம்பர் 11 ஆம் திகதி 15 படகுகளில் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களே நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுவரையில் 162 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### மீனவர்

இந்தியாவில் இடம்பெற்ற சந்திப்புக்களை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா ஒத்துழைப்பு

இலங்கையால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்கத் தயாரகத் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள் ளார். 'நாம் எடுக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. இந்திய மீனவர்களுக்கு மட்டுமன்றி இலங்கை மீனவர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேவையான நிதியை வழங்குவதாக இந் திய அரசு எமக்கு வாக்குறுதியளித்துள்ளது'- என்றார் அமைச்சர்.

இரு தரப்பு மீனவர் பிரச்சினையைத் தீர்க்கப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்படவுள்ளது. எதிர்காலத்தில் இரு நாடுகளினதும் அமைச்சர்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளனர். இந்திய இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இந்த வரைவில் கையொப்பமிடத் தீர்மானிக்கப்பட்டது' என்று அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (த-5)

### காணாமற்போன

வரை இடம்பெறும் அமர்வில் காணாமற்போனோரின் உறவுகள் அனைவரும் நேரடியாகச் சென்று சாட்சியமளிக்குமாறு மன்னார் பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

ஆணைக்குழுவுக்கு ஏற்கெனவே தமது விண்ணப்பங்களை அனுப்பாதவர்களும் இதில் சாட்சியமளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-400)

### ஆஸியில்

என்பவரே நேற்று முன்தினம் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கேதீஸ்வரன் குறித்த தினத்தன்று தொழிலுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தவேளை சில இளைஞர்கள் வீட்டின் கதவைத் தட்டியுள்ளனர். இதன் போது வீட்டு உரிமையாளர்கள் கதவைத் திறந்த போது உள் நுழைந்த அவர்கள் கேதீஸ்வரனைக் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. இறந்தவரின் சடலத்தை கிளிநொச்சியில் உள்ள அவரின் வதிவிடமான ஊற்றுப்புல கிராமத்துக்குச் கொண்டு வரும் முயற்சியில் உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட கேதீஸ்வரன் திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். மனைவியும் சிறு குழந்தைகளும் ஊற்றுப்புலத்தில் வசித்து வருகின்றனர். (த-400-426)

### பாவனையற்ற

களுடன் காணப்படுகின்றன. இந்த வீடுகளைக் கடந்த சில தினங்களாகப் புனரமைக்கும் நடவடிக்கையில் சீருடையினர் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வீடுகளில் காணப்படும் சேதங்களை சிமெந்து பூசி மெழுகி அவற்றைப் பாவனைக்குரியதாக மாற்றும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

பிரதான வீதிகளுடன் காணப்படுகின்றகைவிடப்பட்ட வீடுகளை வீதியிலிருந்து பார்த்தால் தெரியாதவாறு தகரங்களால் உயரமாக மறைப்புச் செய்யும் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சீருடையினரின் இந்தத் திடீர் நடவடிக்கை அந்தப் பகுதி மக்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைக் குறித்த வீடுகளில் குடியமர்த்தவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்ற போதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (த-5)

### அமெரிக்காவுடன்

இதுகுறித்து வினவியபோதே ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மனித உரிமைகள் விவகாரங்களில் நாம் வெளிப்படையாகவே இருக்கின்றோம். இது தொடர்பில் எவருட னும் பேச நாம் தயாராக உள்ளோம். மனித உரிமைகள் விவகாரங்களில் இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா ஆர்வமாக உள்ளமை எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட நாமும் தயாராக உள்ளோம்.

மனித உரிமைகள் தொடர்பில் நாம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு வருகின்றபோதும், இலங் கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யதார்த்தத்தை உணர்ந்து எம்முடன் இணைந்துசெயற்பட முன்வருகின்றவர்களுடன், இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம்" என்றும் அமைச்சர் தெரிவித்தார். (த-சி)

### மன்னார்

பகுதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி நேற்று 8 ஆவது தடவையாக மன்னார் நீதிவான், விசேட நிபுணர் குழுவினர், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையில் தோண்டப்பட்டது. இதன்போது முழுமையான எலும்புக்கூடு ஒன்றும், துண்டாக்கப்பட்ட மண்டையோட்டின் துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் புதைகுழியிலிருந்து நேற்று வரை 37 மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும், சில எலும்புக்கூடுகள் துண்டு துண்டாகவும் மீட்கப்பட்டுள்ளன என்று மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை புதைகுழியைத் தோண்டும் பணி இடம்பெற்றது. மீண்டும் இன்று காலையிலிருந்து குறித்த மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி இடம்பெறவுள்ளது. (த-சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் சென். பற்றிக்ஸ் வசம்

யாழ்ப்பாணம், ஜனவரி.18
அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுப் பிரிவுக்குரிய உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி பிரிவு III இல் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட மட்ட லீக் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்து பற்றிக்ஸ் இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகியது.

கடந்த 11 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் முதல் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வத்தளை சென். அன்ரனீஸ் கல்லூரியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு இரண்டாவது போட்டியில் களுத்துறை மகா வித்தியால யத்தை 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.



காலிறுதிப் போட்டியில் பிற்றிபன சென். மோரிஸ் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்று அரை யிறுதியில் ராஜகிரிய ஜனாதிபதி கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும் தோற்க டித்தது. இறுதிப் போட்டியில் திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்று சென். பற்றிக்ஸ் சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியில் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதையும், ஆட்டநாயகன் விருதையும் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த யேசுதாசன் ஜெயப்பிரகாஸ் அன்ரனி தாஸ், அன்ரனி ஜெனற் ஆகியோர் முறையே பெற்றுக் கொண்டனர். இவ்வணியை தேவநாயகம் பயிற்றுனராகவும் ஆசிரியர் பி.பெஞ்சலோ பொறுப்பாசிரி யராகவும் வழி நடத்தினர். (த)

" - "

திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக் கில் வென்று சென். பற்றிக்ஸ் சம்பியன் கிண் ணத்தை பெற்றுக்கொண்டது.

# வென்றது யுனிபைட்



யாழ்ப்பாணம், ஜன.18
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன் யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மடுப் பிரதேச விளையாட்டு போட்டிகள் பற்றிய கலந்துரையாடல்

மன்னார், ஜன.18
மடுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்து வது தொடர்பான கலந்துரையாடலும், போட்டிக்கான நேர ஒழுங்கு அட்டவணை தயா ரிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை மதியம் 2 மணிக்கு மடுப் பிரதேச செயலகக் கேட் போர் கூடத்தில் இடம்பெற வுள்ளது. விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் ஜெயறோமி அறிவித்துள்ளார்.

இதேவேளை மாந்தை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடலும், போட்டிக்கான நேர ஒழுங்கு அட்டவணை தயாரிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை மாந்தை பிரதேச செயலகத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (த-23)

# றோயல், மேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.18
சுன்னாகம் சூராவத்தை நியூ வாரியர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 5 பேர் பங்கு கொள்ளும் மின்னொளி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூவாரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும், அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 11:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

" - "

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# ஞானமுருகன்- பாடும்மீன் மின்னொளியில் மோதல்



யாழ்ப்பாணம், ஜனவரி.18
யாழ். உதைபந்தாட்ட லீககின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி யாட்டம் இன்று மின்னொளியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பொங்கல் தினத்தன்று நடைபெறவிருந்த இறுதியாட்டம் காலநிலை சீரின்மை காரணமாகப் பிற்போடப்பட்டு இன்று சனிக்கிழமை நடைபெறுகின்றது. (த-23)

# வேலணைப் பிரதேசத்தின் விளையாட்டு நிகழ்வுகள்

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி, ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி என்பன இன்றும் நாளையும் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானம், அம்பாள் விளையாட்டுக்கழக மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்து கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை இடம்பெ றவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி, எல்லே போட்டிகள் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன என்று விளையாட்டு உத்தியோகத்தர் யசிதரன் அறிவித்துள்ளார். (த-23)

# போக்குவரத்து சபை அணி வென்றது

யாழ்ப்பாணம், ஜன.18
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ.கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபை அணிக்கும் திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.18
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக ஏ அணியைஎதிர்த்துஅண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜனவரி.18
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் குழுப் போட்டிகள் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜன.18
நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான குழுநிலைப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானம், சிக்கியம்பள்ளம் மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் ஆண், பெண் இருபாலா ருக் குமான துடுப்பாட்டம், கரப் பந்தாட்டப் போட்டிகளும், நாளை ஞாயிற்றுக்கிழமை சிக்கிரியாம் பள்ளம் மைதானத்தில் ஆண்களுக் கான உதைபந்தாட்டப் போட்டியும், பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளது என விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் அறிவித்துள்ளார். (த-23)



" - "

நாளை ஞாயிற்றுக்கிழமையும் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானம், சிக்கியம்பள்ளம் மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

# கரைச்சிப் பிரதேச உதைபந்து

யாழ்ப்பாணம், ஜன. 18
கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான 2014 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்றும், நாளை யும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது என விளையாட்டு உத்தியோகத்தர்குமார் தெரிவித்துள்ளார். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 20/20 உலகக் கிண்ணத்துக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக 20/20 தொடருக்கான இங்கிலாந்தின் 30 பேர் கொண்ட தற்காலிக குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடருக்கான இங்கிலாந்தின் 15 பேர் கொண்ட குழாம் இந்த 30 பேர் கொண்ட குழாமிலிருந்து தெரிவு செய்யப்படும். அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் அழுத்தத்திற்குள்ளாகியுள்ள இங்கிலாந்தின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சனும் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது இங்கிலாந்து அணி எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளதாகக் கருதப்பட்ட நிலையிலேயே அவர் இக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த ஆஷஸ் தொடரில் இங் கிலாந்து அணி 0-5 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவியிருந்தது. இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி சார்பாக கெவின் பீற்றர் சனே அதிக ஓட்டங்களைக் குவித்த போதிலும் அவர் மீதான அழுத்தங்கள் அதிகரித்திருந்தன.

குறிப்பாக டெஸ்ட் அணியின் பயிற்றுவிப்பாளராகச் செயற்படும் அன்டி பிளவர், கெவின் பீற்றர்சனை இனிமேல் இங்கிலாந்து அணியில் சேர்ப்பதில்லை என முடிவெடுத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரி மாற்றங்கள் கொண்ட அணியின் பயிற்றுவிப்பாளரான ஆஷ்லி கில்ஸ் இந்த அணித் தெரிவு குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போது, கெவின் பீற்றர்சனை இந்த 30 பேர் கொண்ட குழாமில் சேர்க்காமல் விடுவது குறித்து யோசனைகள் எவையும் இருந்திருக்கவில்லை எனவும் கெவின் பீற்றர்சன் ஒரு மில்லியன் பௌண்ட்ஸ் சொத்து எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட குழாம்:

ஸ்ருவேர்ட் புரோட், மொயீன் அலி, ஜொனதன் பெயர்ஸ்ரோ, கரி பலன்ஸ், ரவி போப்பாரா, ஸ்கொட் போர்த்விக், ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், மைக்கல் காபெரி, ஜேட் டேர்ண்பக், ஸ் ரீபன் பின், ஹரி குர்ணி, அலெக்ஸ் ஹேல்ஸ், கிறிஸ் ஜோர்டான், கிறெய்க் கீஸ் வெற்றர், மைக்கல் லம்ப், ஒய்ன் மோர்கன், கிரஹாம் ஒனி யன்ஸ், ஸ் ரீபன் பரி, சமித் பட்டேல், கெவின் பீற்றர்சன், போய்ட் ராங்கின், ஜோ றூட், பென் ஸ்ரோக்ஸ், ஜேம்ஸ் றெய்லர், ஜேம்ஸ் ட்றெட்வெல், ஜேம்ஸ் வின்ஸ், கிறிஸ் வோக்ஸ், லூக்றைட்.

# மீண்டும் வருவேன்


தனது பந்துவீச்சுத் தொடர்பான பிரச்சினைகளிலிருந்து மீண்டு, மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றும் நம்பிக்கையுள்ளதாக இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீபன் பின் தெரிவித்துள்ளார்.

தன்னால் மாற்றங்களை விரைவில் ஏற்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்துக் குழாமில் தெரிவு செய்யப் பட்டிருந்த ஸ்ரீபன் பின், 05 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றாததோடு, முதலாவது ஒரு நாள் சர்வதே சப் போட்டியிலும் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்த நிலையில், அவரது பந்துவீச்சு நுட்பங்களில் மாற்றங்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்து அவர் இங்கிலாந்திற்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

அங்கு அவர் தனக்கான பயிற்சிகளில் ஈடுபடுவார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஸ்ரீபன் பின், இந்தத் தொடரில் மிகவும் கடினமாகப் பயிற்சிகளில் ஈடுபட்டதாகவும் ஏராளமான மணி நேரங்கள் பந்துவீச்சில் தனது நுட்பங்களைச்சரிப் படுத்த முயன்ற தாகவும் தெரிவித்தார்.

ஆஷஸ் தொடருக்காக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றபோது, அந்தத் தொடர் முழுவதிலும் பங்குபற்ற முடியும் என்ற நம்பிக்கையிலேயே சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இங்கிலாந்திற்குத் திரும்பி, ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாகவும் விரைவாக இந்த மாற்றங்களை ஏற்படுத்திய பின்னர், தன்னால் விரைவாக சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற முடியும் என எதிர்பார்ப்பதாகவும் ஸ்ரீபன் பின் தெரிவித்துள்ளார்.

பந்துவீச்சில் தனது நிலை குறித்து ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட கருத் துக்களை மறுப்பதாகத் தெரிவித்த ஸ்ரீபன் பின், தான் பந்துவீசுவதைப் பார்த்திராத பலரே தனது பந்துவீச்சு மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாகத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். (த)

# பிக் பாஷில் சச்சின்

ஆஸ்திரேலியாவில் நடக்கும் பிக் பாஷ் 20/20 தொடரில் சச்சின் பங்கேற்க போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர், மகத்தான சாத னையுடன் கடந்தாண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றார். இந்நிலையில் ஆஸ்திரேலி யாவில் நடக்கும் பிக் பாஷ் 20/20 தொடரில் பங்கேற்பதற்காக சிட்னி தண்டர்ஸ் அணி சச்சினை அணுகியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த இரண்டு தொடர்களில் பங்கேற்ற 15 போட்டிகளில், இரண்டில் மட்டுமே சிட்னி தண்டர்ஸ் அணி வெற்றி பெற்றது. ஒருமுறை கூட முதல் சுற்றை தாண்டவில்லை.

இதனால் நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட் சபையின் சார்பில், சச்சினை நான்கு வாரங்களுக்கு மட்டும் ஒப்பந்தம் செய்து தருமாறு மாநில அரசை அணுகியுள்ளனர், ஆனால் இதை சச்சின் ஏற்றுக்கொண்டாரா இல்லையா என்பது குறித்து தகவல்கள் ஏதும் தெரியவரவில்லை.

இந்த அணியில் ஆஸ்திரேலியாவின் தொடக்க வீரர் டேவிட் வோர்னர், இலங்கையின் டில்ஷான், மைக்கல் ஹசி மற்றும் மைக்கல் கிளார்க் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (த)

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவராக ஸாகா அஷ்ரப்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலை வராக ஸாகா அஷ்ரப் மீண்டும் பதவியேற்க வுள்ளார். அவரைத் தலைவராக நியமிக்கும் ஒப்புதலை பாகிஸ்தான் நீதிமன்றம் விடுத்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலை வராக பாகிஸ்தான் பிரதமரால் நியமிக்கப்பட்ட ஸாகா அஷ்ரப், அதன் பின்னர் கிரிக்கெட் சபை தேர்தலில் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவராக மாறினார்.

எனினும் அந்தத் தேர்தல் தொடர்பாக குழப் பங்கள் காணப்பட்டன. அந்தத் தேர்தலில் ஸாகா அஷ்ரபுக்கு எதிராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த நதீம் சடில் இஸ்லாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதனால் ஸாகா அஷ்ரப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து இடைக்காலத் தடைக்குள்ளாக்கப்பட்டார். இவ்வழக் கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள தன் படி,



அதில்ஸாகா அஷ்ரப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராகப் பதவியேற்க முடியும் என அறிவித்துள்ளது.

இதனையடுத்து ஸாகா அஷ்ரப் மீண்டும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக விரைவில் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்ற ஸாகா அஷ்ரப், 'இதற்கு முன்னர் நீதிமன்றத் தீர்ப்பு தனக்கு எதிராகக் கிடைத்த போதும் நீதிமன்றத்தை மதித்ததாகவும் தற் போதும் அதன் தீர்ப்பை மதிப்பதாகவும்' தெரிவித்துள்ளார். (த)

# இந்தியன் பிறீமியர் லீக்கில் றயன் ஹரிஸ் இல்லை


இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் றயன் ஹரிஸ் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்படுகிறது. இவ்வாண்டுக்கான ஏலத்தில் பங்குபற்றுவதில்லை என அவர் முடிவெடுத்ததன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் முக்கிய பந்துவீச்சாளரான றயன் ஹரிஸ், நடந்து முடிந்த ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி 5-0 என்ற கணக்கில் வெற்றிபெறுவதற்கு முக்கிய பங்கை ஆற்றியிருந்தார். இத்தொடரில் அவர் 22 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். இத்தொடரின் போது அவரது முழங்காலில் வலியை உணர்ந்த அவர், தொடர் முழு வதும் விளையாடியிருந்ததோடு, இதற்கு அடுத்ததாகவுள்ள தென்னாபிரிக்கத் தொடரிலும் பங்குபற்றத் தீர்மானித்துள்ளதோடு, அதன் பின்னர் சத்திர சிகிச்சைக் குள்ளாகவுள்ள தாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஏப்ரல், மே மாதங்களில் இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றப் போவதில்லை என றயன் ஹரிஸ் அறிவித்துள்ளார்.

பெப்ரவரி 14ஆம், 15ஆம் திகதிகளில் இந்தியன் பிறீமியர் லீக் ஏலம் இடம்பெற வுள்ள நிலையில், அந்த ஏலத்தில் பங்கு பற்ற விரும்பும் வீரர்கள் தங்களது பெயரை ஜனவரி 25ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப் பிக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. இந்த ஏலத்தில் பங்குபற்றாமல் விடவே றயன் ஹரிஸ் முடிவெடுத்துள்ளார்.

சத்திர சிகிச்சையை மேற்கொண்டு தனது டெஸ்ட் எதிர்காலத்தை நீட்டிக் கொள்ள விரும்புவதாக றயன் ஹரிஸ் தெரிவித்துள்ளார். (த)



# டேவிட் மோயஸுக்கு ஆதரவு

அழுத்தத்திற்குள்ளாகியுள்ள மன்செஸ்ரர் யுனைட்டட் கழகத்தின் பயிற்றுவிப்பாளர் டேவிட் மோயஸுக்கு அந்த அணியின் வீரர் றொபின் வான் பேர்சி தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

அவரால் யுனைட்டட் அணியைச் சிறப்பான நிலைக்குக் கொண்டு வரமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்செஸ்ரர் யுனைட்டட் அணியின் பயிற்றுவிப்பாளர் சேர் அலெக்ஸ் பேர்ஹுசன் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவ்வணியின் பயிற்றுவிப் பாளராகப் பதவியேற்ற டேவிட் மோயஸ், அண்மைக்காலத்தில் அழுத்தத்திற்குள்ளாகியுள்ளார்.

குறிப்பாக, அவ்வணி இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டி அட்டவணையில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்ப டுத்தாது, முதலிடத்திலுள்ள ஆர்சனலை விட 11 புள்ளிகள் குறைவாக 7ஆவது இடத்தில் உள்ளது. அதேபோல், அவ்வணி இறுதியாக விளையாடிய 12 போட்டிகளில் 5 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளது.

இதன் காரணமாக டேவிட் மோயஸ் பதவியிலிருந்து விலக வேண்டுமென்ற கோரிக்கைகள் ஆங்காங்கே இரசிகர்களாலும், விமர்சகர்களாலும் எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள றொபின் வான் பேர்சி, எல்லோரையும்போன்றே டேவிட் மோயஸுக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். குறிப்பாக, மன் செஸ்ரர் யுனைட்டட் போன்ற பெரிய கழகத்துக்காக வரும் போது போதுமான



காலம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பருவகாலத்தில் மன்செஸ்ரர் யுனைட்டட் அணி ஏராளமான புள்ளிகளை இழந்துள்ளதாகத் தெரிவித்த வான் பேர்சி, இதனை மாற்றுவதற்கு தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி வென்றது ஆஸி.

இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்கு மிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2 ஆவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற் றுள்ளது.

பிறிஸ்பேணில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கி லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி 50 பந்துப் பரிமாற் றங்களில் 8 இலக்குகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்குக்காக 57 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 4 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களுடனும், 5 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களுடனும் காணப்பட்டது. ஆனால் ஒய்ன் மோர்கன், ஜொஸ் பட்லர் இருவரும் 117 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கி லாந்து அணிக்கு முன்னிலையை வழங்கினர். துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஒய்ன் மோர்கன் 99 பந்துகளில் 106 ஓட்டங்களையும், இயன் பெல் 84 பந்துகளில் 68 ஓட்டங்களையும், ஜொஸ் பட்லர் 36 பந்துகளில் 49 ஓட்டங்களையும், ரவி போப் பாரா 19 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளென் மக்ஸ்வெல், ஜேம்ஸ் பக்னர், நேதன் கோர்ட்டர் நீல் மூவரும் தலா 2 இலக்குகளையும், மிட்சல் ஜோன்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

301 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 49.3 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்கு களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. 6 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, 5 இலக்குகளை இழந்து 120 ஓட் டங்களுடனும், 9இலக்குகளை இழந்து 244 ஓட்டங்களுடனும் காணப்பட்டது. ஆனால் இறுதி இலக்குகாக 5.3பந்துப் பரிமாற்றங்களில் 57 ஓட்டங்கள் பகிரப்பட்டு வெற்றி பெறப்பட்டிருந்தது. துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பக்னர் 47 பந்துகளில் ஆட்ட மிழக்காமல் 69 ஓட் டங்களையும், ஷோன் மார்ஷ் 69 பந்துகளில் 55 ஓட்டங்களையும், கிளென் மக்ஸ்வெல் 39 பந்துகளில் 54 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 35 பந்து களில் 26 ஓட்டங்க ளையும், ஜோர்ஜ் பெய்லி 28 பந்துக ளில் 24 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கி லாந்து அணி சார் பாக கிறிஸ் ஜோர்டான், ரிம் பிரெஸ்னன், ஜோறூட் மூவரும் தலா 2 இலக்குகளை யும், போய்ட் றாங்கின், பென் ஸ்ரோக்ஸ், ரவி போப்பாரா மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயக னாக ஜேம்ஸ் பக்னர் தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில், 2 போட் டிகளின் நிறைவில் ஆஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக் கின்றமை குறிப் பிடத் தக்கது (த - 400)


LCD T/V Stand ~~16000~~ 9900/= Kitchen Rack ~~2500~~ 1500
Steel Cupboard ~~14500~~ 9000/= Ironboard ~~1500~~ 1000/=
2 DAYS ONLY
MANGALA
Roling Chair ~~6000~~ 3000/= Matress ~~4000~~ 2000/=
கைவிருப்ப உள்ளவரையே ஏமாற்றாத தலிநுங்கள்
காலை நீதேப்பேத்தி கொள்ளுங்கள்
துரையப்பா விளையாட்டரங்கு யாழ்ப்பாணம்.
STALL - 221 T.P : 021 - 222 8367, 077 728 6069



UK Student visa with work Permission
Spot Admission 2014
TIME 19th (Tomorrow) Jan 2014 : 09.00AM-02.00PM
CONDUCTOR Director of Exponet Overseas Consultants
VENUE Jaffna Branch (Exponet)
February / March இற்கான அனுமதிகள்
யாழ் மாணவர்களே! உங்களுக்கான இறுதி சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
நாளை எமது யாழ் அலுவலகத்தில் நடைபெறும் Spot Admission இல் கலந்துகொண்டு February/March இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்
2013 இல் O/L, A/L எழுதிய மாணவர்களும் உங்கள London உயர்கல்விக்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்
Colleges
• Yearly Payment £ 3500
• IELTS Overall : 4.5 or B1
Universities
• Yearly Payment £ 3950 - £ 6450
• IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0
UK Student Visa
இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெறலாம்
EXPONET Overseas Consultants
#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk
#197, Arasady Road, Jaffna. 021 75383395 | 021 2227230 Web: www.expogroup.lk



கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
கட்டார் நாட்டில் உள்ள பாடசாலை ஒன்றில் Helper (உதவியாளர்) பணியாற்ற ஆண்கள் 10 பேர் உடன் தேவை. அதிஉயர் சம்பளம், சாப்பாடு, தங்குமிடம் இலவசம். வயது 18-35 வரை.
தொடர்புகளுக்கு: Lanka Voice
075 065 0084 (43600) (7.6.3)




மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
மலேசியா நாட்டில் உள்ள தமிழ் பேசும் பாது காப்பான செல்வந்த வீடுகளில் அதிஉயர் சம்பளத்துடன் கடமையாற்ற வீட்டுப்பணிப் பெண் தேவை. வயது 22-35 (Work permit (Salary 36000-42000வரை) பயணம் முற்றிலும் இலவசம். ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: Lanka Voice
075 065 0084 (43599) (7.6.3)



VACANCY
BCHS
WALK - IN - INTERVIEW
Our Institute is looking for self-motivated, ambitious and dynamics individuals to join our team.
1. English Lecturer (Female) - Full Time
2. Assistant English Lecturer (Female) - Full Time
Date : Open
Time: 10.00am between 4.00pm
For Further Details please contact,
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
Tel : 021-2224550 or 0777730074 or 0714299935


# இலங்கை வலுவான நிலையில்



பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவதும் இறுதி யுமான டெஸ்ட் போட்டியில் 9 இலக்குகளை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டுள்ளது இலங்கை அணி.

நேற்று முன்தினம் டுபாயில் ஆரம்பமான இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தினம் 5 இலக்கு களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றிருந் தது இலங்கை அணி. மத்தியூஸ் 24 ஓட்டங் களுடனும் பிரசன்ன ஜெயவர்த்தன 28 ஓட்டங்களுடன்ஆட்டமிழக்காமல் களத்திலிருந் தனர் .நேற்றைய தினம் இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகிச் சிறிது நேரத்தில் 35 ஓட்டங்களுடன் ஜெயவர்த்தன ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களம் புகுந்த பெரேரா மத்தியூஸ் ஜோடி நிதா னமாக துடுப்பெடுத் தாடி அணியை கௌர வமான நிலைக்கு கொண்டு சென்றது இவர்களின் துணையுடன் 9 இலக்குகளை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டத்தை இடைநிறுத்தியது இலங்கை அணி. அவ்வணி சார்பாக மத்தியூஸ் 91 ஓட்டங்களையும் பெரேரா - 95 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்- பாகிஸ்தான் பந்து வீச்சில் யுனைட்கான் முக மட் தல்கா ஆகியோர் தலா 3 இலக்குகளையும் சயிட் அஜ்மல் 2 இலக்குகளையும் ரகுமான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர் தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலக்குகள் இழப்பின்றி 19 ஓட்டங்களைப் பெற்றுள்ளது இன்று போட்டியின் 3 ஆவது நாளாகும்.

இலங்கை சார்பில் டில்ருவன் பெரேரா 95 ஓட் டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் 91 ஓட் டங்களையும் குமார் சங்ககார 52 ஓட்டங்களை யும் பெற்றுக்கொடுத்துள்ளனர். (த-400)


ஆசிரியர்கள் தேவை
நூலாக வீட்டில் வைத்து தரம் 1,2,3,4,5 மாணவர் களுக்கு கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
(இடம் யாழ் நகரம்) 077 5040714 (43717)



கோப்பாயில் வீடு விற்பனைக்கு
அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் முன்று பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0779123826



உடன் தேவை
தனியார் கல்வி நிலையத்துக்கு அலுவலக உதவியாளர் (Clerk) பெண்கள் தேவை.
★ யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள்
✱ கணினி Tamil, English Typping தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0774696695



Group Classes
தரம் 9, 10, 11 (O/L)
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
ஆரம்பம் 20.01.2014
திங்கள் பி.ப. 3.00 மணி
பிரபல பாடசாலை ஆசிரியர்கள்.
ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும்.
முன்னுரிமை அடிப்படையில் அனுமதி.
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
இரு இடங்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.
021 222 7442, 077 036 6123 (42432) (7.6.3)



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
A1 B1
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
இலவச ஆலோசனைகளுக்கு 0777240707
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 0212224403 | நெல்லியடி 0212262470 | சாவகச்சேரி 0212270775 | சுன்னாகம் 0212241970



டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நட்சத்திர Hotel ஒன்றில் உடனடி வேலை வாய்ப்பு
Waiter 20 பேர் உடன் தேவை
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை/அனுபவம் இல்லாதவர் களுக்கு 10 நாள்கள் யாழ்ப்பாணம் முன்னணி நட்சத்திர ஹோட்டலில் பயிற்சி. மற்றும் சகல Hotel துறைசார்ந்த/அனுபவம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(டுபாய் Visit விசா/டுபாய் Business விசா/டுபாய் Family விசா) தேவையானவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: LANKA VOICE - 075 065 0084



NAC-மாணிப்பாய் கணக்கீடு
A/L-2014
பிரிவு-I
8 a.m-10 a.m
பிரிவு-II
6 p.m-7.30 p.m (42392)(4.3.6)
திரு.வின்சன்
(B.BA Dip in Edu).



பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதியான மாணவர்களுக்கு...!
Develop your Career Style with ESOFT
AutoCAD
2D Duration : 20 hours
3D Duration : 20 hours
AUTOCAD 2010
Programming Languages
C C++ C#
Java PHP
International Diploma in English
50% DISCOUNT for All University Students
NEW BATCHES 9:00am 20th Jan 2014 25th Jan 2014
SMS <Your Name> Space <Course> to 077 990 56 11
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142
HOTLINE : 077 309 9 308


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்றுக் கோலாகலமாக ஆரம்பம்








யாழ்ப்பாணம். ஜன.18

ஐந்தாவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக் கண்காட்சி நேற்று வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.


யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் மங்கல விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதையடுத்து விருந்தினர்களது உரைகள் இடம்பெற்றன. அதன் பின்னர் பிரதம விருந்தினர்கள் மங்கல இசையுடன் ஊர்வலமாக யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு அழைத்து வரப்பட்டனர்.


யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிக் கூடத்தைப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் ஆகியோர் நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.


அதன்பின்னர் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடங்களைப் பிரதம விருந்தினர்கள் பார்வையிட்டனர். ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். வர்த்தகத் தொழில்துறை மன்றத் தலைவர் எஸ். பூரணச்சந்திரன். இலங்கை கண்காட்சிப் பணியகத்தின் பொதுமுகாமையாளர் ஆஸிம் முக்தார் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-14)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துணுக்காய் வலயத்தில் சிறுவர்நேயப் பாடசாலைகள்

## வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

துணுக்காய் கல்வி வலயத்தில் சிறுவர் நேயப் பாடசாலைகள் நடைமுறைக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதிலூட்ஸ்மாலினி வெனிற்றன் தெரிவித்தார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளில் 54 பாடசாலைகள் சிறுவர் நேயப் பாடசாலைகளாக உள்ளன. இந்தப் பாடசாலைகளில் பிறப்புச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

குறித்த வலயத்தில் 8483 மாணவர்களுக்கு 648 ஆசிரியர் பணியில் உள்ளனர். 34 ஆசிரியர்கள் வருடாந்த இடமாற்றம்பெற்றுச்சென்றுள்ளனர். இன்றும் 34 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையற்றிய 78 பேர் கலாசாலைக்குச் செல்லவுள்ளனர். இந்த நிலையில் துணுக்காய் கல்வி வலயம் ஆசிரியர் நெருக்கடியை எதிர்கொண்'டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ-18)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதாப் பெருவிழா



யாழ்ப்பாணம். ஜன.17

யாழ்.நகர் சத்திரச்சந்தி ஞானவைரவர் ஆலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை தமிழர் கலாசாரத்தைக் காட்டும் பட்டிப் பொங்கல் விழா, கோமாதா திருவிழா சிறப்பாக இடம் பெற்றது. பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினர்களாக மாகாணசபை உறுப்பினர் என்.கஜதீபன், சின்மயாமிஷன் சுவாமிகள் ஜாக்ரத் சைதன்யா, பிரம்மஸ்ரீ வாசுதேவக் குருக்கள், பேராசிரியர் பா.கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் மா.வேதநாதன், லயன்ஸ் கழக ஆளுநர் றஞ்சித் பெர்னாண்டோ, சிவ.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

முன்னதாக கோபூசை இடம்பெற்று பசுக்கள் ஊர்வலமாக மின்சார நிலைய வீதியூடாக பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஞான வைரவர் கோயிலைச் சென்றடைந்தது. அங்கு இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக மீண்டும் சத்திரச்சந்தி ஞானவைரவர் கோயிலைச் சென்றடைந்தது.

வீதிகள் தோறும் வர்த்தக நிலையங்களில் பூரண கும்பம் வைக்கப்பட்டு பூசைகள் இடம் பெற்றதுடன் பசுக்களுக்கு தானிய உணவுகளும் வழங்கப்பட்டன. பட்டிப் பொங்கல், கோமாதா கீதங்கள், மாணவிகளின் பண்ணிசை என்பன இடம்பெற்றன. (ந-7)



காரைநகர் அபிவிருத்திச் சபை நடத்திய தைப் பொங்கல் விழாவில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் பிரதம விருந்தினராகவும், காரைநகர் அரசினர் வைத்திசாலை வைத்திய அதிகாரி கே.இந்திரமோகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார். (வ-250)



'கனடா வாழ வைப்போம்' அமைப்பினால் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் பன்னிரண்டு குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பணம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வீ.கனகசுந்தர சுவாமி கலந்து சிறப்பித்திதார். (ஒ)




## நினைவு தின கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.17

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.சி.சுப்பிரமணியத்தின் 25ஆவது நினைவு தினக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சன்மார்க்க சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரைகள் இடம்பெறவுள்ளன.

(ஒ-14)

## கும்பாபிஷேக விழா

சாவகச்சேரி, ஜன. 18

சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோயிலில் புதிதாக அமையப்பெற்ற சண்டேஸ்வரப் பெருமானின் மகா கும்பாபிஷேக நிகழ்வையொட்டி நாளை ஞாயிறு பிரதிஷ்டை நடைபெற்று, அன்று மாலை எண்ணெய்க் காப்பும் மறுநாள் திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகமும் ஆலய பிரதமகுரு கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நம்பிக்கையான பங்காளியாக தொடர்வதையே விரும்புகின்றது இந்தியா

## இந்தியத் துணைத் தூதர் கூறுகின்றார்

கடந்த காலங்களைப் போன்று இந்தியா இலங்கையின் நம்பிக்கைக்குரிய பங்காளியாகத் தொடருவதையே விரும்புகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரான வி.மகாலிங்கம்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சர்வதேச வர்த்தகச் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

ஐந்தாவது ஆண்டாகத் தொடர்ந்து இங்கு இடம்பெறும் சர்வதேச வர்த்தகச் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இதில் இந்தியாவும் ஒரு பங்காளியான நாடு என்ற வகையில் ஐந்தாவது தடவையும் பங்குகொள்கின்றமை பெருமைக்குரியது. மேலும் எதிர்காலத்தில் இலங்கையுடனான இந்தியாவின் வர்த்தக பொருளாதார உறவுகளுக்கு இதையொரு சிறந்த அறிகுறியாகவே நான் கருதுகின்றேன். இந்தியாவிலிருந்து பல நிறுவனங்கள் இங்கு வந்து இந்த

**இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நேரடி விமானப் போக்குவரத்து இடம்பெற வேண்டும். இதனை விட தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவையிரண்டும் விரைவில் நடைபெற வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.**

வர்த்தகச் சந்தையில் பங்குகொள்கின்றமை இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும் என்பதையும் நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

தற்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சிறப்பான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் நிலவுகின்றன. மேலும் இரு நாடுகளுக்கும் இடையில் 2000ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் காரணமாக 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் வர்த்தக நடவடிக்கைகள் எட்டு மடங்காக அதிகரித்துக் காணப்பட்டன.

இந்தக் காலப் பகுதியில் இலங்கையுடனான இந்தியாவின் இறக்குமதி வர்த்தகம் 45 வீதம் அதிகரித்து 720 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் எட்டியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் காரணமாக இரண்டு நாடுகளுமே நன்மையடையவுள்ளன என்பதில் சந்தேகமே இல்லை.

இந்தியாவின் முதன்மை வாய்ந்த நிறுவனங்கள் இலங்கையில் கட்டமைப்பு, உற்பத்தி, சேவைகள் மற்றும் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் இந்தியாவின் முதலீடுகள் அபரிமிதமான வளர்ச்சியை எட்டியுள்ளன. மேலும் இலங்கையிலுள்ள நிறுவனங்களும் இந்தியச் சந்தைகளில் நம்பிக்கையுடன் கால்பதித்து வருகின்றன.

அதுமட்டுமல்லாது சுற்றுலாத் துறை, கட்டமைப்பு, கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயம் ஆகிய துறைகளிலும் இந்த இரு நாடுகளும் இணைந்து செயலாற்றி வருகின்றன.

வாராந்தம் 120 விமான சேவைகள் இலங்கையின் தலைநகரான கொழும்பிலிருந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் இடம் பெற்று வருகின்றமை ஒரு சிறப்பு அம்சமாகும். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவிலிருந்து வருபவர்களாகவே காணப்படுகின்றனர்.

கொழும்புத் துறைமுகத்திலும் இந்தியாவிலிருந்து எடுத்து வரப்படும் கொள்கலன்கள் அதிகளவில் கையாளப்பட்டு வருகின்றன. இது இந்தத் துறைமுகத்தில் கையாளப்படும் மொத்த கொள்கலன்களின் அளவில் முப்பது வீதமானவை என்று கூறலாம்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தியா இலங்கையில் பல்வேறு வகையிலும் சிறப்பான பங்களிப்பை நல்கி வருகின்றது. இதில் வீட்டுத் திட்டங்கள், கல்வி, சுகாதாரம் என்பன உள்ளடக்கப்படுகின்றன. இந்தியாவின் நிதியுதவியுடன் பல பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன, மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன, மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன. மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைவிட கைத்தொழில்களைப் பொறுத்தவரை அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை புனரமைக்கப்பட்டு புதுத்தோற்றம் பெறுவதற்கான உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது. காங்கேசன்துறை துறைமுகமும் இயங்குவதற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.



**இந்தியாவின் முதன்மை வாய்ந்த நிறுவனங்கள் இலங்கையில் கட்டமைப்பு, உற்பத்தி, சேவைகள் மற்றும் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் இந்தியாவின் முதலீடுகள் அபரிமிதமான வளர்ச்சியை எட்டியுள்ளன.**

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் 10,250 வீடுகள் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டன. மேலும் ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான ரயில்சேவை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பித்துள்ளது. இது பளை வரையும் விரைவில் ஏற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் யாழ்ப்பாணம் வரை ரயில் சேவை ஏற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நேரடி விமானப் போக்குவரத்து இடம்பெற வேண்டும். இதனை விட தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவையிரண்டும் விரைவில் நடைபெற வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். இதனால் இலங்கையின் வடபகுதி பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைவதற்கான ஏதுநிலை தோன்றும்.

இறுதியாக இந்தச் சந்தையை ஏற்பாடு செய்தவர்களுக்கும், இதில் பங்கு கொண்டவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்குத் தொடர்ந்தும் அவர்கள் ஆதரவு வழங்குவதால் அந்தப் பிரதேசம் உலகளவில் வர்த்தகத்துறையில் சிறந்து விளங்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன். (க-14)

## உள்ளூர் உற்பத்திக்கான தனியார் காட்சிக் கூடங்கள்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணத்தின் உள்ளூர் உற்பத்திகளை பிரதிநிதித்துவப் படுத்தும் நோக்குடன் தனியான காட்சிக் கூடங்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ளன. பனை சார் உற்பத்திப் பொருள்கள் உட்பட உள்ளூர் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகள் ஏனைய உணவுப் பொருள்கள் என்பன காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. 30இற்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்களில் அதிகமாக பனை சார் உற்பத்திப் பொருள்களின் காட்சிக் கூடங்கள் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளன். (வ-14)




**விழிப்புணர்வு நாடகம்** | யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வரும் யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியில் பனை வளத்தை அழிப்பதால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் காட்சிப் படுத்தப்பட்டது. (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org